ஊழியன்

5

மே, 1934

72
2211, N23T8
N34.5-5
208535

தமிழரசு
வைகாசி

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு	ரூ 1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0
	மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது	0—2—0

மாதிரி சஞ்சிகை இனம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

விளம்பர விகிதம்

உட்பக்கம்	ஒன்றுக்கு	1-மாதத்திற்கு	ரூ. 15—0—0
,,	அரைப் பக்கத்திற்கு	,,	8—0—0
,,	கால் பக்கத்திற்கு	,,	5—0—0
கவர்	3-வது பக்கத்திற்கு	,,	20—0—0
,,	4 ,,	,,	25—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
'தமிழரசு' ஆபீஸ்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAY 1934
MADRAS

சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒ

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றாம் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30 }

இப்படிக்கு.
அண்ணையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.



அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடை

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக!

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்த அரைடஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆகலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி

நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M B. &. C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

‘தமிழரசு’

பைண்டு வால்யம்

‘தமிழர’சின் 4-வது மலர் அதாவது 1933-வது வருஷத்திய இதழ்கள் பன்னிரண்டையும் பல அன்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரே வால்யமாகப் பைண்டு செய்து வருகிறோம். இந்த வால்யத்தில் சுமார் 300 அரிய கட்டுரைகளும், 500 அழகிய படங்களும் அடங்கியிருக்கின்றன.

பத்திரிகை உலகில் பண்பட்ட அறிஞர்களால் எழுதப்பட்ட அறிவை வளர்க்கும் வியாசங்கள், கற்பனைச் சிறு கதைகள், உண்மையான சரிதைகள், விடா நகைப்பை விளைவிக்கும் விகடங்கள், சமூக பொருளாதார அரசியல் சம்பந்தமான கட்டுரைகள், வைத்தியக் குறிப்புக்கள் முதலியன நிறைந்திருக்கின்றன. இந்தப் பைண்டு வால்யம் இல்லாத புத்தகசாலை நிறைவுடையதாகாது.

4-வது மலர் வால்யம் விலை ரூ. 1—4—0

தபாற் செலவு வேறு

சொற்ப வால்யங்களே தயார் செய்வதால் முன்னதாகவே தங்கள் ஆர்டரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

விலாசம்:

‘தமிழரசு’ புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

‘ எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...’

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	பவ௵ வைகாசி௴ 1௳	இதழ்
5	1934௵ மே௴ 14௳	5

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 320
கடனைக் கொடுத்து விட்டாள் 322
வலிய அணைத்த சுகம் ... 326
ஜீவகாருண்யம் ... 332
வெள்ளிமலை வரலாறு ... 333
வாய்ச்சொல் அல்லது பேச்சு 335
சந்தேகப் பேய் ... 339
பிளட்பிரஷர் ... 346
முத்தம் தாராய் மோகனமே! 348
தமிழ்த்தாய் துயரம் ... 351
அம்புஜம் ... 354
தொந்திச் செட்டியாரின் திருவிளையாடல்கள் ... 360
குச்சுக்காரி ... 363
தட்டுவது யார்? ... 371
பழிக்குப் பழி ... 375
பொன் மொழிகள் ... 382
பாஸ்கரன் பேட்டி ... 383
தரித்திரனுக்குக் கிட்டிய பாக்கியம் ... 386
‘யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்’ ... 390

குறிப்பு:—‘தமிழர’சில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.



இந்திய சட்ட சபை

இந்திய சட்ட சபையைச் சென்ற வருடத்திலேயே கலைத்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு ஓர் ஆண்டு வளர்க்கப்பட்டது. இந்த வருடத்தில் அதைக் கலைப்பதா வேண்டாமா என்ற விஷயம் பெரிய திண்டாட்டமாய் இருந்தது. முடிவில் தற்போதுள்ள சபையைக் கலைத்து விட்டுப் பொதுத்தேர்தல் நடத்துவது என்ற ஏற்பாட்டிற்கு அரசாங்கத்தார் வந்துள்ளனர். அரசியல் சீர்திருத்தம் எப்போது, எப்படி வரும் என்று எவருக்கும் தெரியாத இந் நிலைமையில் பழைய சட்ட சபையைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தல் நடத்துவதே முறையாகும். இக்காரியத்தில் முறையாகவும் வீரமாகவும் நடந்து கொண்ட இராஜப் பிரதிநிதி லார்ட் வெல்லிங்டனை நாம் பாராட்டுகிறோம்.

ஸநாதனிகளின் கொடுஞ் செயல்

சென்ற எப்ரல் மாதம் 26-ஆம் தேதி பக்ஸாருக் கருகில் ஜாஸிடி என்னும் இடத்திற்கு மகாத்மா காந்தியடிகள் சென்றபோது ஸநாதனிகள் பலாத்காரத்தில் இறங்கியது கேட்டு இந்திய மக்கள் திடுக்கிட்டிருப்பார்களென்பதில் ஐயமில்லை. ஸநாதனிகள் என்னும் முரடர்கள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டும் கருப்புக் கொடிகளை வீசிக் கொண்டும் காந்தியடிகளின் மோட்டார்காரைச் சூழ்ந்து கொண்டது மிகவும் வெறுக்கத் தக்க செயலாகும். அவர்கள் காரின் மேல் மூடியைத் தடிகளால் தாக்கினார்களாம். பின் பக்கத்துக் கண்ணாடியைச் சுக்கல் சுக்கலாக உடைத்து விட்டார்களாம். மகாத்மா நல்ல காலமாகச் சிறிதும் காயமின்றித் தப்பிப் பிழைத்தனர். ஸநாதனிகளின் தடிச் செயலால் சுமார் இருபத்தைந்து பேர்களுக்குமேல் காயமடைந்தனர். காந்தியடிகள் இந்த அட்டூழியங்களைக் கண்டு கொஞ்சமும் அஞ்சவில்லை; ஆத்திரப்படவுமில்லை. புன்முறுவலுடன் ஸநாதனிகளைக் கண்டு கைகூப்பி வணங்கினார். தமது திட்டப்படி அன்று கூடிய ஒரு கூட்டத்தில் பேசும்போது ஸநாதனிகளுக்கு ஆணித்தரமான பதிலளித்து நல்லுபதேசமும் செய்தார். ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றுகிறோமென்று பறை சாற்றிக்கொண்டு திரியும் ஸநாதனிகளின் மேற்கண்ட செயல்கள் மிகவும் காலித்தனமானவை; மானக்கேடானவை.

இனியாவது ஸநாதனிகளுக்கு அடிகளின் அறவுரை அறிவுச்சுடர் கொளுத்துமாக.

மணி மறைந்தது

நமது தமிழ் நாட்டில் சங்கீத உலகில் திலகமாய் விளங்கிய நயினாப்பிள்ளை என்னும் சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் தமது பிறப்பிடமான காஞ்சீபுரத்தில் இம்மாதம் (மேமாதம்) 3-ஆம் தேதி காலமானார் என்ற செய்திகேட்டு மனங் கலங்கினோம். திரு. பிள்ளை அவர்கள் பரம்பரையாகவே சங்கீதத் துறையில் புகழ் வாய்ந்த குடும்பத்தில் பிறந்து அக்கலையின் அபிவிருத்திக்காகவே அல்லும் பகலும் உழைத்து அதில் வல்லவராய்த் திகழ்ந்தார். கீர்த்தனங்களை அழகாகவும் கச்சிதமாகவும் பாடுவதில் அவருக்குச் சமானமானவர் இல்லை என்றே சொல்ல வேண்டும். பழக்கத்தில் இல்லாத பல தியாகய்ய கீர்த்தனங்களை அவர் வெளிப்படுத்தினார். பயனற்ற—பொருத்தமில்லாத பாடல்களை ரிக்கார்டு செய்யும் கிராமபோன் கம்பெனியார்கள் சங்கீத வித்வானாகிய இவரது பாடல்களை ரிக்கார்டு செய்யாதுபோனது பெரிய நஷ்டமாகும். இவரது பாடல்கள் ரிக்கார்டு செய்யப்பட்டிருந்தால் அவைகள் தமிழரது சங்கீத ஞானத்திற்கு அத்தாட்சிகளாக இருக்கும். அந்தப் பாக்கியமும் இல்லாமல் போனது நமது அதிர்ஷ்டக் குறைவேயாகும். இனி, திரு. நயினாப்பிள்ளையின் பெயர் என்றும் நின்று நிலவும்படி பொது மக்களும், அவரது மாணவர்களும், சங்கீத வித்வான்களும், சங்கீத அபிமானிகளும் எதேனும் ஒரு நல்ல காரியம் செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆன்மா சாந்தி யடைக!

கிருஷ்ண லீலை

தற்கால உலகில் மக்களுக்குப் புதிய உணர்ச்சியையும் ஊக்கத்தையும் அளிப்பவற்றுள் படக்காட்சியு மொன்றாகும். மௌனப் படமாக இருந்து, பேசும் படங்கள் பல பாஷைகளிலும் வந்தவுடன் தற்போது நமது தமிழ்மொழியிலும் பேசும் படங்கள் வரத் தொடங்கி யுள்ளன. இது வரையில் பத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் பேசும் படங்கள் வெளிவந்திருந்தாலும் ஒன்றாவது உயர்தரத்தில் வைத்து எண்ணத்தக்கவாறு இல்லை. இதுபோது மிகவும் புராதனமான 'கிருஷ்ண லீலை' என்ற நாடகம் பேசும்படமாக சேலம், திரு. வேலாயுதம் அவர்களுடைய அரிய முயற்சியால் வெளிவந்திருக்கிறது. இதைப்பற்றிய நமது அபிப்பிராயத்தை அடுத்த இதழில் எழுதுவோம்.

கடனைக் கொடுத்து விட்டாள்

[என். எஸ். வி]

வெண்ணிலாவின் வெளிச்சத்திலே, விடிய சற்று முன்னரே வேடுவர் வேட்டையாடும் வேளையிலே, வேதபுரி என்னும் ஓர் நகரின் பக்கத்திலேயுள்ள வெட்ட வெளியின் நடுவே அதற்குப் பக்கத்திலேயுள்ள ஓர் அடர்ந்த ஆரணியத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் ஓர் இள நங்கை. அம்மடந்தை ஏதோ வேலையின் நிமித்தம் தான் செல்லுகிறாள் என்று அவளை நோக்குவோர் சந்தேகமின்றிக் கூறுவர்.

அப்பெண்மணியின் நடை உடை பாவனைகளையும், அடக்கம் முதலிய அரிய குணங்களையும் கண்ணுறும் எவரும் அவளைத் தன் சகோதரியாகவோ அல்லது புத்திரியாகவோ பெற பாக்கியமற்றவர்களானோமே என ஏங்காதிருக்கார்.

அம் மாதரசி மாசிலாக் குலத்துதித்தவள். வேடுவர் வகுப்பினள். விறகு வெட்டி விற்கும் தொழிலை மேற் கொண்டவள். தள்ளாத வயதிலே தட்டுத் தடுமாறி பாதவிக்கும் தாய் தந்தையர்களைக் காப்பதே தருமத்தில் தலை சிறந்தது என்று எண்ணியவள். தாரை என்ற பெயரினள்.

[illegible] தான் வழக்கமாக விறகு வெட்டுமிடத்தில் நல்ல மரங்கள் கிடைக்காமையால் வழக்கத்திற்கு விரோதமாக பேய்களும்

அஞ்சும் அக்கானகத்தின் நடுவே சென்று பெரியதொரு மரத்தின் கிளைகளை வெட்டிச் சேகரிக்கத் தொடங்கினாள் அவ்வேடுவப் பெண்.

மனித சஞ்சாரமில்லாத இடத்திலே அச்சமென்பது சிறிதுமின்றித் தன் வேலையைச் செய்து கொண்டிருந்த அப்பெண் மணியைக் கண்ட மிருகங்கள்—அவளுக்கு நல்லிசை கூறுவதே போல் கத்த ஆரம்பித்தன. பறவைகளும் தங்கள் இனிய பாடல்களைப் பாடின.

இவ்வியற்கை இன்பத்திலீடுபட்டிருந்த அப்பெண்மணி சிரமமென்பதைச் சிறிதேனும் உணராது தன் வேலையை முடித்துக் கொண்டு தன் வீட்டை நோக்கித் திரும்புங்கால் கானகத்தில் உதிர்ந்து கிடந்த சரகண்டை 'சல சல' வென்னும் சப்தம் உண்டாக அதைக் கேட்டுத் திடுக்கிட்டு அப்பெண் தன்னை ஏதோ மிருகம் தொடர்ந்து வருகிறது என்று நினைத்து நடு நடுங்கி ஓடும்போது ஓர் கல் தடுக்க அங்குள்ள ஒரு பாம்பின் புற்றில் விழுந்தாள். பாம்பின் புற்றில் விழுந்தால் அது சும்மா விடுமா? அது அப்பெண் தன்னைத் தாக்குவதாகக் கருதி தீண்டிற்று. 'அந்தோ! என்ன செய்வேன் தெய்வமே! 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்று மனிதர் சொல்லும் பழமொழி எனக்குச் சரியாயிருக்கிறதே. நான் படும் துயரம் போதாதா! என்ன செய்வேன்! ஐயோ வலி பொறுக்க முடியவில்லையே' எனக் கதறிய வண்ணம் மரம் போல் சாய்ந்தாள் அம்மாது.

அவ்வேழைப் பெண்ணை அத்தகைய எதிர்பாராத இன்னலில் ஆழ்த்திய அப்பாம்பை இதோ கண்டு பிடித்து எரித்து விடுகிறேன் என்று சபதம் செய்வதே போல் சூரியனும் தன் கடமையைச் செய்யக் கால தாமதமின்றிக் கீழ்த் திசையில் தன் ஆக்ஷியைப் புரிய ஆரம்பித்தான்.

அஃது அவ்வாறு இருக்க அக்காட்டின் வழியே ஓர் போர் வீரன் போர்க்கோலங் கொண்டு தன் கம்பீரமான பார்வையுடனும், அச்சமற்ற ஆண்மையுடனும், போர் வீரருக்குத் தனியேயுள்ள அந்நடையுடனும் போய்க் கொண்டிருந்தான். அச்சமயத்தில் காட்டின் தென் பாகத்திலிருந்து யாரோ ஒரு பெண் புலம்புவது போல் சப்த முண்டாயிற்று. அஞ்சா நெஞ்சம் படைத்த போர் வீரனும் செல்ல அஞ்சும் அந்த அடர்த்தியான அரண்யத்திலே தனியே புலம்பும் பெண்மணி யாராயிருக்கலாம் என்று மனதில் சிந்தித்துக்கொண்டே அச்சப்தம் உண்டான திசையை நோக்கிச் செல்லுவானானான்.

அந்தப் பெருந் தன்மையான குணத்தையுடைய வீரன் யாரைக் கண்டிருப்பான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்கள்

ஊகிப்பு முற்றிலும் சரியே. அவன் கண்டது அரவங் கடித்து ஆதரவின்றி அலறி விழுந்து கிடந்த அப் பெண்மணியையே. அவன் வீரனாயிருப்பினும் மருத்துவத்தில் சிறிது அனுபவ முடையவனாதலால் அவன் ஒரு நொடிப் பொழுதில் அப் பெண்மணியின் திரவத்தை ஒரு பச்சிலையின் மூலம் நீக்கினான்.

அவ்வெதிர் பாராத உதவியைக் கண்டதும் அப்பெண் அளவிலா ஆனந்த முள்ளவளாய் 'பிரபுவே! இவ்வேழையின் உயிரை இறப்பதிலிருந்து காப்பாற்றிய தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! என் மனமார்ந்த வந்தனத்தை மனமுவந்து தெரிவிப்பதல்லாமல் வேறொரு வழியையும் காணாது தவிக்கிறேன். என் உயிர் இவ்வுடலில் நீண்ட காலம் நிலைத்திருக்குமாயின் என் கடனை உங்களுக்கு எப்படியாவது திருப்பிக் கொடுக்க முயற்சி செய்வேன்' என்று சாதுர்யமாகப் பதிலுரைத்துத் தட்டுத்தடுமாறிக் கொண்டே வீடு போய்ச் சேர்ந்தாள் அந்நங்கை.

அந்த உதவியைத் தந்து அவ்வுத்தமப் பெண்ணைப் பிழைப்பித்த மகானுபாவன் யாரென்று நீங்க ளறிந்தீர்களா? வேதபுரி வேந்தருடைய ஏகப் புத்திரனேயாவன். அவர் சில சமயங்களில் தேச நலங் கருதி போர்க் கோலங் கொண்டு போர்க் களத்திற்குச் சென்று போர் புரிந்து தம் ஜென்ம பூமியைக் காப்பாற்றியதுண்டு. அது வரையிலும் அவனுக்குத் தோல்வி யென்பது இல்லாததினால் அவனுக்கு ஜெயவீரர் என்ற பட்டம் பல பேர்களால் கொடுக்கப்பட்டது. நாமும் அவனை அப்படியே அழைப்போம்.

கொஞ்ச காலமாக வேதபுரி அரசன் விஜயசேனனுக்கும் அவனுடைய ஜென்ம பகையாளி ஜெயசிங்கனுக்கும் மும்மரமாகச் சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்போரில் கலந்து கொள்வதற்கே அனுப்பப் பெற்றிருந்தான் ஜெய வீரனும். அப்படி

இருந்தும் தன் வேலையைச் சற்று புறக்கணித்துவிட்டு அப்பெண்ணுக்கு உதவி புரிந்தது அவருடைய பெருந்தன்மையையும், இளகிய மனத்தையும் காட்டுகிறதல்லவா?

ஜெய சிங்கனுக்கும், ஜெய வீரனுக்கும் போர் பல மாதங்கள் வெற்றி தோல்வி யென்ப தில்லாமலே நடந்தது. ஆனால் காலச் சக்கரம் சுழலச் சுழல ஜெய வீரன் பக்கம் பலம் குறைய ஆரம்பித்தது. ஜெய வீரன் படையிலுள்ள வீரர்களில் பெரும்பான்மையோர் இறந்தனர். ஜெய வீரனும் விரோதிகளால் தாக்கப்பட்டுக் காயமடைந்து கீழே விழுந்தான். இந்நிலையில் ஜெயசிங்கம் ஜெயித்தான் என்று நாம் சொல்லுவதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

தான் காயப்பட்டு வேதனை யடைந்ததையும், காயத்தின் உபத்திரவத்தையும் சிறிதும் பொருட் படுத்தாது ஜெயவீரன் வெகு தூரம் செல்லுங்கால் களைப்பு மேலிட்டு மூர்ச்சியடைந்து ஒரு கானகத்திலே விழுந்தான்.

அதே சமயத்தில் அக்காட்டின் வழியே ஒரு கருத்த பெண் உருவம் ஜெயவீரன் விழுந்து கிடந்த இடத்துக்கு வந்தது. அவனுடைய நிர்ப்பாக்கியமான நிலைமையைக் கண்டதும் அளவிலடங்கா வருத்தத்துடனே அவனுக்கு வேண்டிய சிகிச்சை செய்து அவனைக் களை தீரச் செய்தது.

அந்த உருவம் யாருடையது என்று உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமா! அப் பெண்மணியே தாரை. தற்போது அவளுடைய அரிய உதவியால் ஜெயவீரன் குணப்பட்டு வருகிறான். அவனும் தாரையும் இவ்வளவு காலமாய் நண்பர்களாயிருந்தார்களாம். ஆனால் தற்போது அவர்களுடைய நட்பு காதலாய் மாறி விட்டது. அடுத்த மாதம் அவர்க ளிருவருக்கும் திருமணம் நடக்கப்போகிறபடியால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரர்களுடன் கலியாணத்துக்கு வர ஆயத்தமாயிருங்கள்!



வலிய அணைத்த சுகம்

[விகடகேசரி]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

(இதன் உரிமை இதை எழுதியவரைச் சாரும்)

ஒரு நாள் குமரேசன் வழக்கம் போல் கமலாசனியின் வீட்டிற்குச் சென்றான். அங்குக் கமலாசனியைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. கமலாசனி துக்கத்தோடு ஒரு சோபாவின் மீது உட்கார்ந்திருந்தாள். அதற்குமுன் ஒருதரங்கூட அவள் துக்கத்துட னிருக்க அவன் கண்டதே யில்லை. ஆகவே அவள் துக்கத்திற்குக் காரணம் என்ன வென்று குமரேசன் அவளைப் பல முறை கேட்டான். கடைசியாக அவள், 'காதலரே, நாங்கள் சென்னைக்கு வரும்போது எங்கள் ஊரில் ஒருவரிடம் ஆயிரம் ரூபா கடன் வாங்கி வந்தோம். இப்போது அவர் அதற்காக இங்குவந்து என் தந்தையை நிர்ப்பந்தப் படுத்துகிறார். இப்போது என் தந்தையாரிடம் பணம் இல்லை. நகைகளைத் தான் விற்க வேண்டும். அதற்காக நான் கவலைப்படுகின்றேன்,' என்று வருத்தத்துடன் சொன்னாள்.

அவள் வார்த்தையைக் கேட்ட குமரேசன் முன் பின் யோசியாமல், 'கண்மணி, நீ அதற்காகக் கவலைப்பட வேண்டாம். நான் நாளைய சாயங்காலத்

திற்குள் இங்கு ஆயிரம் ரூபாயோடு வந்து சேருகின்றேன்,' என்று சொல்லிப் புறப்பட்டான்.

உடனே கமலாசனி அவனைக் கட்டி அணைத்து அவன் கன்னங்களில் முத்தமிட்டு, 'காதலா, நீங்கள் என்னிடம் மிகவும் அன்புடையவர்களாய் இருக்கிறீர்கள்,' என்று சொல்லி அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

பிறகு குமரேசன் வெளியிற் சென்றான். அவன் கையில் அப்பொழுது ஆயிரம் ரூபா யில்லை. அதற்காக என்ன செய்யலாம் என்று அவன் ஆலோசித்தான். காரணம் சொல்லாமல் அவன் தந்தையினிடமிருந்து அவன் ஆயிரம் ரூபா வாங்க முடியாதென்பது அவனுக்குத் தெரியும். எப்படியாவது கமலாசனியைத் திருப்தி படுத்த வேண்டுமென்று அவன் கருதினான். அப்போது இரவு மணி எழு இருக்கும். குமரேசன் ஷராப்புக் கடைகளின் பக்கம் சென்றுகொண் டிருந்தான். ஒரு மார்வாரி தன் கடையைப் பூட்டிக் கொண்டு கடையின் வாயிலில் நின்று ஏராளமான நோட்டுக்களை எண்ணித் தன் தோல்பையில் வைத்து அதைத் தன் சட்டைப் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான். அவனையும் அவன் ரூபா வைத்துக்கொண் டிருப்பதையும் குமரேசன் கவனித்தான். உடனே அந்தப் பணத்தை அபகரித்துக் கொள்ளவேண்டு மென்னும் எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. ஆகவே, அவன் அந்த மார்வாடியைப் பின்தொடர்ந்து சென்றான்.

மார்வாரி ஜனசஞ்சார மற்ற இடத்தில் சென்றுகொண் டிருக்கையில் குமரேசன் அவன்மீது பாய்ந்தான். இருவரும் இரண்டொரு விநாடி கட்டிப் புரண்டார்கள். குமரேசன் மார்வாடியினிடமிருந்த பணப்பையை அபகரித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். அவன் வெகுதூரம் சென்று தன்னை யாராவது தொடர்ந்து வருகிறார்களோவென ஐயுற்றுத் திருப்பிப் பார்த்தான். ஒருவரும் அவனைப் பின் தொடர்ந்து வரவில்லை. ஆயினும் அவன் ஓட்டமும்



நடையுமாகச் சென்றான். நேரே அவன் சிவஞானம் பூம்பொழிலை யடைந்து அங்கோரிடத்தில் செடிமறைவில் உட்கார்ந்தான். தன்னை யாராவது தொடர்ந்து வருகிறார்களோ என்னவோ என எண்ணி அவன் அடிக்கடி பயந்தான். வெகு நேரமாயிற்று. யாரும் அவனைத் தேடி அங்கு வரவில்லை. ஆகவே அவனுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. உண்டாகவே அவன் தன்னிடமிருந்த மார்வாடியின் பணப்பையைத் திறந்து பார்த்தான். அதற்குள் நூறு ரூபாய் நோட்டுகளாக முப்பது நோட்டுக்கள் இருந்தன. தன் காதலியை அதைக் கொண்டு அளவுக்கு அதிகமாக மனத்திருப்தி செய்து விடலாமென்று அவன் தீர்மானித்தான். ஆயினும் தன்னை யாராவது மறைந்திருந்து பார்க்கின்றார்களோ என்று அவன் எண்ணும் பொழுதெல்லாம் அவன் மனத்தில் அச்சம் தோன்றியது. ஆயினும் கமலாசனியின் மீது அவன் கொண்டிருந்த

பித்தம் அவனுக்குக் குறையவில்லை. அவளைத் திருப்தி செய்வதற்கு வழி ஏற்பட்டு விட்டதைப்பற்றி அவன் அச்சத்தினிடையில் ஆனந்தப்படாமலிருக்கவில்லை. நோட்டுக்களைப் பைக்குள் வைத்து, பையை மூடினான். பிறகு அந்தப் பையைத் தன் சட்டைப் பைக்குள் பத்திரமாய் வைத்துக் கொண்டான். பிறகு சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். தன்னை ஒருவரும் கவனிக்கவில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். ஆகவே அவன் மெதுவாக எழுந்து தன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் தன் வீட்டை யடைந்ததும் சாத்தப்பட்டிருந்த தெருக் கதவை மெதுவாகத் தட்டினான்.

உடனே வேலைக்காரன் கதவைத் திறந்தான்.

குமரேசன் அவனை நோக்கி, 'அப்பா எங்கே இருக்கிறார்?' என்று கேட்டான்.

'இந்நேரம் உங்களுக்காகக் காத்திருந்தார். இப்பொழுதுதான் சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குச் சென்றார்' என்று வேலைக்காரன் கூறினான்.

'சரி, நீ பேசாமற் போய்ப் படுத்துக் கொள். எனக்குச் சாப்பாடு வேண்டியதில்லை,' என்றான் குமரேசன்.

வேலைக்காரன் தெருக் கதவை ஓசைப்படாமல் சாத்திக்கொண்டு, படுப்பதற்கு ஒரு மூலையைத் தேடிச் சென்றான்.

வேலைக்காரன் சென்ற பிறகு, குமரேசன் நேரே அடுப்பங்கரைக்குச் சென்றான். அடுப்பில் நெருப்பிருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தான். இல்லை. உடனே மின்சார விளக்கை எரியவிட்டு நெருப்புப் பெட்டி எங்கேயிருக்கிறது என்று தேடினான். கடைசியாக அது ஓரிடத்திலிருந்து அகப்பட்டது. மண் எண்ணெய் (Kerosine oil) இருக்கிறதா என்று பார்த்தான். அதுவும் ஓரிடத்தில் ஒரு சீசாவி லிருந்தது. உடனே குமரேசன் தன் சட்டையைக் கழற்றி, பணப்பையை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி விட்டுச் சட்டையில் மண் எண்ணெயை ஊற்றி அதை அடுப்பிலிட்டுக் கொளுத்தினான். உடனே அந்தச் சட்டை, தீப்பிடித்து நன்றாய் எரிய ஆரம்பித்தது.

அந்தச் சமயத்தில் திடீரென்று சமையற்கட்டின் அறை திறக்கப்பட்டது. குமரேசன் திரும்பிப் பார்த்தான். தன்னெதிரே தன் தந்தை நிற்பதைக் கண்டான். உடனே அவன் முகத்தோற்றம் அச்சத்தினால் மாறுபட்டது.

உடனே அவன் தந்தையாராகிய சுந்தர முதலியார் அவனைப் பார்த்து, 'மகனே, நீ வீட்டிற்குள் வந்தது முதல் இதுவரையில் உன்னுடைய செய்கையை நான் மறைந்திருந்து கவனித்தேன். இப்பொழுது நீ எதற்காக

உன்னுடைய சட்டையைக் கொளுத்தினாய்? மகனே, உண்மையைச் சொல். உன்னுடைய முகத்தோற்றத்தைப் பார்த்தால் எனக்குப் பயமா யிருக்கிறது. குமரேசா, என்னிடம் எதையும் மறைக்காதே. மகனே, உண்மையைச் சொல், உண்மையைச் சொல்' என்று சொன்னார்.

குமரேசன் வேறு வழியில்லாமல் தான் கமலாசனியைக் கண்டது முதல் தான் மார்வாரியின் பணத்தைக் கைப்பற்றிய காலம் வரையில் நடந்த எல்லா விஷயங்களையும் சுந்தர முதலியாரிடம் சுருக்கமாகச் சொன்னான். பின்னும் அவன் சுந்தர முதலியாரைப் பார்த்து, 'நான் மார்வாடியோடு சண்டை போடும் பொழுது அவன் என் சட்டைப் பைகளில் ஒன்றைக் கிழித்துத் துணியைத் தன் கையில் வைத்துக் கொண்டான். அதைக்கொண்டு போலீஸார்கள், என்னைக் கண்டு பிடித்து விடலாம். ஆகவே, அந்தத் துணியின் சம்பந்தமான சட்டையை நான் கொளுத்தி விட்டேன்' என்றும் சொன்னான்.

குமரேசன் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் சுந்தர முதலியார் திடுக்கிட்டார். இப்படித் தம் மகன் நடப்பான் என்று அதுவரையில் அவர் கனவிலும் நினைக்கவில்லை. ஆயினும் அவர் குமரேசனைப் பார்த்து, 'மகனே, நீ இப்படிச் செய்யக் கூடியவன் என்று இதுவரையில் நான் நினைக்கவே யில்லை. உன் தாயார் இறந்த பிறகு எவ்வளவோ அருமை பெருமையாக உன்னை நான் வளர்த்து வந்தேன். நீ சொல்லிய அந்தக் கமலாசனி என்னும் பெண்ணின் வீட்டுக்கு நீ போய் வருவதை எதிர்பாராத வகையில் நேற்றுத் தான் என் நண்பர் ஒருவர் சொல்ல நான் அறிந்தேன். அதனால்தான் இப்பொழுது நீ வீட்டுக்கு வந்தவுடன் உன் நடவடிக்கைகளை மறைந்திருந்து கவனித்தேன். மகனே போனது போகட்டும். கூடியவரையில் நான் உன்னைக் காப்பாற்ற முயற்சி செய்கிறேன். அந்தக் கமலாசனி என்னும் பெண்ணைப் பற்றி நான் நன்றாய் விசாரித்து அறிந்தேன். அவள் ஒரு நாடோடி என்றும் அவளோடிருப்பவர்கள் அவளுடைய தாய் தந்தையர்கள் அல்லர் என்றும் உணர்ந்தேன். கமலாசனி ஒவ்வொரு ஊர்களில் சிற்சில மாதங்கள் தங்கி, கலியாணமாகாத ஒரு பதிவிரதைபோல் நடித்துக் கொண்டு உன்னைப் போன்றே ஏமாந்த வாலிபர்களிடமிருந்து, பணம் பறிப்பதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறாள். இவ் விஷயத்தை நான் என் நண்பர் ஒருவர் மூலம் நன்றாய் ஆராய்ந்து அறிந்தேன். அவளைப் போலீஸ்காரர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவள் விரைவில் போலீஸ்காரர்களிடம் சிக்குவாள். அவள் கதி எப்படியேனும் ஆகட்டும். மகனே, நீ உன் அத்தை மகளாகிய இலட்சுமியை அலட்சியம் செய்ததினால் இப்பொழுது ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டாய், இதிலிருந்து தப்ப வழி தேட வேண்டும்,' என்று கூறும் பொழுது, திடுதிடுவென்று போலீஸ்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்தார்கள். இரண்டொரு நிமிஷத்தில் அவர்கள் சுந்தர முதலியாரும் குமரேசனும் இருந்த இடத்திற்கு வந்து அவர்கள் எதிரே நின்றார்கள்.

உடனே போலீஸ்காரர்களில் ஒருவன் சுந்தர முதலியாரைப் பார்த்து, 'காரணஞ் சொல்லாமல் உங்கள் வீட்டை நாங்கள் பரிசோதனை போடப்போகிறோம். அதற்கு அதிகாரமும் பெற்று வந்திருக்கிறோம்,' என்று சொல்லி விட்டுச் சுந்தரமுதலியாருடைய உத்தரவை எதிர்பாராமலே அவர் வீட்டைப் பரிசோதனை செய்யலானான். சுந்தர முதலியாரையும் அவர் மகனையும் வேலைக்காரனையும் போலீஸ்காரர்கள் காத்துக்கொண்டு நின்றார்கள்.

சோதனையில் மார்வாரியின் இடமிருந்து குமரேசன் கைப்பற்றிய பணப்பை போலீஸ்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டது. 'இதுதான் நாம் தேடிவந்தது,' என்றான் ஒரு போலீஸ்காரன்.

உடனே தலைமைச் சேவகன் பையைத் திறந்து அதற்குள்ளிருந்த நோட்டுக்களை எடுத்து, அவைகளில் குறிக்கப்பட்டிருந்த எண்களை (Numbers)க் கவனித்தான். இவைகள் மார்வாடியின் நோட்டுக்களே! சந்தேகமேயில்லை,' என்று சொன்னான்.

உடனே தலைமைச் சேவகன் சுந்தர முதலியாரையும் அவர் மகனையும் பார்த்து, 'உங்களிருவரில் ஒருவர் குற்றவாளியா யிருக்க வேண்டும். யார் குற்றவாளி? சொல்லுங்கள்,' என்றான்.

'இனித் தப்ப வழியில்லை' என்று அறிந்துகொண்ட சுந்தர முதலியார், தம் மகன்மீது தாம் கொண்ட அன்பினால் போலீஸ்காரர்களைப் பார்த்து, 'நான்தான் குற்றவாளி,' என்று சொன்னார்.

உடனே போலீஸ்காரர்கள் அவரைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் குமரேசன் விழித்தான்.

மறுநாள் விஷயம் ஊர் முழுவதும் பரவிற்று. 'இப்படித்தான் சுந்தர முதலியார் கொள்ளை யடித்துப் பணக்காரர் ஆனார்,' என்று ஜனங்கள் தீர்மானமாகப் பேசினார்கள்.

மறுநாள் நியாய சபையில் விசாரணை தொடங்கியது. சுந்தர முதலியார் தாமே குற்றவாளி என்று சொன்னார். அவருக்கு ஐந்து வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைக்குச் செல்லுமுன் தம்மகனோடு அவர் இரண்டொரு வார்த்தை பேச விரும்புவதாகச் சொன்னார். நியாயாதிபதி அதற்கு இணங்கினார். உடனே அவர்தம் மகனைப் பார்த்து, 'மகனே, நீ உலகத்தில் நல்லவனாக வாழ வேண்டும். அதுவே என்னுடைய ஆசை. நீ உன் அத்தை மகள் இலட்சுமியை மறந்து விடாதே. அவள் மிகவும் நற்குணம் வாய்ந்த பெண். கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்,' என்று சொன்னார்.

பிறகு அவர் ஐந்து வருஷம் தண்டனையை யனுபவிக்கச் சிறைக்குச் சென்று விட்டார். குமரேசன் தன் வீட்டுக்குச் சென்றான். அன்று அவன் மனம் மிகவும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தது. மறுநாள் பொழுது விடிந்தவுடன் அவன் கமலாசனியைப் பற்றி நினைத்தான். அவளைப்பற்றித் தன் தகப்பனார் கூறிய விஷயம் உண்மையாக இருக்குமா என்று ஆலோசித்தான். நேரில் சென்று அவளைக் கேட்டுவிடுவதே உசிதம் என்று அவன் எண்ணினான். உடனே புறப்பட்டு அவன் அவள் வீட்டிற்குச் சென்றான். அப்பொழுதுதான் கமலாசனி வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வந்து, தயாராய் நின்றுகொண்டிருந்த மோட்டாரில் ஏறினாள். உடனே வண்டி புறப்பட்டது. தன்னைப் பார்த்தும் பார்க்காதவள்போல் வண்டியில் ஏறிய கமலாசனியைப் பார்த்துக் குமரேசன், 'எங்கே போகிறாய்?' என்று கேட்டான்.

அதற்கு அவள் வண்டியி லிருந்தபடியே அவனைத் திரும்பிப் பார்த்து, 'சனியனே, போகும்பொழுது எங்குப் போகிறாய் என்று கேட்காதே. திருடனாகிய உனக்கு வெட்கமில்லையா?' என்றாள்.

மறு நிமிஷத்தில் அவள் உட்கார்ந்திருந்த மோட்டார் வண்டி ஓடி மறைந்தது. அப்பொழுதுதான் தன் தந்தையார் சொல்லிய வார்த்தை உண்மையென்று அவனுக்குத் தோன்றியது. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். பிறகு அவன் வீட்டையடைந்து, தான் செய்த குற்றத்தை யெல்லாம் எண்ணி யெண்ணிக் கண்ணீர் வடித்தான்.

ஐந்து வருடமாயிற்று. சுந்தர முதலியார் சிறைச்சாலையிலிருந்து வீடு வந்து சேர்ந்தார். அதற்கு முன்னரே, சுந்தர முதலியார் தம் மைந்தனுக்காகச் சிறைக்குச் சென்றிருந்த விஷயம் ஊர் முழுதும் பரவிப் பழைய கதையாயிருந்தது. ஆகவே சுந்தர முதலியாரை ஒருவரும் குறைவாக நினைக்கவில்லை.

ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில் குமரேசனுக்கும், இலட்சுமிக்கும் திருமணம் நிறைவேறியது. இதோடு இச்சிறு கதை முடிவு பெறுகிறது.

குமரேசனைப்போன்ற வாலிபர்கள் இப்பொழுதும் சென்னை நகரத்தில் குவிந்துகிடக்கின்றனர். அவர்கள் எல்லோருக்கும் கடவுளை நல்ல அறிவைக் கொடுக்க வேண்டும்.

தந்தை:— ஏண்டா! வேளா வேளைக்குத் தின்னுட்டு வெளியே அலைஞ்சுட்டு வர்ரியே என் வயிறு எரியுதே.

மகன்:—வயிறு எரிந்தால் நெருப்பணைக்கும் இயந்திரத்தை வாவழைக்கிறேன். அஞ்சாதீர்கள்.



ஜீ வ கா ரு ண் ய ம்

[தமிழன்]

ஜீவகாருண்ய சங்கத்தார் கைலயங்கிரிக்குப்போய் ஈஸ்வரனிடத்திலும் பார்வதியிடத்திலும் ஏன் பிரசாரம் செய்யவில்லை?

பார்வதியும் பரமசிவனும் சேர்ந்தே உலகிலுள்ள சகல ஜீவராசிகளையும் படைத்திருப்பதாய் வேதம் கூறுவதால் அவர்களால் படைக்கப்பட்ட நாம் எப்படி அவர்களிடம் ஜீவகாருண்யத்தைப்பற்றிப் பிரசாரம் செய்வது. மதுவும், மாமிசமும் உண்ணப் பட்டவர்களை மாத்திரம் பிரசாரமூலம் தடுக்கவேண்டியது எங்கள் கடமையே தவிர கடவுளிடம் பிரசாரம் செய்ய வேண்டியது எங்கள் கடமையன்று, தவிர கடவுளிடம் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்கிறீர்களா?

அப்படியானால் கடவுளாகிய பரமசிவன் மதுவும், மாமிசமும் உண்டதாக வேத[illegible]மொழிபெயர்ப்பாசிரியர் காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளால் மொழிபெயர்த்துள்ள சங்கர விஜயம் என்னும் நூலில் 103-ம் பக்கத்தில் பதின்மூன்றாவது வரியில் 50வது வியாக்கியானத்தில் (பரமசிவம்) விஸ்வரூபருக்கு விஷ்ணு மித்திரர் மதுவுடன் கூடிய விலையற்ற பொற்கலசத்தில் அர்க்கிய மளித்துப் பின்னர் இப்புதல்வி இக்கோக்கள், இம்மனைகள், இத்திரவியங்கள் என்னும் அனைத்தும் தங்களுடையனவே என்றனர். பிறகு மணமகனாகிய விஸ்வரூபரும் மணமகளாகிய உபயபாரதியும் தமதிச்சையாலாகிய விளையாட்டுகளால் ஆனந்த மடைந்தனர் என்று கூறுவதால் பரமசிவனும் பார்வதியும் மது உண்டதாய் ஏற்படுகின்றதே? மது உண்டவர்கள் மாமிசமும் உண்டவர்க ளாகார்களா ? ஆகையால்தான் நீங்கள் இனி பரமசிவனிடம் சென்று பிரசாரம் செய்ய வேண்டும் என்று உங்களைப் பணிவாய்க் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

பரமசிவன் மதுவை உண்டதாய்ச் சாத்திரம் சொல்லுமானால் அச் சாத்திரமும், அப் பரமசிவனும் எமக்கு வேண்டாம். அவர்களை

வெள்ளிமலை வரலாறு

[மே. மா]

வெள்ளிமலை எனும் இடம் திருவலம் ஸ்டேஷனுக்கு அடுத்தாற்போல் 9-மைல் தூரத்தில் இருக்கின்றது. அம்மலையில் ஒரு கோயில் இருக்கின்றது. மலையின் அடிவாரத்திலிருந்து ½மைல் தூரம் மேலேறிச் சென்றால் அவ்விடத்தில் திருப்புகழ் சாமிகளின் ஆசிரமம் ஒன்று இருக்கின்றது. அவ்வாசிரமத்திற்குச் சில செட்டிமார்களும் நானும் சென்றிருந்தோம்.

ஆஸ்ரமத்திலிருக்கும் சாமியார் எங்களைக் கண்டமாத்திரத்தில் காபியும் சுனை நீரும் தந்து எங்கள் சிரமத்தைப் போக்கிக் குளிர்ந்த காற்று வீசும் உச்சி குண்டுக்கு அழைத்துச் சென்றார். அக் குண்டுக்குத் தூங்கு மூஞ்சி குண்டு என்று சொல்லப்படுகின்றது. சில மணி நேரம் கழிந்தபின் களிமண் ஸ்நானம் செய்ய ஏற்பாடு செய்தார். ஸ்நானம் முடிந்ததும் ஆகாரம் வழங்கப்பட்டது. அது சமயம் மைலாப்பூரிலிருந்து ஒரு ஆங்கில வைத்தியர் வந்திருந்தார். அவர் அன்று மாலையே சென்னைக்குத் திரும்பவேண்டும் எனக் கூறியதால்

நார்களாகவே நாம் மதிப்போம். அச்சாத்திரத்தைக் குப்பைகளெனவே நாம் சொல்வோம் .

அப்படியானால் நீர் வேதத்தை நிந்தித்தவராவீர். வேத நிந்தனை உம்மை மீளாநரகத்தில் தள்ளும். தவிர உம்மை இராட்சதன் என்று வேத சாத்திரங்கள் பறையடிக்கும். ஆதலால் வேத தூஷணை செய்யாதீர் ?

மதுவை உண்ணச் சொல்லும் சாத்திரத்தால் மோட்ச லோகம் போக முடியும் என்று சொன்னாலும் அது எமக்கு வேண்டாம். இராவண வம்சத்தவனாய் இராட்சதனாய் என்னை எண்ணினாலும் நான் ஜீவகாருண்யத்தையே கடவுளாகவும், சாத்திரமாகவும் ஒழுகி உயிர்விடுவேன்.

அப்படியானால் கும்பகோணத்தில் சங்கராச்சாரியார் 30 ஆட்டைக் கொல்லும் யாகம் செய்யப்போகிறார். அங்கே சென்று பிரசாரம் செய்யுங்கள்.

சாமிகள் திருப்புகழ் பாராயணம் செய்ய ஆரம்பித்து மாலைவரையில் உலகில் ஒருவரும் பாடமுடியாத வகையில் வெகு அழகாகத் தம்முடைய சொந்த ஏற்பாட்டின்படி செய்துவைத்திருக்கும் ஆயுதத்தை வைத்துக்கொண்டு தமது சீடர் சின்னு என்னும் ஒரு ஐயங்காருடன் பாடினார். சீடராகிய சின்னுவும் திருப்புகழ் நன்றாகப் பாடினார். பாட்டு முடிந்தபின் மலையின் வரலாற்றைக் கேட்டபோது கீழ்வருமாறு கூறப்பட்டது.

முற் காலத்தில் அந் நாட்டை நம்பிராஜன் என்னும் ஒரு குற வகுப்பு அரசன் ஆண்டு வந்ததாகவும் அதுசமயம் அவனுக்கு ஒரு பெண் இருந்ததாகவும் அப் பெண்ணை முருகன் மணம் செய்து கொண்டதாகவும், மணம் நிகழ்ந்த இடம் அம் மலைதான் என்றும் அதன் அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன எனவும் கூறினர். மலையின் உச்சிக்குப்போகக் கள்ளவழி ஒன்று இருந்தது. அவ் வழியாய் நாங்கள் சென்று உச்சிக்குப் போகும்போது அவ்வழி வர்ணிக்கும் நிலைமையில் காணப்பட்டது. உச்சியில் ஒரு லிங்கமும், சுனையும் இருந்தன. அச் சுனைநீர் குடிப்பதற்கு உதவும்.

சாமிகள் பாராயணம் செய்யும் குகை வள்ளியும் முருகனும் ஆனந்த நித்திரை செய்த இடம் எனக் கூறப்பட்டது. அன்று மாலை அம்மலைக் கருகாமையில் ஒரு பாறையில் சுமார் 7 மணிக்கு வெல்லம் நெய் சேர்த்து சமைக்கப்பட்ட அன்னம் வைக்கப்பட்டது. அவ்வன்னம் வைத்த சிறிது நேரத்திற்கெல்லாம் காணப்படவில்லை. இவ்வாச்சரியத்தை விசாரித்தபோது அம்மலையின் நிகழ்ச்சி கூறப்பட்டது.

(தொடரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

வாய்ச் சொல் அல்லது பேச்சு

[திரு. கே. வைத்தியநாதன்]

வாயினின்று தோன்றும் ஒலி வடிவான பொருள் தாத்தக்க சொல்லே வாய்ச் சொல்லாம். அம்மாதிரியான பல சொற்களும் சொற்றொடர்களுமே பேச்சுக் கருவியாக அமைந்துள்ளன. ஒருவன் தன் உள்ளக் கருத்தை வெளியிட வேண்டுமானால் அவனுக்குப் பேச்சைப் போன்ற சாதனம் வேறில்லை. எழுத்து மூலமாய்ப் பிறர்க்குணர்த்தலாமென்றாலோ பேச்சில்லாமல் எழுத்தேது, இலக்கியமேது? அஃதேபோல் பிறரது மனப்பான்மையை அறிவதற்கும் பேச்சு அவசியமானதே. பேச்சு இன்றேல் அறிவு விருத்தியாகாது. நாகரிகம் வளராது. சுருங்கச் சொல்லில் மனித வளர்ச்சியே இல்லை என்னலாம்.

* * *

மனித சமூகம் பரந்தது. பல்வேறு தேசங்களில் வெவ்வேறு வகை நாகரிகத்தோடு வாழும் மக்கள் பலர். ஆகவே அவர்கள் பேசும் மொழிகளும் (பாஷைகளும்) அனேகம். அந்தந்த தேசத்து மக்களுக்கு அவரவர்களது மொழியே சிறந்தது. குழந்தைப் பருவம் முதல் வயோதிகப் பருவம் வரையில் ஒருவனது அறிவையும் திறனையும் வளர்ப்பது அதுவேயாகும். ஆகவே அவனுக்கும் தன் சொந்த மொழியிலேயே விசேஷப்பற்று ஏற்படுவது இயல்பு. இதற்கே தாய் மொழிப்பற்று என்று பெயர்.

* * *

வீட்டில் பொழுதே போகவில்லை யென்கிறோம். உடனே ஏதேனுமொரு பொதுவிடத்திற்குச் செல்லுகிறோம். இரவானதும் வீட்டிற்குத் திரும்பும்பொழுது 'பொழு போனதே தெரியவில்லையே,' என்று சொல்லிக் கொள்கிறோம். காரணம் என்ன? வீட்டில் பேச்சுக் காளில்லை. பொதுவிடங்களில் வேண்டிய பேர் தயார். முன்பின் அறியாத பலர் கூடியுள்ள இடத்திலும் ஒருவர் 'என்ன சார்! இன்று வெயில் இவ்வளவு கடுமையாக யிருக்கிறது!' என்று மெதுவாகப் பேசத் தொடங்குகிறார். அவ்வளவுதான். அப்புறம் கேட்பானேன்! பற்பல விஷயங்களைப்பற்றி—கோவில்

பூசாரி சண்டை முதல் இராசாங்க இரகசியம் வரை அவர்களுக்குத் தோன்றிய மட்டில், ஆற்றலுக் கேற்றவாறு பேச்சுதான்—வாய்ச் சண்டைதான்.

*　　*

இரு நண்பர்கள். இணை பிரியாத் தோழர்கள். ஒரு சமயம் ஏதோ பேசிக்கொண் டிருக்கின்றனர். ஒருவன் 'நீ அவ்வாறு கூறியது தவறு' என்கிறான். 'இல்லை. நீ கூறியதுதான் பிசகு' என்கிறான் மற்றவன். கொஞ்சங் கொஞ்சமாகப் பேச்சு முற்றுகிறது. பின் வாய்ச் சண்டை. முடிவில் கைச்சண்டையாவதுமுண்டு. அது முதல் இருவரும் கொடிய பகைஞர்கள். ஆக பேச்சே பகைமைக்குங் காரண மாவதுண்டு.

*　　*　　*

ஏதோ ஒரு இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டான் ஒருவன். கவலை மிகுதியால் வாடிச் சோர்வடைகிறான். அச்சமயம் அந்நியர் ஒருவர் அவனது முகத் தோற்றத்தி லிருந்து அவனது உண்மை நிலையை ஒருவாறு உணர்ந்தவராய் அவனிடஞ் சென்று 'அப்பா! அஞ்சாதே! உன்னைக் காப்பாற்றுவார் கடவுள்' எனக் கூறித் தேற்றுகிறார். எப்படியோ அவனுக்கு நேரிட்ட ஆபத்தும் விலகு கிறது. அப்புது மனிதர் கூறிய ஆறுதல் மொழியில் அவனுக்கு ஏதோ ஒருவித நம்பிக்கை யுண்டாகிறது. அதுமுதல் அடிக்கடி அவரை யணுகித் தன் நிலைமையை அவரிடம் விரித்துரைக்கச் செய்வதும் அவ்வாறுதல் மொழியே. சில தினங்களில் இருவரும் ஆருயிர்த் தோழர்களாகின்றனர். இவ்வாறு, பகைமைக்குக் காரண மாவதே போல் நட்புரிமைக்கும் காரணமாவது பேச்சுதான்—வெறும் வாய்ச் சொல்தான்.

*　　*　　*

பிறரிடமிருந்து நுண்ணிய விஷயங்களறிய வேண்டுமானால் அவருக்கு உற்சாகமூட்டி, நாம் அவரது பேச்சைக் கேட்க ஆவலுள்ளோம் என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டும். அவர் கூறும் பொழுது ஊங்கொட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. கேட்பவருக்குள்ள ஆவல் குறையுமானால் சொல்பவருக்குள்ள மனவூக்கமும் குறையுமன்றோ! சிற்சில சமயங்களில் தர்க்கம் புரிவதன் மூலமும் அந்நியருள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் உறுதிப் பொருள்களைத் திரட்டி யெடுக்கலாம். ஆனால் வீண் தர்க்கம்—நியாயமற்ற வாய்ப் போர் யாருக்குங் கோப மூட்டும். நியாயத்தோடு செய்யும் வாதம் அறிஞரது இருதயப் பெட்டியை யுடைத்து உள்ளே மங்கிக் கிடக்கும் விலை மதிப்பற்ற மணிகளைப் பொறுக்கி வெளியே கொணர்ந்து ஒளி பெறச் செய்யும்.

*　　*　　*

மேடையேறி நின்று பேசுவதென்பது யாரும் செய்யத்தக்க எளிய காரியமல்ல. யாரும் மேடையில் ஏறி விடலாம். ஏதேனும் வாயில் வந்தவற்றைக் கூறி விடலாம். ஆனால், இது பேச்சாகுமா? இதை உளறல், பிதற்றல் என்றுதான் சொல்லலாம். பேச்சென்பது பலரது கவனத்தைக் கவர்வதா யிருக்க வேண்டும். எளிய நடையும் ஏற்ற பதப் பிரயோகமும் பலரது கவனத்தை இழுக்கும் வன்மை வாய்ந்தவை. இவை பேச்சாகிய ஒரு வண்டிக்குரிய சக்கரங்கள் போல்வன. இவற்றில் பழகினாலல்லாமல் சக்கரங்கள் சுழலா. வண்டியும் ஓடாது. வண்டியே செல்லாதபோது வண்டியிலுள்ளோர் நம்முடன் நகர்வதேது. அழகான பேச்சு பழகாது வருமா? செந்தமிழும் நாப்பழக்க மல்லவா!

*　　*　　*

சிலரது நீண்ட பேச்சில் நமக்கு வெறுப்பு ஏற்படுகிறது. காரணம் திரும்பத் திரும்பச் சொல்லுவதுதான். காலத்தின் அருமையறியாது மீண்டும் மீண்டும் பேசியவற்றைப் பேசிக்கொண் டிருப்பது பேச்சாகாது. மேலும் 'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்' என்ற உயரிய இலக்கணமும் பேச்சு இலக்கியத்திற்கு உரித்தானது. ஆனால், ஒரே விஷயத்திலுள்ள பல்வேறு பகுதிகளை விளக்கிக்கூறலாம். இதுவும் அறிவைப் பெருக்கும் பேச்சுக்கோர் அங்கமாகும்.

*　　*　　*

சிறந்த பேச்சுக்கு உணர்ச்சியோடு எழும் ஓசையும், இடத்திற் கேற்ற பதப்பிரயோகமும் வேண்டும். உணர்ச்சியுடன் உச்சரிக்கப் படாத சொல் உயிரற்ற சொல்லே. வழ வழ கொழ கொழ என்ற பேச்சு யாரையுந் தூங்கத்தான் செய்யும். உணர்ச்சியோடு வெளிப்படும் சொல்லில்தான் சக்தியுண்டு, சுவையுண்டு. நவரசமும் சொட்டத் தக்க பேச்சில்தான் மக்களுக்கு மோக முண்டாகிறது. பாரதியாரது இலக்கிய வுலகிற் பழகியோர் யாரும் இந்த உண்மையை உணராமற் போகார்.

ஓரே பதம் பல பொருள்களுக்கும் பொருந்தும் எனினும் யாதானுமொரு பொருளைப் பற்றிப் பேசும் பொழுது அதற்குரிய சிறப்பான பிரத்தியேகமான பதத்தையே பிரயோகிக்க வேண்டும் உதாரணமாக இறைவனைப் பற்றிப் பேசும்பொழுது 'அன்பு' என்ற சொல்லை விட, 'பக்தி' என்ற சொல்லை உபயோகிப்பது எத்துணைப் பொருத்தமானது.

*　　*　　*

பேச்சிலும் சித்திரமுண்டு. இச் சித்திரத்திற்கு எழுத்தோவியத்தை விட வன்மை அதிகம். எழுத்தோவியம் படிப்போருள்ளத்தில் மட்டும் படந்தீட்டும். சொல் ஓவியம் கற்றோர் மற்றோர்

முதலிய எல்லோருள்ளத்தும் சித்திரம் வரையும். அல்லாமலும் உள்ளத்திலுள்ள உணர்ச்சியை வன்மை பெறச் செய்யும் சக்தி சொல்லோவியத்திற்கே யுண்டு. மது நிறைந்த மலரில் மயங்கி விழும் வண்டேபோல், பேச்சுச் சித்திரத்தில் மயங்கி விடுவது மாந்தரியல்பு.

*　　　*　　　*

'கற்றலிற் கேட்டலே நன்று' என்று யாரோ ஒரு பெரியார் சொல்லிப் போனார். இது உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, கேட்டல் அவசியம் என்னும்பொழுது பேச்சும் அவசியமென் றேற்படுகிறதல்லவா? இந்தப் பேச்சுத் திறமையை அறிவு வளர்ச்சிக் கேற்ற வழியில் செலவிட்டால் மக்களுக்கு எத்துணை நலமுண்டாகும்!

'ஆறுதே நாவினாற் சுட்ட வடு' என்பது நாயனாது வாக்கு. வன்மை பொருந்திய வசைச் சொற்களே பெரும்பாலும் மனிதனது நெஞ்சை வாள்கொண் டறுக்கின்றன. வன் சொற்கள் வழங்குவோரது உள்ளத்தில் எழும் கோபத்தீ அவ்வேளையில் மட்டும் கொஞ்சம் தணியுமே யல்லாது அவற்றை வழங்குவதால் பிறிதொரு பயனுமுண்டோ! ஆகவே அன்பர்களே! 'இன்சொலா லன்றி இரு நீர் வியனுலகம் வன் சொலா லென்றும் மகிழாது' என்ற அமிர்த மொழியைச் சிந்தித்து இன்பம் பயப்பனவாகிய இன் சொற்களையே பேசி யாவரையும் மகிழச் செய்வீர்களாக.

மிருக வைத்தியக் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்து விலகிய ஒருவர், ஜில்லா போர்டு தேர்தலுக்கு நின்று ஒரு பெரும் கூட்டத்தில் பேசும்போது, எதிர் கக்ஷிக்காரன் ஒருவன், 'ஐயா! நீர் மாட்டு வைத்தியர் என்று சொல்லுகிறார்களே, உண்மை தானா' என்றான்.

அபேட்சகர்:—ஏன் கேட்கிறீர்கள்? உங்களுக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்கிறதா?
—ஜீ. சுப்பையராஜு

உபாத்தியாயர்:—பத்தில் கால் போனால் என்ன வாகும்.

குடியான வீட்டுப்பையன்:—பயிர் நன்றாய் செழித்து வளரும்.
—பி. என். நரசிம்மன்

வழிப்போக்கர்:—ஐயா! ஒரு விஷயம் சொல்லுகிறேன். அதை விளக்குமாறு வேண்டுகிறேன்.

பிரயாணி:—விளக்குமாறா? என்ன விளக்குமாறு? சீவு விளக்குமாறா? தென்னம் ஈர்க்கு விளக்குமாறா?—பி. பரிமணப்பல்லவராயர்

சந்தேகப் பேய்

—:o:—

[திரு. வி. சுப்பையா]

'லலிதா'

'நான்தான் சொல்லுகிறேனே! மறுபடியும் மறுபடியும் என்னை ஏன் வற்புறுத்துகிறீர்கள்? அந்தச் சாக்குப் பையை உடுப்பதை விட்டு வேறு என்ன சொன்னாலும் செய்யத் தயார்.'

'என்ன! அது உன் கண்களுக்குச் சாக்குப் பை மாதிரி யாகவா தோன்றுகிறது?'

'இல்லை. ரெட்டுத் துண்டுமாதிரி தெரிகிறது. அதிருக்கட்டும்; நீங்கள் ஏன் எப்பொழுது பார்த்தாலும் கதர், கதர் என்று கதறுகிறீர்கள்? நீங்கள் கதரைத் தரிப்பது மல்லாமல் குழந்தை நமச்சிவாயனையும் அல்லவா கெடுத்து விட்டீர்கள்! விலை சகாயமான மில் துணி இருக்கும் பொழுது அதைப்போல் இரு மடங்கு விலையுள்ள இந்த ரெட்டுத் துண்டை எந்த மூடனாவது போய் வாங்குவானா?'

'இக் கேள்வியை நீ இப்பொழுது கேட்பது ஆயிரத்து ஒன்றாவது தடவை. இதற்கு நானும் எத்தனையோ தடவைகள் உனக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். கதர்த்துணி மெல்லியதாக இல்லை யென்றால் அது

செய்பவர்கள் குற்றமாகாது. சரியாக ஆதரிப்பவர்கள் மாத்திரம் இருந்தால் கதர் டாக்கா மஸ்லினையும் தோற்கடித்துவிடும். இப்பொழுதுதானே அது சிறு குழந்தை நிலையில் இருக்கிறது. சரியாக வளர்ந்துவிட்டால்—'

'வளரட்டுமே. யார் வேண்டாம் என்கிறார்கள்? தக்க பருவம் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம். அதற்குள் நாம் ஏன் அவசரப்பட வேண்டும்?'

'போஷிப்பில்லாமல் எப்படி வளரும்? நம்முடைய குழந்தையை நாம்தானே காப்பாற்ற வேண்டும்?'

'போய்ப்போயும் அதற்குத்தானே மறுபடியும் வருகிறீர்கள்? கடைசியாகச் சொல்லுகிறேன். கதர் என்னும் பேச்சு இங்கு இனிமேல் வரவேண்டாம். உங்களுக்கும் சொல்லுகிறேன். அந்த ரெட்டுத் துணி அழகாயில்லை. நைஸான மில் துணி இருக்கிறது. விலையும் சரசம்.'

இதைக் கேட்டவுடன் எனக்குச் சிறிது இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. இத்தனை நாட்களாக லலிதா நான் சொன்னவைகளைக் குறித்து ஏளனம் செய்தோ குயுக்தியாகப் பேசியோ கதரை எதிர்த்து வந்தாளே தவிர இன்றுபோல மில்துணியை ஆதரித்துப் பேசியதில்லை. நான் அவளுக்குக் கதரைக் குறித்துப் பிரசங்கம் செய்யப்போய் அவள் எனக்கு மில் துணியைக் குறித்துப் பிரசங்கம் செய்யவந்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நான் இத்தனைக்கும் கதர்ப் பிரசாரத்தில் தேர்ந்த ஒரு தொண்டன் என்பதை எண்ணிய பொழுது என் வெட்கம் என்னை யறியாது அவ்விடத்தினின்றும் என்னை விரட்டியது. நான் பேசாது என் அறையில் சென்று உட்கார்ந்துகொண்டு பல மணி நேரம் யோசித்துக்கொண்டிருந்தேன். லலிதா கதரைக் குறித்த மட்டில் எனக்கு எதிரிதான். மற்ற விஷயங்களில் லலிதாவுக்கு எவரும் நிகரில்லை என்பதுதான் எனது அபிப்பிராயம். லலிதா லலிதத்துவத்தை விரும்புகிறாள். நான் விடுதலையை விரும்புகிறேன். தற்போது தேசமிருக்கும் நிலைமையில் இவ்விரண்டும் எப்படி ஒத்து வரும்? கடைசியில் என் மூளை என்னைக் கைவிடவில்லை. ஒரு தந்திரம். லலிதா, அதையும் ஜெயித்து விட்டால், நான் பேசாது எனது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

அன்று பகலில் போசனம் செய்துவிட்டுச் சென்ற நான் மாலையில் வேண்டும் என்றே வெகு நேரம் கழித்து வீடு திரும்பினேன். என் மனைவி காரணம் கேட்டாள். பல சம்பந்தமற்ற விஷயங்களைப் போட்டு மழுப்பினேன். அன்றிரவு சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குச் செல்ல மணி 11 ஆகிவிட்டது.

இரவு. தூக்க மயக்கத்தில் மணி தெரியவில்லை. என் மனைவி என்னைத் தட்டி எழுப்பினாள். 'கோமளம்!...கண்ணே!....என் இந் நேரத்தில் எழுப்புகிறாய். இரவிலும்கூடவா தீரவில்லை! இன்னும் விடியவில்லையே! பேசாது போய்த் தூங்கு' என்று கூறிச் சினந்தேன். லலிதா, 'ஜன்னி ஜுரம் கண்டிருக்கின்றதா என்று சந்தேகம். சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள எழுப்பினேன். என்ன இந் நேரம் பிதற்றிக்கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்டுக் கொண்டே அடங்கி யிருந்த விளக்கைத் தூண்டி விட்டு என் கட்டிலண்டை வந்து நின்றாள். நான் என் தலையைத் திருப்பிக் கொண்டு 'நானா பிதற்றினேன்! கனவு கண்டாயா? தூக்க மயக்கம் போலும். போ. விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொள். நமச்சிவாயனும் விழித்துக் கொள்ளப் போகிறான்' என்று சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் சந்தேகம் உண்டாகாதவிதம் எல்லா விஷயங்களையும் குவித்து ஒரு கலம்பகம் விளைத்தேன். லலிதாவின் கண்கள் கோபத்தினால் சற்று சிவந்திருந்ததை விளக்கு வெளிச்சத்தில் நான் குறிப்பாகக் கவனித்தேன். அவள் பேசாது விளக்கை யணைத்துவிட்டு போய்ப் படுக்கையில் படுத்துக்கொண்டாள். அச்சமயத்தில்தான் நமச்சிவாயனைச் சந்தியில் இழுத்திருக்காவிட்டால் என்பாடு அம்பலத்திற்கு வந்துவிட்டிருக்கும் என்பதை லலிதா பெருமூச் செறிவதினின்றும் அறிந்தபொழுது என் குலதெய்வத்திற்கு ஒரு கும்பிடு போடாமல் இருக்க முடியவில்லை.

மறுநாள் காலை. காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். லலிதா பேச்சுப் போக்கில் என்னை நோக்கி 'கோமளம் என்பவள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டாள். நான் எங்கோ ஒரு வெறும் மூலையைப் பார்த்துக்கொண்டே 'ஏன்? அவளைப் பற்றி இப்

பொழுது என்ன?' என்றேன். 'அவள் எனது பால்ய சினேகிதி. உங்களுக்குத் தெரியுமா என்னமோ என்றுகேட்டேன். வேறொன்றும் இல்லை' என்றாள் லலிதா. நான் நாடகம் ஆரம்பமாகிவிட்டது என்று தீர்மானித்துக்கொண்டே 'ஓ! நன்றாகத் தெரியும். கொஞ்சம் உயரமாக இருப்பாள். அழகு நடை. சடை பின்னிவிட்டிருக்கும். அவளைத்தானே நீ கேட்பது? அவளும் எமது தொண்டர் படையில் ஒரு அங்கத்தினள். கதர்ப் புடவை—' என்றேன். அதற்குள் லலிதா உள்சென்று மறைந்தாள். அவள் திரும்பி வந்தபொழுது இரண்டு துளி கண்ணீர் தன் வேலையைச் சரிவர செய்திருக்கிறது என்று அறிந்துகொண்டேன். அவள் கன்னத்தின் மீது பூசியிருந்த முகப் பவுடர் கொஞ்சம் அழிந்திருந்தது.

வெளியிற் சென்றிருந்து பகலில் வீட்டிற்குத் திரும்பியபொழுது லலிதா என் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அதன் உறை கிழிக்கப்பட்டிருந்தது. கடிதத்தை நான் கையில் வாங்கிக் கொண்டு லலிதாவை உறுத்துப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள். நான் என் அறைக்குச் சென்று கடிதத்தைப் பிரித்து வாசித்தேன். கோமளம் என்னை மறு நாள் பொதுஜன ஸ்தலத்தில் நடக்கும் பிரசங்கத்திற்கு வரும்படி என்னைக் கட்டாயப்படுத்தி அதில் எழுதியிருந்தாள். நான் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்த சமயத்தில் அறைக்கு வெளியில் கேட்ட வளையல் ஒலியினின்றும் இரண்டு கண்கள் மத்தியில் இருந்த சுவற்றையும் துளைத்து என்னைக் கவனித்து வருவதாகத் தெரிந்தது.

* * *

மறுநாள் காலை வரையில் இங்குக் குறிக்கக்கூடிய யாதொரு விசேஷமும் நடைபெறவில்லை. ஒப்புக்குச் சப்பாணி கொட்டித்தான் ஆக வேண்டும் என்றால் 'லலிதா அது வரையில் ஒரு மாதிரியாக—கோபமும் துக்கமும் கலந்து—இருந்தாள்' என்று சொல்லிவிட்டு மேலே போக வேண்டியதுதான். என்றும் இல்லாத மாதிரியாக அன்று லலிதா என்னுடன் பிரசங்கத்திற்கு வருவதாகச் சொன்னாள். அதற்கு நான் 'கதர் ஆடை யில்லாது நீ மற்ற ஸ்திரீகளுடன்—துள்ளிய கதரணிந்து வந்திருக்கும் மற்றவர்களுடன் எப்படி சங்கோஜ மில்லாது உட்கார்ந்திருப்பாய்? அப்படி வருவதாக இருப்பினும் உன் சிநேகிதிகள் எவ்வளவோ பேர் வருகிறார்கள். அவர்களுடன் வா' என்று சொல்லி அவள் என்னுடன் வருவதைத் தடுத்து விட்டேன்.

அன்று மாலை மணி ஏழு இருக்கும். வீட்டில் நுழைந்தவுடன் திடுக்கிட்டேன். இல்லை. திடுக்கிட்டது போல் காட்டிக் கொண்டேன்.

இந்த அங்கத்தில்தான் நாம் நமது முழு சாமர்த்தியத்தையும் காட்ட வேண்டும் என எண்ணிக் கொண்டே உள் நுழைந்தேன். லலிதா மத்திய அறையில் ஒரு நாற்காலி மீது உட்கார்ந்து கொண்டு விம்மிவிம்மி அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் இடையை அலங்கரித்துக் கொண்டிருந்தது நீல நிறக் கதர்ப் புடவை. அப்புடவையின் முந்தானை அவள் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள மிக்க உதவியாக இருந்தது. நான் பரபரப்புடன் உள்ளே ஓடி 'லலிதா! என்ன இது? ஏன் அழுகிறாய்? நான் உன்னைக் கூட்டிக்

கொண்டு போகவில்லை என்று வருத்தமா?—' என்று வார்த்தைகளை அடுக்கினேன். லலிதாவோ வாய் திறந்து பேசுவதைக் காணவில்லை. 'மௌனம் கலக நாசம்' என்னும் பழமொழியை அப்பொழுதுதான் படித்தாளோ என்னமோ! நான் அவளை ஆற்றுப் படுத்த உபயோகித்த சொற்களெல்லாம் அவள் துக்கத்தை அதிகப் படுத்தின போலும். முன்னைவிட இப்பொழுது அதிகமாக அழ ஆரம்பித்தாள். மறுபடியும் நான் 'நீ காரணம் தெரிவியாது அழுவது எனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது. இக்கதராடை உனக்கு ஏது? இதற்காகவா அழுகிறாய். இந்த ரெட்டுத் துண்டை எங்கே வாங்கினாய். நீ இவ்வளவு வருத்தப்பட்டுக் கொண்டு கதர் அணிய வேண்டும் என்னும் கட்டாயம் ஒன்றும் இல்லை. மில் துணியே நீ உடுத்திக்கொள். இதற்காக அழுவானேன்? என்ன என்றாலும் இச்சேலைக்குக் கம்பிக்கரை போட்டவன் மிக்க கைதேர்ந்த வேலைக்காரனே' என்று கேலியாகவும் குத்தலாகவும் மொழிந்தேன்.

இதற்குள் இது வரையில் இசை கூட்டிக் கொண்டிருந்த நமச்சிவாயம் தன் குரலை உயர்த்தித் தன் தாயாருடன் ஒக்கப்பாட ஆரம்

பித்தான். நான் அவனைத் தூக்கி நிறுத்தி 'ஏண்டா அம்மா அழுகிறாள்?' என்று கேட்டேன். நமச்சிவாயம் தான் பாடுவதை சிறிது நிறுத்தி, 'அம்—மா உஊம் அம்மா—வுக்கு என்னை அடிச்சா. கதர் பொடவை வேணும்மா உஊம்' என்றான். நான் எனக்கு வந்த சிரிப்பை யடக்கிக் கொண்டே நமச்சிவாயனைத் தட்டிக் கொடுத்தேன். லலிதாவின் கோபம் இப்பொழுது பன்மடங்கு அதிகமாயிற்று. 'யாரை நம்பினாலும் ஆண்களை மாத்திரம் நம்புதல் கூடாது.' உங்கள் நெஞ்சின் மீது கை வைத்துச் சொல்லுங்கள். என்மீது உங்களுக்கு அன்பு உண்டா?' என்று பொங்கி வரும் தன் அழுகையை அடக்கிக் கொண்டு கேட்டாள். 'லலிதா! உன் மீதிலா? உன் மீது எனக்கு இருக்கும் அன்பிற்கு எனக்கு மாத்திரம் பாட்டு செய்யத் தெரிந்திருந்தால் உன்னைக் குறித்து பாட்டுக்கள் எழுதி எழுதிக் குவித்து விட்டிருப்பேனே. ஏன்? என் மீது உனக்கு சந்தேகமாக இருக்கிறதா?' என்றேன் நான். லலிதா 'அன்பு' முழுவதும் பொய். எல்லாம் பகல் வேஷம். கெட்டிக்காரன் திருட்டு எட்டு நாளைக்குத் தான். அதிருக்கட்டும். கோமளத்திற்கும் உங்களுக்கும் எந்த விதத்தில் சம்பந்தம்?' என்று கோபத்துடன் கனன்றாள். இவள் இப்படி என்னை அலக்கழிப்பாள் என்று மாத்திரம் எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் நான் இந்நாடகத்தை ஆரம்பித்தே இருக்க மாட்டேன். நான் சற்று சமாளித்துக் கொண்டு 'யார்' கோமளமா? அன்று நான் கதர்ப் புடவை கட்டிக் கொண்டிருப்பாள் என்று சொன்னேனே அவள் தானே? அவள் இன்னாள் என்று எனக்குத் தெரியாது. உன்னை இப்பொழுது பார்த்தால் எனது கோமளம் மாதிரி—கதர்ப் புடவை கட்டிய கோமளம் மாதிரி இருக்கிறாய். உன்னைத்தான் அப்பொழுது சொன்னேன். கோமளம் என்று எனக்குத் தெரிந்தவர்கள் வேறு யாருமே இல்லை' என்றேன். லலிதா 'இதையெல்லாம் யாரைப் பைத்தியமாக்கச் சொல்லுவது? முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்து வைக்கும் கதையை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருக்கிறீர்களா? உங்கள் சொற்களைக் கேட்குந்தோறும் அக்கதைதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. இப்பொழுது நான் கேட்டது கதர்ப் புடவை கட்டிய கோமளத்தை அல்ல. தங்கள் தொண்டர் படையில் இருக்கும் கோமளத்தை. இன்று பிரசங்கத்திலும் தங்களை ஆதரித்துப் பேசினாளே அவள்' என்றாள் கோபத்துடன். நான் சிரித்துக் கொண்டே 'தொண்டர்ப்படையிற் இருந்து கொண்டு இன்று என்னை ஆதரித்துப் பேசியவள் பெயர் கோமளம் அல்ல. கமலினிதான்—கோமளம் தொண்டர் படையைச் சேர்ந்தவள்—என்று கூறியது நீ அதில் அங்கத்தினளாகச் சேர வேண்டும் என்னும் எனது பெரு நோக்கத்தைத்தான் காட்டுகிறது' என்றேன்.

லலிதா கடைசியாக விடுவதற்கென்று வைத்திருந்த பாசுபதாஸ்திரத்தை எடுத்து 'நேற்று வந்த கடிதம். அதையும் மறைக்க முடியாதே! அதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? என்று தன் ஜெயத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டு இறுமாப்புடன் கூறினாள். இக்கேள்வியைத்தான் நான் இதுவரையில் எதிர்பார்த்திருந்தது. 'அக்கடிதத்தை நானே எழுதினேன். கையெழுத்தைக்கூட நீ கவனிக்கவில்லையா? இத்தனையும்—அன்று தூக்கத்தில் நான் பிதற்றியதும், மறுநாள் கடிதம் வந்ததும், உன்னைக் கதர்ப் புடவை அணியச் செய்ததும் யாவும்—உன்னைச் சீர்திருத்த முன் கூட்டிச் செய்த சூழ்ச்சிகள். கோமளம் புதிதாக என்னால் சிரு .க்கப் பட்டவள். கோமளமும் லலிதாவும் ஒருவரே. கடைசியாக என் சூழ்ச்சிகள் யாவும் பலித்து உன் இடையில் கதராடை பிரகாசிப்பதைக் கண்டு நான் மிக்க மகிழ்கிறேன். பெண்கள் எதைப் பொறுத்த போதிலும் தம்முடைய கணவர் பிற மங்கையரை நாடுவதை மாத்திரம் எள்ளளவும் சகிக்கமாட்டார்கள். இத்தன்மையை யறிந்துதான் நான் நீ என் மீது சந்தேகம் கொள்ளும்படியாக நடித்தேன். எனது திருட்டுக் காதலி கோமளத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்னும் பேராவில் நீ வம்பென வெறுத்து வந்த கதரை அணிந்து கூட்டத்திற்கும் வந்து விட்டாய். உன்னை நான் அங்குக் கவனிக்காமல் இருக்கவில்லை. எங்கே இப்பொழுது என் முகத்தைப் பார்த்து இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு பார்க்கலாம். இப்பொழுது வெற்றி யாருடையது?' என்று பல சொல்லி ஒரு கேள்வி கேட்டேன். லலிதா பிணங்கிக் கொண்டே! இதைக்கூட கேட்க வேண்டுமா? வெற்றி என்னுடையதுதான். தோல்வி உங்களுடையதுதான். நான் உங்கள் மீது கொண்ட சந்தேகம்தானே இந்நாடகத்திற்கு அடிப்படை! என்று சாதுர்யமாகக் கூறி நகைத்தாள்.

என் வெற்றி கடைசியில் இப்படியா ஆக வேண்டும். அட சந்தேகப் பேயே.

மாஜிஸ்ட்ரேட்:—நீ நன்னடத்தை யுள்ளவனென்று யார் நிரூபிக்கக்கூடும்?

பிரதிவாதி:—போலீஸ் இன்ஸ்பெக்டர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் அழைக்கப்பட்டார். அவர் பிரதிவாதியைத் தனக்குத் தெரியாதென்றார்.

மாஜி:—போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உன்னைத் தெரியாதாமே.

பிரதிவாதி:—இருபதுகால வருஷம் போலீஸார்கள் கீழ்வாமலிருப்பது தகுந்த அத்தாக்ஷியல்லவா. —பி. என். நரசிம்மன்

பிளட்பிரஷர்

[டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்]

பிளட்பிரஷர் என்பது இரத்த[illegible] அதிகமாகத் தலையிலும் மூளையினிட[illegible]யும் செல்லும் ஒரு வியாதி.

இந்த நோயைக் குணப்படுத்துவது இயலாதென்பது அறிவுடைய ஆங்கில வைத்தியர்களின் கருத்தாகும். நான் சில நாட்களுக்கு முன் ஒரு எம். பி. பி. எஸ் பரீட்சையில் தேறிய ஆங்கில வைத்தியரிடம் பேசினபோது பிளட்பிரஷர் என்னும் வியாதியைக் குணப்படுத்தி விடலாம் என்று சொன்னேன். அதற்கு அவர் பதில் சொன்னபோது பிளட்பிரஷர் என்னும் வியாதியை மருந்தால் குணப்படுத்த முடியாது. எங்களிடமும் நல்ல மருந்து இருக்கின்றது. அம் மருந்தைக் கொடுத்தவுடன் மயக்கம் முதலான குணங்கள் மாறி இரத்த ஓட்டத்தின் வேகமும் குறைந்து விடுகின்றது. ஆனால் அம் மருந்தை நாங்கள் உபயோகிப்பதில்லை. அதற்குப் பதிலாக பட்டினி போட்டு விடுகிறோம். இராச் சாப்பாட்டை நிறுத்தி விடுகிறோம் கொழுப்புள்ள ஆகாரத்தைத் தள்ளிவிடச் சொல்கிறோம். அதாவது உளுந்து, மாமிசம், உருளைக் கிழங்கு ஆகிய இத்தகைய ஆகாரத்தைத் தடுத்துவிடச் செய்கிறோம். இவ்வகையில் குணம்போல காணப்பட்டாலும் மரணம் சம்பவித்து விடும் என உறுதியாய்ச் சொன்னார். அன்றியும் மூளையினிடத்தில் ஏற்பட்ட அவ்வியாதி எக்காரணத்தாலும் குணமடையாது எனப் பலமாய்ப் பேசினார். ஆதலால் ஆங்கில வைத்தியர்கள் எவராயிருப்பினும் இதுபோன்ற அபிப்பிராய முடையவர்களாகவே இருப்பார்கள் என்பது நிச்சயம்.

சுயதேச வைத்தியர்கள் இதை ஒப்பமாட்டார்கள் என்பது உறுதி. ஏனெனில் அவர்களுக்கு இரத்தக் கொதிப்பின் காரணம் நன்றாய்த் தெரியும். ஆதலால் சுலபமாய் அவ்வியாதியை நீக்கிவிடலாம் என்று நினைக்கின்றனர். இதற்குக் காரணம் யாதென ஆராயுமிடத்தில் இரு பாகுபாட்டாளர்களின் கருத்தும் உண்மை எனவே புலப்படுகின்றது.

ஆங்கில முறையாளர்கள் பிளட்பிரஷர் என்னும் வியாதி மூளையினிடத்திலிருந்து உண்டாகும் ஒரு வியாதி என்றும் இதனால் மயக்கம் ஏற்படும் என்றும் ஆராய்ந்திருக்கின்றனர். அதன்படி நோயையும் கருதி சிகிச்சை செய்வதுடன் இரத்த ஓட்டத்தைக் குறைக்கப் பட்டினி போடுகின்றனர். மூளையினிடத்திலிருந்து வேலை செய்யும் நாம்புகள் முள்ளந் தண்டின் பக்கமாய் நீர்ப்பை முதலான இடங்களுக்குச் செல்லுவது முறை. இம் முறையில் இந்தியர்கள் நீர்ப்பையில் இருக்கும் மேகப்புண் காரணமாய் நரம்பின் மூலம் மூளைக்குச் சென்று இரத்தத்தைக் கொதிப்பேறச்செய்து மயக்கம் முதலான துன்பங்கள் உண்டாவதாகக் கருதி நீர்ப்பையின்பால் ஏற்பட்டுள்ள தோஷத்தை நீக்க மருந்து கொடுக்கின்றனர்.

ஆங்கில வைத்தியர்கள் மூளையினிடத்தில் இருக்கும் உஷ்ண இரத்தத்தை முன்னிட்டு வியாதி சம்பவிக்கின்றது எனக் கருதி ஆகாரத்தைக் குறைத்து தேகப்பயிற்சியைச் செய்வித்து இரத்தக் கொதிப்பைக் குறைக்க முயற்சிக்கின்றனர். இவர்களின் சிகிச்சையால் மூலகாரணம் ஆராயப்படாததால் நோய் நீங்குவதில்லை. மேலும் சில நாட்களில் மாணமும் சம்பவிப்பது நிதரிசனமாய் இருப்பதால் இந்நோய் அசாத்தியம் எனக் கருதுகின்றனர். தவிர பிளட்பிரஷரால் அபாபிளசி என்னும் நோய் உண்டாவதாகவும் கூறுகின்றனர். (இரத்த ஓட்ட நாம்புகள் பிளத்தல்)

பிளட்பிரஷர் வியாதிகாரர்களுக்கு விரோசன மருந்து கொடுத்தால் குணமாகக் காணப்படுகின்றது. ஆனால் அது பெரும் தவறாகும் என இரு வகுப்பு சிகிச்சைக்காரர்களும் ஒப்புக் கொள்கின்றனர். இந்திய வைத்தியத்தின் சிறப்பைக் காட்டக் கருதியே இவ்வியாசம் எழுதலானேன். அடுத்த இதழில் பிளட்பிரஷர் என்னும் நோயை இந்தியர்கள் எவ்வகையில் ஆராய்ந்து சிகிச்சை செய்து சம்பூரணக் குணத்தை உண்டாக்குகின்றார்கள் என்பதின் விவரத்தை எழுதுகிறேன்.

சென்னையில் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் ஒரு சாமியார் சூளை செங்கல்வாராய நாயக்கர் பூந்தோட்டத்தில் இருந்தார். நான் 1908-வது வருடத்திலிருந்து 1916-வது வருடம் வரையில் அந்த சுவாமிகளின் கூட இருந்ததால் எனக்குத் தெரிந்தவரையில் சுவாமிகளின் சரித்திரத்தை எழுத முற்படுகிறேன். இம் மாத இதழில் இடமின்மையால் அடுத்த மாதத்திலிருந்து தொடர்ந்து எழுதுகிறேன்.

முத்தம் தாராய் மோகனமே!

[திரு. கே. ஸ்ரீனிவாஸ் பி. ஏ,]

பிளாட் பாரம் எங்கும் ஒரே அமளி. ஒய்யாரமாய் நடக்கும் மோகனாங்கியை எல்லோரும் விழுங்கி விடுவதுபோல் பார்த்தனர்.

ஆண்மைத் தனத்துடன் ஒரு கை பார்ப் பேன் என்று சபதம் கூறும் விழிகள்! யோகத் துயிலில் மூழ்கிய தவசிகளையே காமத்தில் துடிக்கச்செய்யும் பார்வை கள்.

பிளாட்பாரம் டிக்கட்டுகள் காலியாயின. சரேலெனப் பாய்ந் தனர் வாலிபர்.

மோகனாங்கி கலங்கவில்லை. தீர்க்கமாய் எல்லோர்க்கும் தரி சனம் அளித்தாள்.

இவ்வடியார்களில் ஒருவர் ராசிபூர் ஜெமீன். சற்று குஷா லாகவே அவளை நோக்கினார்.

தளுக்கு நடை! ஒய்யார பார்வை! ஹா! என்ற சப்தம் கேட்டது.

அவர்மேல் துரோக எண்ணம்கொண்ட பூட்ஸ் ஒரு வாழைத் தோலின்மீது நர்த்தனம் புரிய ஆரம்பித்தது.

அடித்தார் ஜமீன் ஒரு பல்டி! விழுந்தார் மோகனாங்கி மீது!

மோகனாங்கி அவரைச் சரேலெனத் தன் மார்பில் சாற்றிக் கொண்டனள்.

அன்பு ஜமீன் கண்களில் ஜொலித்தது. 'கண்ணாட்டி!' என்று பிதற்றிய வண்ணம் நோக்கினார்.

ஒரு சிரிப்பு!

ரெயிலும் வந்துவிட்டது. இருவரும் முதல் வகுப்பு வண்டியில் ஏறிக் கொண்டனர்.

காதல் வெள்ளம் உடையும் தருணம்.

'முத்தம் தாராய் மோகனமே' என்று கொஞ்சிக்கொண்ட மோகனாங்கியைத் தம்மார்புடன் தழுவினார் ஜமீன். எண்ணிலா முத்தங்கள்.

இன்னும் இறுகத் தழுவி, 'காதற் களஞ்சியமே! நீயே என் கடவுள்!' என்று கூறி அவள் கன்னத்தை நெறுடியவண்ணம் இன்பம் நுகர்ந்தார்.

முத்த மழையும் ஓய்ந்தது. மோகனாங்கியின் உடம்பு வலி யும் தீர்ந்தது.

'ஆருயிர்க் காதலா!' என்ற வள் கண்கள் கெஞ்சின.

'நீயே ஸ்வர்க்கம்! நீயே கைலாசம்!' என்றார் ஜமீன்.

மோகனாங்கி அவரை நோக்கி னாள். முகமெல்லாம் பௌடர் போட்டிருந்தது.

முத்தம் என்ன ஒன்று இரண்டா?

கட்டுக் கடங்கா காதலில் ஜமீன் அவளை அணைந்துகொண்டு இன்ப சாகரத்தில் மூழ்கினார்.

'கண்ணே! எனக்குத் தூக்கம் வருகிறது. கொஞ்சம் சயனித் துக் கொள்கிறேன்!' என்று சொல்லிப் படுத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தார்.

இரு விழிகள் நக்ஷத்திரங்களபோல் ஜொலித்தன. அதற் கப்பால் ஜகஜ்ஜோதி. ஜமீன் தம் மோகனாங்கியுடன் அப்மின்னல் பூமியில் நிற்பதுபோல் தோன்றிற்று. இருவரும் ஓடிவிளையாடினர். மோகனாவை ஒரு வால் நக்ஷத்திரம் நெருங்கிற்று. அவள் அதன் மேல் குதித்து மாயமாய் மறைந்தனள். துடிதுடித்தார் ஜெமீன்.

'மோகனு!' என்று அலறிக்கொண்டே எழுந்தார். சுற்றிப் பார்த்தார். அவளைக் காணும். பெருமூச்சு விட்டார். மனம் பதைபதைத்தது.

'மோகனு! மோகனு!' என்று அலறினர். பதிலில்லை.

ஒரு வேளை அற்பசங்கிக்குப் போயிருக்கலாம்! பத்து நிமிடங்கள் சென்றன. விபரீதம்தான்! தம் பையைத் தொட்டுப் பார்த்தார்! 'ஐயோ' என்று வீரிட்டார். பத்தாயிரம் ரூபாய் வைத்திருந்த தம் 'பர்ஸ்' களவாடப்பட்டிருந்தது.

விபரீத சந்தேகம் அவரைத் தாக்கியது. லெட்ரினை நெருங்கினர். கோபத்தில் தட்டினர். பதிலில்லை.

வெகுண்டு ஆவேசத்துடன் தட்டினர். மறுநிமிடமே கதவு திறந்தது.

திடீரென்று ஒரு திடகாத்திர வாலிபன் வெளிக்கிளம்பி அவர் மேல் ஒரு துணி மூட்டையை எறிந்தான்.

சரேலெனப் பாய்ந்து 'அலாரம் செயினை' இழுக்கவே வண்டி நின்றது.

மறுநிமிடம் மாயமாய் மறைந்தான் கள்வன். அம் மூட்டையில் மோகனுங்கியின் பெண்வேஷத் துணிகளும், 'எஸ். ஐ. ஆர். நாடகம்' என்று வரையப்பட்டிருந்த சீட்டிருப்பதையும் கண்டு திகைத்து நின்றூர் ஜமீன்.

தமிழ்த்தாய் துயரம்

[மீ. ந...]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

208535 சென்னை-600 008

'அப்பனே, நான் இத்தனை ஆயிர வருஷங்களாக இவ்வளவு கஷ்டங்களையும், போராட்டங்களையும் எதிர்த்தும் இன்னும் இளமையுடனேயே இருக்கிறேன். இன்னும் இருப்பேன். எனக்கு நித்தியமான யௌவன முண்டு. ஆதலால் நான் எப்பொழுதும் புதுமையைத் தேடுபவள். அதை என் மக்கள் அறியாதிருக்கிறார்கள். இளமையும், புதுமையும் எப்பொழுதும் கலந்து வாழும் தன்மையுடையன. எனது இளமையை அறிந்த என் மக்கள் எனது புதுமையையும் அறிவர்' என்று தமிழன்னை என்னிடம் கூறிய பொழுது நான் முடிவாக அவள் கடலிலிருந்து வந்த காரணத்தை மறுபடியும் கேட்டேன். அதற்கு அவள், 'யான் சொல்லுவதைக் கேள். நாட்டில் என்னால் இருக்க முடியவில்லை. என் ஆதிக்கம் பெற்றதாலன்றோ? சமூகத்தை, நாட்டை ஆள்வதாலன்றோ? எல்லோரும், என் மக்களும் என்னைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களுக்கு என் மீது விருப்பமில்லை. என்னை ஆதரிக்கச் சிந்தையில்லை. புதுமைகளில் என்னைக் காண வேண்டுமென்று அவர்கள் கருதவில்லை. ஆகவே, எனக்கு நாட்டில் என்ன வேலை? ஆனல் அவர்கள் எந்த நிமிஷம் என்னை அழைக்கிறார்களோ, என்னை விரும்புகிறார்களோ அந்த நிமிஷமே அவர்களுடன் சென்று வாழ விரும்புகிறேன். தமிழ் நாட்டில் நானலைந்த அலைச்சலையும், நான் பட்ட பாட்டையும் ஒரு சிறிது கேட்பாய். தேவாலயத்திற்குச் சென்றேன். அங்கு இறைவனுக் கடுத்தாற் போல் நடமாடுந் தெய்வமென்று என் மக்கள் கருதும் பிராமணர் என்னைப் பொருட்படுத்தவில்லை. வாவென்றுகூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. மூலஸ்தானத்திற்கு அடுத்தாற் போல் நில்லென்று, சொல்லி விட்டார். மனம் நொந்து வெளியே வந்து, இரு அழகிய காதலர்களின் திருமணப் பந்தலுக்குள் சென்றேன். பக்குவமான இளமை. கந்தர்வ அழகு. ஆனல் என் மக்கள். அவர்களாவது என்னை வரவேற்பார்களென்று நம்பினேன். அவர்கள் என்னை விரும்பினர்களானலும் அங்கிருந்த பிராமணர் என்னை மணவறைக்கு அப்பால் நிறுத்தி விட்டார். புனிதமான திருமணம். இரு உயிர்களின் நித்தியமாக வாழ்க்கை ஒன்றுபடும் வேளை. என் மக்கள். இந்தச் சமயமும் நான் புறக்கணிக்கப் பட்டேன். தலை

குனிந்து வெளியே சென்றேன். என் முற்கால வாழ்வை நினைந்து உருகினேன். நாட்டுப்புறங்கள் எல்லாம் சுற்றினேன்.

கலாசாலைகளுக்குச் சென்றேன். அந்தோ! என்னிளங் குழந்தைகள், அறியாப் பாலர்கள். அப்பாலர்களுக்குப் பாவிகள் என் பெயரைக்கூடச் சொல்லிக் கொடுக்கவில்லை.

மாற்றாந்தாய் வசப்பட்ட மக்கள் கதியில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கண்டதும் என் இதயம் வெடிக்கும்படியான துக்கம் மேலிட்டது. பின்னர் நாட்டை ஆளும் பல ஸ்தாபனங்கள், காரியாலயங்களுக்குச் சென்றேன். அங்கும் என்னைத் தீண்டுவார் இல்லை. கடைசியாக சென்னை நகர் வந்து சேர்ந்தேன். இதுதான் சர்க்காரின் தலைமை ஸ்தலம். இங்குள்ள ராஜாங்க சபைகள், சட்ட சபைகள், கலாசாலைகள், வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், நீதிமன்றங்கள், பிரமுகர்களது வீடுகள், முதலிய இடங்களுக்குச் சென்றேன். ஒரு சமூகத்தின் உயிர் போன்ற முக்கியமான இவ்விடங்களிலெல்லாம் என்னை மதிப்பார் கிடையாது. நாடகசாலை, சங்கீதக் கச்சேரி, கதைக் கச்சேரி முதலியவைகளுக்குச் சென்றேன். அங்கும் தெலுங்கும் சம்ஸ்கிருதமும் எனக்கு முன்னால் வந்து நிற்கின்றன. படக்காட்சி சாலைக்குப் போனேன். என் வாசனை அங்கும் அதிகமாய்க் கிடையாது.

முடிவில் ஒரு சமூகத்திற்கு உயிர் போன்ற என்னையே உயிர் நாடியாகக் கருதி, என்னாலேயே என் நாட்டிற்கு நலனும் என் மக்களுக்கு ஜீவ சக்தியும் உண்டாகுமென்று கருதி உழைக்கும் பத்திரிகா நிலையங்களுக்குச் சென்றேன். அங்கு என் அருமை மக்கள் நான் படும் பாடே படுகின்றனர். என் செய்வது? ஆனால் அவர்கள் எனக்காகப் படும் பாட்டைக் கண்டு என் துயர் ஒருவாறு கொஞ்சம் ஆறுதலுற்றது. அந்தோ! என்னை நசுக்க வந்த ஆங்கில சகோதரிக்கு வந்த மகத்தென்ன? ஏன்? அவள் பெற்ற மக்கள் அரசியல் மீது அன்பு பூண்டு எனக்காகத் தன் ஆயுளைத் தத்தம் செய்த ஓர் வாலிபன் சிறிது நாட்களுக்கு முன் பெரிய வீட்டில் கலியாணஞ் செய்ய விரும்பினார். அந்தோ அவர்கள் முதலாவது அவனைக் கேட்ட கேள்வி. அவன் ஆங்கிலம் படித்திருக்கிறானா வென்பதே? ஆங்கிலத்திற்கே மதிப்பு. ஆங்கிலத்திற்கே பெருமை. ஆங்கிலம் படித்தாலே பணம். ஆங்கிலம் படித்தாலே பெண். ஆங்கிலம் படித்தவர்களே நாகரிகர். இதனால் நான் என் ஆங்கில சகோதரியைப் பழிக்கிறேன் என்று எண்ணி விடலாகாது. அவள் மக்களின் ஊக்கத்தால், வீரத்தால், அறிவால் அவள் இங்ஙனம் பிரகாசம் அடைந்திருக்கிறாள். ஆனால் நான் என் தமிழ் மக்களிடமே இக்குறையைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன்? அந்நிய பாஷைக்கே

தமிழ் மக்கள் தங்கள் சிந்தனைகளைத் தத்தம் செய்து விட்டால் சமூகம் அந்நிய மதமாகி, தமிழ் வகுப்பினரும் தரணியில் இல்லாது மறைவர் என்பது திண்ணம். நிற்க, நான் சென்றவிடமெல்லாம் என்னை அவமதித்தும் புறக்கணித்தும் விட்டார்கள் என்று சொன்னேனல்லவா? முடிவாக நான் தெருத் தெருவாக, மூலை முடுக்குகளில் அலைந்து திரிந்தேன். அங்குச் சில பண்டிதர்களும், சில சபையினரும் என்னை நினைத்துப் புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்டேன். எனக்கு ஒரு பக்கம் துக்கமும் ஒரு பக்கம் நகைப்பும் வந்தது. ஏனெனில் அவர்கள் என் இளமையை அறிந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் என்னை உண்மையில் பழைய காலத்து மனுஷியாகவும், முதிர்ந்த வயதுள்ளவளாகவுமே கருதுகிறார்கள். ஏனென்றால் என் இளமையை அவர்கள் உண்மையில் உணர்ந்தார்களேயானால், நான் சமூகமெங்கும் பரவி இயங்கும் தேவதை என அவர்கள் அறிந்தார்களேயானால், கட்டாயம் எனது புதுமையின் விருப்பை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். என்னைப் பாரமார்த்திகப் பெண் என்று கருதுகிறார்கள். ஆனால் நான் லௌகிகப் பெண்ணாகவும் இருக்கிறேன். பூத பௌதிக சாஸ்திரர்கள் யந்திர, ரசாயன சாஸ்திரர்கள் இன்னும் பல லௌகீக சாஸ்திரங்களைப் பற்றி என் மூலம் சிந்திக்கவும், பேசவும், விவாதிக்கவும், எழுதவும் என் மக்கள் சக்தியற்றவர்களாக ஆகி விட்டார்கள். மனிதன் நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்றவன். எனது இளமையுடன் என் மக்கள் எனக்கும் புதுமையை யளித்து என்னை ஆதரிப்பார்களேயானால் நான் அவர்களுக்கு அளவிலா இன்பம் பயப்பேன் என்பதற்குச் சிறிதளவும் ஐயமில்லை. இங்ஙனம் என் மக்கள் செய்யும் நாளைப் பார்த்துக் கொண்டு புறக்கணிக்கப்பட்ட நான், இச்சமுத்திரத்தில் வந்து ஏகாந்தமாக என் நாட்டையும், என் ஜனங்களையும், அவர்களை ஆளுபவர்களையும், என் சக்களத்தி ஆங்கில மாதையும் பார்த்து ஏங்கிய வண்ணமாக இருக்கிறேன். ஆனால் மகனே, உன் போன்ற இளைஞரின் ஊக்கத்தாலும், விடா முயற்சியாலும், தீரத்தாலும் பழையபடி நான் முன்னிலும் பதின்மடங்கு ஒளிபெற்று உங்கள் யாவருக்கும் இன்பம் அளிப்பேன் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. சரி போதும், மணி ஒன்றாகி விட்டது. வீடு சென்று நாளை திரும்பி வா. இன்னும் நடைபெற வேண்டிய விஷயங்களைப் பேசிக் கொள்வோம். மகனே, ஊக்கந் தளராதே! என்னைக் கைவிட்டு விடாதே. இன்னுஞ் சிறிது நாட்களில் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறேன். உன் போன்ற இளைஞர்களிடம்தான் என் குறைகளைத் தெரிவித்து அவர்களது மயக்கத்தைத் தெளிவுறச் செய்வேன்' என்று சொல்லி மறைந்தனள்.

அம்புஜம்

[திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை]

அம்புஜம் வாஸ்தவத்தில் மிக்க எழில் வாய்ந்து அகண்டு பிரகாசிக்கும் நேத்திரங்களோடு விளங்கும் ஒரு நங்கை நல்லாள். சௌந்தரியத்திற்கேற்ற வண்ணம் அவளிடம் குணமும், கலையும் பொருந்தியிருந்தன. குழந்தைப் பருவம் முதற்கொண்டே தன் தந்தை சிதார் (ஓர் வாத்தியக்கருவி) வாசிக்கும் பொழுது அருகிலுட்கார்ந்து கொண்டு கவனித்து வருவாள். வயதாக ஆக இவளும் சிதாரிற் பயின்று தனது தந்தைக்குச் சமமாகத் தேர்ச்சியடைந் திருந்தாள்.

இவளது தந்தை இறந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகவே அக்குடும்பம் அதிக கஷ்டங்களுக் குள்ளாயிற்று. வயிற்றை வளர்க்கும் பொருட்டு அம்புஜத்தின் தாய் தையல் வேலை செய்து வந்தனள். அம்புஜம் புத்திக் கூர்மை யுள்ளவளா யிருந்ததால் தன் தாயின் கஷ்டங்களை யறிந்து பள்ளிக்கூடம் போவதை நிறுத்தினாள். சிதாரை ஓர் மூலையில் சாற்றி, தன் தாய்க்குத் தையல் வேலையில் உதவி புரிந்து வந்தாள். வீணை வாசித்து வந்த அவளது விரல்கள் இப்பொழுது தையல் வேலையில் அமர்ந்திருந்தன.

இங்ஙனமாக ஒரு நாள் அம்புஜம் தன் தாயுடன் தையல் வேலை செய்து கொண்டு இருந்த பொழுது இவளுடன் பள்ளியிற் பயின்று வந்த குணவதி அங்கு வந்து, அன்று தன் வீட்டில் ஏதோ விசேஷமாக விருந்ததால் சிதார் வாசிக்கும் பொருட்டு அம்புஜத்தைச் சீக்கிரமாகத்

தன் வீட்டிற்கு வரும்படி வேண்டிக் கொள்ள, அவளும் தன் தாயின் அநுமதியின் பேரில் வருவதாக இசைந்தாள்.

அம்புஜாவும் குணவதியும் ஒரு பள்ளியிற் பயின்று வந்தார்களென்பது வாஸ்தவமே. ஆனால் அவ்விருவருடைய ஸ்திதிகளும் மிகவும் வேறுபட்டிருந்தன. குணவதியின் தந்தை கங்காதர முதலியார் கீர்த்தி பெற்றவரா யிருந்ததுமன்றி ஒரு பெரிய செல்வந்தராகவுமிருந்தார். அம்புஜம் ஒரு குடிசையில் வசித்து வந்தனள். குணவதியோ ஒரு மாளிகையி லிருந்தனள். ஜரிகை வஸ்திரங்களாலும், வைர நகைகளாலும் குணவதி தன்னை அலங்கரித்திருந்தனள். ஆனால் அம்புஜத்தினிடமோ கிழியாத வஸ்திரம் ஒன்றேனுமில்லை. குணவதி சென்றபின் அம்புஜம் தன் தையல் வேலையை நிறுத்தி அறைக்குட் சென்று தன் வஸ்திர மூட்டையை யவிழ்த்து ஒவ்வொன்றாய்ப் பார்த்தாள். கடைசியில் அதிலிருந்த இரண்டு மூன்று புடவைகளிற் கொஞ்சம் சுமாராயிருந்த ஒன்றை யெடுத்துக் கட்டிக் கொண்டனள். அப்படிப்பட்ட வஸ்திரத்தைத் தரித்து தனவந்தரது வீட்டிற்குச் செல்ல லஜ்ஜை கொண்டாளாயினும், வருவதாக ஒத்துக்கொண்டபின் என்ன செய்வது? பிறகு தன் தந்தையின் புகைப்படத்தை மிக்க அன்புடனும் ஆதரவுடனும் நமஸ்கரித்து சிதாரை தூக்கிக் கொண்டு கங்காதரம் அவர்களின் வீட்டை நோக்கி நடந்தாள்.

அங்கே மாடியில் தனக்காக விடப்பட்டிருந்த இடத்திலுட்கார்ந்து சிதாரை மீட்டினாள் அம்புஜம். விலை மிக்க வஸ்திர ஆபரணங்களால் அலங்கரித் துட்கார்ந்திருந்த ஸ்திரீகள் அம்புஜத்தை நோக்கியவண்ணம் ஒருவர்க்கொருவர் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அம்புஜம் தரையை நோக்கிய வண்ணஞ் சிதாரை மீட்டித் தன் குரலை வெளியிட்ட மாத்திரத்தில் எங்கும் நிசப்தமே நிலைத்தது.

அது நிற்க, கங்காதா முதலியாரின் குமாான் குலசேகரனும் அம்புஜத்தின் சங்கீதத்தைக் கேட்கும் பொருட்டு உற்சாகத்துடன் காத்திருந்தான். குலசேகான் வைத்திய கலாசாலையிற் பயின்று வந்தான். அக்கலாசாலையில் நான்கு வருடப் பரீக்ஷைகளிலும் தேறியிருந்தான். கடைசி வருடப் பரீக்ஷையே மீதியாயிருந்தது. அம்புஜம் தன் மனைவியாகும் பட்சத்தில் தனது வாழ்நாட்கள் முழுவதையும் அவளது முகத்தை நோக்கிய வண்ணம் அவளது மதுரமான சங்கீதத்தைக் கேட்டவண்ணம் கழிக்கலாமென எண்ணுவான். ஆனால் தன் மனத்தை ஒருவருக்கும் வெளியிடத் தைரியமில்லா திருந்தான். அப்படி வெளியிட்டிருந்த போதிலும், அவனது தந்தை அதற்குக் கொஞ்சமேனும் சம்மதப்பட்டிரார். குபேர சம்பத்துள்ள குலசேகரன் எங்கே! ஏழைப் பாட்டுக்காரியாகிய அம்புஜமெங்கே!

'இப்பெண் வாஸ்தவத்தில் நன்றாக வாசிக்கிறாள்' என்றார் கங்காதா முதலியார்.

'ஆமப்பா, சிதார் சிவஞானம் அவர்களின் விரல்களைவிட இவளது விரல்கள் நன்றாய்ப் பேசுகின்றன' எனப் பகர்ந்தான் அருகில் வீற்றிருந்த குலசேகான்.

அதனிடையில் அம்புஜம் சங்கீதத்தை முடித்து சிதாரைக் கீழே வைத்தனள். உடனே குலசேகான் தன்னை யாரோ பர்வதத்தினின்றும், பாதாளத்தில் தள்ளிய வண்ணம் வேதனைக்குள்ளானான். கங்காதா முதலியார் தன் குமாரி குணவதியை யழைத்து, 'உன் அம்புஜத்துக்கு இன்று என்ன சம்பாவனை செய்வதாக உத்தேசித்துள்ளாய்?'. என விசாரித்தார்.

'கிரீப்மி மோசாவில் (Crepe mimosa) புடவை யொன்று இவளுக்குக் கொடுக்க வேண்டி அம்மா வாங்கி வந்துள்ளாள்.'

'சரி, அத்துடன் ஐந்து பவுனுங் கொடு. சங்கீதத்திற்கேற்ற வண்ணம் அவளிடம் குணமும் பொருந்தி யிருக்கின்றது' என்றார் கங்காதா முதலியார்.

அந்தச் சமயத்தில் தனது கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அம்புஜத்துக்குப் பரிசாகக் கொடுத்துத் தன் பிரேமையை வெளிக்காட்ட குலசேகான் உத்தேசித்தான். ஆனால் தன் தந்தைக்கு முன் அக்காரியத்தைச் செய்யக்கூடிய தைரியங் கொண்டவனல்ல அவன்.

அம்புஜம் தொகையைப் பெற்றுக்கொண்டு மாடியை விட்டுக் கீழே சென்ற பின் குலசேகானும் கீழே யிறங்கி அம்புஜம் வீட்டிற்குச் செல்லும் பொழுது அவளது தரிசனங் கிடைக்குமென்றெண்ணி வாசற் கதவருகிற் காத்திருந்தான். அங்குக் கூடியிருந்த ஸ்திரீகளெல்லோரும் சென்றார்களாயினும், அம்புஜம் மாத்திரம் அவனது திருஷ்டிக்குப் புலப்படவில்லை. பாவம்! அம்புஜம் தன் சிதாரை எடுத்துக் கொண்டு எப்பொழுதோ பின் புறக்கடை வழியாகத் தன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

*   *   *

இது நிகழ்ந்த சின்னாட்களுக்குப் பின் கலைமகள் விழா கொண்டாடும் நாளும் கூட, அவ்வூரிலுள்ள ஸ்திரீகளெல்லோரும் ஒன்றுகூடி திருமதி வத்ஸலா அவர்களின் தலைமையின் கீழ் ஒரு பாட்டுக் கச்சேரி நடத்த ஏற்பாடு செய்தார்கள். முதலிற் சில பள்ளிப் பெண்கள் கும்மி அடித்துப் பாடினார்கள். பிறகு பற்பல ஸ்திரீகள் ஒவ்வொருவராகப் பாடினார்கள். கடைசியாக அம்புஜம் சிதாரைக் கையிலெடுத்து மீட்டிப் பாடிய மாத்திரத்தில் அங்கிருந்த ஸ்திரீகள் பிரமிப்பும் ஆனந்தமு மடைந்தார்கள்.

இங்ஙனமாக அம்புஜம் அரை மணி நேரம் பாடியான பின், கச்சேரியும் முடிவு பெற்றது. பிறகு அவளுக்குக் கிடைத்த சொற்ப வெகுமதியைப் பெற்று, சிதாரைக் கையிற் பிடித்துத் தன் வீட்டை நோக்கி நடந்தாள். அப்போது வழியில் குலசேகான் அவனது மோட்டாரை அவள் சமீபமாய்க்கொண்டுபோய் நிறுத்தி 'அம்புஜா! வண்டியி லுட்கார். நான் உன்னை வீட்டில் விட்டுச் செல்கின்றேன்' என்றான்.

அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்கள் பார்க்கும் பட்சத்தில் பிரமாதமாக முடியுமென அவளறியாதவளல்ல. ஆனால் குலசேகானது வேண்டுகோளை மறுக்க முடியாமல், வண்டியி லுட்கார்ந்தாள். வண்டி கொஞ்சதூரம் செல்லவே, அவ்விதந்தனித்து வண்டியில் வருவதால் வீண் அபவாதங்களுக்குத் தானுள்ளாக வேண்டியிருப்பதை அவனுக்கு ஸ்பஷ்டமாய்ப் புலப்படும்படி பகர்ந்தாள். கடைசியாக நீர் நிறைந்த நேத்திரங்களுடன் 'நீரோ பெரிய அந்தஸ்திலுள்ளவர். தாம் என்ன செய்தாலும் பிரமாதமாகத் தோன்றாது. ஆனால் என்னைப்போலுள்ள ஏழைகள் இப்படிச் செய்வது தகாது' என்றாள்.

அதற்குக் குலசேகரன் 'ஆம் அம்புஜம்! ஊர் வாயை மூட உலை மூடியில்லை. எனினும், நான் வீட்டையடைந்தவுடனே உன்னையே மணம் புரிவேனென எல்லோரிடமுஞ் சொல்லப் போகிறேன்' என்றான்.

'நானும் அவ்விதமே நிச்சயித்துள்ளேன். ஆனுல் உமது தந்தை இதற்குச் சம்மதிப்பாரா? இவ்வேழைப் பெண்ணைத் தமது புத்திரனுக்கு மணஞ் செய்விப்பாரா' என்று பரிதாபமாகக் கேட்டாள் அம்புஜம்.

'நான் என் தாயிடம் இதை விவரமாகத் தெரிவிக்கப் போகின்றேன். காந்திமதியை எனக்கு மணமுடிக்க நிச்சயித்துள்ளார்களாயினும், நான் எனது நிச்சயத்தை அவர்களுக்குச் சொல்லி, கடவுளறிய உன்னை நான் வரிக்கவே போகின்றேன்' என்றுன் குலசேகரன்.

இப்படிப் பேசி முடிந்த மாத்திரத்தில் வண்டியும், அம்புஜத்தின் வீட்டினெதிரில் நிற்க அவளை அங்கே விட்டு, குலசேகரன் தன் வீட்டிற்கு வண்டியைத் திருப்பி விட்டான்.

வீட்டை யடைந்தவுடன் குலசேகரன் தன் மன முடிவைத் தனது தாயிடம் வெளியிட்டான். அவனது தாய் கண்ணம்மாள் இதற்குக் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லை. ஜமீன்தார் ஜகநாதரின் புதல்வி காந்திமதியையே தன் மருமகளாயடைய அவள் இச்சை கொண்டிருந்தனள்.

மறுநாள் கண்ணம்மாள் தன் பதியுடன் குலசேகரனது இச்சையையும், அதைத் தடுக்கத் தான் செய்யப்போகும் ஏற்பாட்டையும் சவிஸ்தாரமாகச் சாற்றினுள். முதலியார் அவர்களும் யுக்திக்குச் சம்மதித்தார்.

பின்னர் அன்று மாலை கண்ணம்மாள் அம்புஜத்தைத் தன் வீட்டிற் கழைத்து வந்து, காந்திமதியைச் சுட்டிக் காட்டி, 'அம்புஜம்! இவள்தான் ஜமீன்தார் ஜகனுதரின் புதல்வி காந்திமதி. இவளை நமது குலசேகரனுக்கு மணம் புரிவிக்க நிச்சயித்துள்ளேன். கலியாணத்திற்கு இன்னும் பத்து நாட்களே யிருக்கின்றன. நாங்கள் இங்கே நிச்சயித்திருக்குஞ் சங்கதியை குலசேகரன் அறியாததால், அவன் உன்னிடம் நேற்று அவ்விதம் சொல்லிவிட்டானுகையால், அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்படி என்னை வேண்டிக் கொண்டான். இவன் மிகவும் இளகிய மனமுள்ளவனுகையால், உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும்

தைரியமில்லாதிருக்கிறுன். அன்றியும், இவன் எப்பொழுதாவது ஏதாயினும் உன்னிடம் சொல்லியிருந்தாலும், அதை வாஸ்தவமென நினைக்க நீ அவ்வளவு பைத்தியக்காரியல்ல வென்றே நம்புகிறேன். அம்புஜம்! இப்போது கூறியவைகளை அறிவிக்கவே நானுன்னை அழைத்தது. இதற்காக நீ வருந்த மாட்டாயென்றும் எனக்குத் தெரியும். இனி குணவதியுடன் சற்று நேரம் உல்லாசமா யிருந்துவிட்டு நீ செல்லலாம்' என்றுள்.

இவ் விஷயங்களை எல்லாம் கேட்ட மாத்திரத்தில் அம்புஜம் பிரமைகொண்டு ஸ்தம்பித்து நின்றுள். கண்கள் சுழன்றன. உடல் சிலிர்த்தது. கண்ணம்மாளுக்கு என்ன பதிலளிப்பதென்றறியாது தவித்தனள். குலசேகரனது வஞ்சனையை நினைத்தாள். அவன் அவ்வளவு வஞ்சகனுக இருப்பானுவெனச் சமுசயித்தாள்.

பின்னர் ஏழை அம்புஜம் மனவேதனையைச் சகித்து, குணவதியைக் கண்டு விட்டு, வீட்டையடைந்து, படுக்கையிற் படுத்து கண்ணீர் உதிர்த்தனள். அன்று அவள் உண்ணவுமில்லை. தன் வேதனையின் காரணத்தைத் தாயினிடம் கூறவுமில்லை. மறுபடியும் குலசேகரன் இன்று அல்லது நாளை திரும்பிவந்து தன் துக்கத்தை நிவர்த்தி செய்வானென்ற வீண் ஆசை மட்டும் ஒவ்வொரு நாளும் அவளுக்கு இருந்து வந்தது. பத்தாம் நாள், மாலை வேளையுஞ் சமீபித்தது. கங்காதர முதலியார் வீட்டின் மங்கள வாத்தியத்தொனி அவளது காதில் விழுந்தது. அச்சமயமே அவள் மனத்திலிருந்த ஆசை முழுதும் இருந்த இடந்தெரியாது மண்ணிற் கவிழ்ந்தது. அதுவரை ஜனங்கள் அவளைக் குறித்துச் சொல்லிவந்த அபவாத வார்த்தைகளைத் தான் குலசேகரனை அடையப்போவதுண்மை' என்ற ஆசையாற் சகித்து வந்தாள். அதிக நேரம் கண்ணீர் வழிய யோசித்தழுதாள். தன் வேதனையை நீக்க வேறொரு மார்க்கமும் தெரியவில்லை. கடைசியாகத் தான் சகிக்கொணுத மனவேதனையினின்றும் தப்ப ஒரு வழி கிடைத்தது.

மறு நாட் காலை அம்புஜத்தின் தாய் அதிக நேரஞ் சென்றும் தன் மகள் எழுந்திராததால் அவளை யெழுப்பச் சென்ற பொழுது அந்தோ! அவள் தன் படுக்கையிற் பிணமாய்க் கிடந்தாள். அவளது ஆத்மா சுவர்க்கத்தை யடைந்து எவ்வளவோ நேரமாயிற்று. ஆனுல் அவளது சிதாரோ அவளது பக்கத்திற் கிடந்தது. ஆ! குலசேகரா, நீயோ மணமகனுகி காந்திமதியுடனிருக்கிறுய். உன்னை நம்பி நாசமடைந்த அம்புஜமோ பிணமகளாகக் கிடக்கிறுள். இவ்வித ஸ்திரீ காதகத்திற் காளாகும் உன்னைப் போன்றவர்களுக்குப் பாரதமாதா நற்கதி யளிப்பதேது?

தொந்திச் செட்டியாரின் திருவிளையாடல்கள்

[ஸ்ரீமதி ஜே. இராஜாம்மாள்]

என் நேச சிறுவர்களே, சிறுமிகளே!

கனம் பொருந்திய திருமங்கலம், கோவிந்த செட்டியார் சரித்திரத்தை இங்குப் பேரானந்தத்துடன் எழுதுகிறேன். இவர் திருமங்கலத்தில் ஓர்பெரிய மளிகைக் கடை வைத்திருக்கிறார். இவர் தம்முடைய திறமையால் வியாபாரத்தில் மிகுந்த லாபமடைந்து இவ்வூரில் ஓர் பிரபல வியாபாரியாகத் துலங்குகிறார். இவருக்குச் சிறந்த மாளிகையும் நல்ல மனைவியும் வேண்டிய ஊழியர்களும், செல்வாக்கும், சம்பத்தும் இருக்கின்றன. இவருக்குச் சரீரத்திலேயே ஒரு பெரிய பொக்கிஷம் இருக்கிறது. அதுதான் அவருடைய கொழுத்த தொந்தி. அவ்வூர்ப் பையன்கள் இவர் கடைவழியாய்ப் போகும்போது இவரைப்பற்றி 'தொந்திச் செட்டியார்' என்று கேலி செய்துகொண்டு போவார்கள்.

ஒரு நாள் நமது செட்டியாரை அவர் கடையில் சந்தித்தேன்.

செ-ர்:—வாருங்கள், என்ன விசேஷம்?

நான்:—என்ன செட்டியார்வாள்! க்ஷேமந்தானா?

செ-ர்:—க்ஷேமந்தான். எல்லாம் உங்கள் தயவால்தான். எனக்கு ஒரு குறை யிருக்கிறது.

நான்:—அதென்ன! என்னிடம் சீக்கிரம் சொல்லுங்களேன்.

செ-ர்:—பாருங்கள் என் தொந்தியை. இதனால் எனக்குச் சங்கடம். ஜாஸ்தி பாரமாகவு மிருக்கிறது. அநேகர் கேலியும் செய்கிறார்கள்.

நான்:—என்ன செட்டியார்வாள், இதற்குத்தானா வருந்துகிறீர்கள். நான் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். உங்கள தொந்தி முன்னுக்குத் தள்ளி யிருக்கிறதே. ஆகையால் நீங்கள் அநேகரைவிட முன்னுக்கு வந்திருக்கிறீர்களே. இதெல்லாம் உங்கள் தொந்தியின் யோகந்தானே.

செட்டியார் விழுந்து விழுந்து சிரித்தார். அவரோடு அவர் தொந்தியும் சிரிப்பதுபோல் கூத்தாடியது. பிறகு வேறு விஷயங்

களைப் பற்றிப் பேசிவிட்டு நான் செட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்டேன். தொந்தி விழுந்தது அவர் குற்றமா? சரீரத்தில் விழுந்த தொந்தி கீழே விழவேண்டுமென்று அவர் விரும்பினாலும், முடியுமா! மண்டை பெருத்திருந்தாலும் மூளை ஜாஸ்தியிருக்கிறதென்று பெருமை பாராட்டலாம். வயிறு பெருத்திருந்தால் அதற்கு என்ன சர்டிபிக்கேட் கொடுப்பது?

ஒரு வேளை தொந்தி அவருக்குக் கனத்தைக் கொண்டு வரும். மகிமை என்கிற கனமல்ல, பாரம் என்கிற கனமாய்த்தான் இருக்கும். கடையில் உட்கார்ந்திருக்கும் செட்டியாருக்குத் தொந்தியைத் தூக்கிக்கொண்டு எழுந்திருப்பது பிராண வேதனையா யிருக்குமாம். கடையில் வாங்க வருபவர்கள் சில்லரை கொடுக்கும்போது காசுகள் தவறி மடியில் விழுந்துவிட்டால் அதை எடுப்பது மகா கஷ்டமாய் இருக்குமாம். தொந்தி மறைப்பதால் கீழேபார்க்கவும் முடிகிறதில்லையாம். இப்படி அவருக்குத் தொந்தி ஓர் பெரிய சுமையாக இருந்தது. அதுவும் நீக்க முடியாத சுமையாகத்தான் இருந்தது.

செட்டியார் ஒரு நாள் சாயங்காலம் மலபாதைக்குப் போயிருந்தார். ஊருக்குச் சற்று தூரத்தில் ஒரு பனங்காட்டில் அவர் தமது காரியத்தை முடித்துக்கொண்டு பக்கத்தி லிருந்த குளத்தில் இரண்டு நிமிஷம் தாமதித்து விட்டுத் தமது வீட்டுக்குத் திரும்பினார். அப்போது இருட்டுகிற வேளையா யிருந்தது. அச் சமயத்தில் மழை பெய்தபடியால் செட்டியார் ஓர் மரத்தின் அடியில் தங்கினார். திடீரென்று இடி பலமாய் இடிக்கவே அவர் நடுங்கிப்போய் மூர்ச்சையானார். அச்சமயம் அந்தவழியாய் ஒரு வண்ணான் தன் மூட்டையுடன் வந்து மழைக்காக அந்த மரத்தி னடியில் தங்கினான். அவன் தன் மூட்டையைச் செட்டியாருக்குப் பக்கத்தில் ஆறடி தூரத்தில் வைத்துவிட்டு சற்று எட்டிப்போய் உட்கார்ந்தான். செட்டியார் அங்கே விழுந்திருந்ததை அவன் கவனிக்கவில்லை.

கால்மணி நேரமாயிற்று. மழை நின்றது. வண்ணான் புறப்பட்டுப் போகும்படித் தன் மூட்டையை எடுக்கப்போய்க் கண்தெரியாமல் செட்டியாரின் தொந்தியை இரு கைகளாலும் பிடித்துத் தூக்கப் போனான். செட்டியார் விழித்துக்கொண்டார்.

செ-ர்:—டேய் யாரடா அவன்? எட்டிப்போ திருட்டுப் பயலே.

வண்:—நானா திருட்டுப்பயல்? நீதான் திருட்டுப்பயல். என் மூட்டையை விடுகிறாயா இல்லையா?

செ-ர்:—கையை எடடா. சொல்லுகிறேன்.

வண்:—முடியாதடா. முதலில் மூட்டையை விடு சொல்லுகிறேன்.

செ-ர்:—அடே இது மூட்டையல்ல. என் வயிறுதான்.

வண்:—நான் அதை வெளிச்சத்தில் பார்க்க வேண்டும் வா ஊருக்கு.

செ-ர்:—என் வேஷ்டி அவிழ்ந்துவிட்டது. ஐந்து நிமிஷம் கையை எடுத்துவிடு என்று சொல்லவும் வண்ணான் தன் கைகளை எடுத்தான். செட்டியார் எழுந்து நின்று தமது வேஷ்டியைக் கட்டிக்கொண்டார். வண்ணானுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. அவன் செட்டியார் தன் எஜமானனென்று அறிந்தான். செட்டியாரும் அவன் தன் வீட்டு வண்ணானென்று கண்டு கொண்டார். பிறகு வண்ணான் தன் மூட்டையை எடுத்துக்கொண்டு செட்டியாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போனான்.

சில நாட்கள் சென்ற பிற்பாடு செட்டியார் தமது வியாபார விஷயமாக மதுரை போகும்படி டிக்கட்டு எடுத்துக்கொண்டு ரயிலேறப் போனார். அவரென்ன பாவம் செய்தாரோ தெரியவில்லை. வண்டியின் வாசல் வழியாய் அவரால் நுழைய முடியவில்லை. தொந்தி அவரைப் போகவிடமாட்டேன் என்றது. செட்டியார் பாவம், தவித்துக்கொண்டிருந்தார். ஸ்டேஷன் பிளேட் பாரத்திலும் வண்டிக்குள்ளும் இருந்த ஜனங்கள் கொல்லென்று சிரித்தார்கள். செட்டியாருக்கு வெட்கம் ஒரு பக்கம், அவஸ்தை ஒரு பக்கம், கோபம் ஒரு பக்கம், வெறுப்பு ஒரு பக்கம். நாலாபக்கத்திலும் 'தகாறு அன்ட் ஸன்ஸ்' இருந்தது. செட்டியார் பக்கமாக நுழைந்தும் பார்த்தார். உள்ளே போக முடியவில்லை. இந்த சந்தடி என்னவென்று பார்க்கும்படி ரெயில்வே கார்ட் அங்கே வந்தான்.

கார்ட்:—என்ன செட்டியார்வாள்! உள்ளே போக முடியவில்லையா? எஞ்சின் நிலக்கரி வண்டியில் ஏற்றி வைக்கிறோம். போய் ஏறச் சம்மதமா? என்று மிகவும் குஷியாகக் கேட்டான். அப்போது சிரிப்புத் தொனி காதடைப்பதுபோலிருந்தது. செட்டியார் மிகுந்த கோபத்துடன் டிக்கெட்டை கார்டின் முகத்தில் வீசி எறிந்துவிட்டு வீட்டுக்கு விரைவாகப் போனார். வீடு சேர்ந்ததும் மிகுந்த வெட்கத்தினால் ஒரு வாரம் தலையை வெளியே காட்டவேயில்லை. வெளியே தலையைக் காட்டினாலும் தொந்தியைக் காட்டவே கூடாதென்று தமது மனைவியினிடம் சொன்னார். அவர் தொந்தியிலேயே வயிற்றெரிச்சல் மும்முரமாயிருந்தது. அந்தோ! தொந்தியைக் காட்டாமல் தலையை மட்டும் எப்படிக் காட்டுவது? வெளியே வந்தால் தொந்தியும் கூடத்தானே வருகிறது. இதை எழுதும் எனக்கும் அளவு கடந்த நகைப்பால் நமது கதாநாயகராகிய தொந்திச் செட்டியாரின் சரித்திரத்தை இன்னும் விரிவாக எழுதக் கைவரவில்லை. ஆகையால் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.



குச்சுக்காரி

[இளங்கோவன்]

அன்றிரவு சந்தித்த பெண்ணை நான் என்றும் மறக்க முடியாது.

உலகத்தில் சிலர், வாழ்க்கையில் வலிய வந்துற்ற மகத்தான துயரங்களை எவ்வளவு பொறுமையுடன் சகித்து வருகின்றார்கள் என்பதை அந்த இரவு எனக்கு உணர்த்தி விட்டது.

இரவு மணி பதினொன்று. மழையும் ஓய்ந்து விட்டது. ஆனால் காந்த விளக்குகளின் அழுகை மட்டும் ஓய்ந்த பாடில்லை.

அப்போதுதான் நான் சினிமாவினின்றும் திரும்பிப் போய்க் கொண்டிருந்தேன்.

பட்டணத்து வீதிகளில் வழக்கம்போல் குச்சுக்காரிகள் தங்கள் வியாபாரத்தை நடத்திக்கொண்டிருந்தனர். கதவுகளினருகிலும், வாயிற்படிகளினருகிலும், நடுவீதிகளிலும் இந்தக் கோஷ்டியினரில் பலர் நின்றுகொண்டு, தெருவழியே போகும் மனிதர்களை வந்தனங் கூறி வரவேற்றுக்கொண்டிருந்தனர். அதோ, அவர்களிற் சிலர் தெருவழியே போகும் மனிதன் பின் வலிய தைரியமாகச் சென்று அவனிடம் ஏதோ தகாத வார்த்தைகளைச் சொல்ல, அவன் வெறுப்படைந்து 'தூ' என்று காரி உமிழ்ந்து போய் விட்டான். ஆ!

அந்தப் பெண்கள் அப்போது வைத சொற்கள், கொடுத்த சாபங்கள், தோன்றிய காட்சி பயங்கரமானவைகள்.

நான் அவ்வீதியில் காலெடுத்து வைத்ததுதான் தாமதம்! என் சொக்காயைப் பத்துப் பன்னிரண்டு பேர்கள் பிடித்து இழுத்தார்களென்றே நினைக்கிறேன். அந்தச் சமயம் திடீரென்று மூன்று பெண்கள் பயத்தால் அலறிக் கொண்டு ஓடுவதைக் கண்டேன். விஷயம் விளங்கி விட்டது. போலீஸ்காரர்கள் விபசாரிகளைத் துரத்துகின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அப்போது என் தோளின்மீது மெல்லிய கரமொன்று விழுந்ததை உணர்ந்தேன்.

'என்னைக் காப்பாற்றுங்கள்.........ஐயோ, என்னைக் கைவிடாதீர்கள்' என்றது ஓர் குரல். அவசரமும், படபடப்பும், அச்சமும், ஏமாற்றமும் அக்குரலில் கலந்திருந்தன.

நான் திரும்பிப் பார்த்தேன். அங்கு என் தோளின் மீது கைபோட்டுக்கொண்டு நின்றிருந்தாள் ஓர் இளம்பெண். பெண்மையின் தேஜஸும், கன்னியெழிலின் சோபையும் அனேகமாய் மங்கிப் போன போதிலும் அவளுக்கு வயது இருபதுக்கு மேலிராது என்றே தோன்றியது.

'பயப்படாதே. நீ என்னுடனிருக்கலாம்' என்றேன்.

'வந்தனம்' என்று கூறி அவள் என்னை ஒரு பார்வை பார்த்தாள். அப்பார்வையில் நன்றியின் அறிகுறி பிரதிபலித்தது.

பின்னர் அந்தத் தெரு வழியாகவே நானும் அவளும் நடந்து செல்லலானோம். ஓர் சந்தண்டை வந்ததும், 'நீங்கள் என்னுடன் வருகிறீர்களா?' என்று அவள் என்னைக் கேட்டாள்.

'முடியாது'.

'ஏன்? நான் தங்களை என்றைக்கும் மறக்க முடியாத அளவுக்கு உதவி செய்திருக்கிறீர்களே? ஏன் வரக் கூடாது?'

'இல்லை, நான் வர முடியாது. நான் கலியாணமானவன்'.

'அதனால் என்ன கெட்டு விட்டது? என்ன வித்தியாசம்?'

'அம்மா! தொந்தரவு செய்யாதே. நீ போய் உன் வேலையைக் கவனி. உன்னைப் படைத்த ஆண்டவனிடம் இரக்கத்திற்காகக் கெஞ்சு. போ அம்மா, போ'.

'ஆண்டவனா! அவன் நாசமாய்ப் போக! அவன் தலையில் இடி விழ!.........நீங்கள் வாங்கள்'.

அப்போது நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் சந்தோ இருளடைந்தது. அந்தப் பொல்லாதச் சிறுக்கியோ என்னை முத்தமிட்டு, அணைத்து, மோஹ வெறியூட்டித் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறாள். எனக்கோ அவளிடம் வெறுப்பைத் தவிர வேறொன்றும் காணோம். கொஞ்சம் கோபமான தோரணையில் பேசினாலொழிய அவள் போக மாட்டாள்போல் தோன்றவே,

'சீ, ஓடிப்போ, வெட்கமில்லையா?' என்றேன்.

ஐயோ, அம்மாதிரி நான் ஏன் சொல்ல வேண்டும்? அவள் அழத் தொடங்கி விட்டாள். நானோ சிலைமாதிரி உடல் துவண்டது. அங்கு நின்று கொண்டிருந்தேன். விஷயம் புரியவில்லை. என்ன சொல்லி அவளைத் தேற்றுவதென்பதுகூட அந்த நிமிஷத்தில் எனக்குத் தோன்றவில்லை. ஐந்து நிமிஷங்கள் கழிந்த பின்னர்,

'அம்மா! என்ன சமாசாரம்?' என்று பக்ஷத்துடன் கேட்டேன்.

கலங்கும் கண்களுடன் அவள் சொன்னாள்.

'எங்கள் வாழ்வும் ஓர் வாழ்வா? எங்கள் வாழ்க்கையின் துன்பம் மட்டும் உங்களுக்குத் தெரிந்திருந்தால்........'

'பின் நீ ஏன் இந்த வாழ்க்கையை அனுஷ்டிக்கிறாய்!'

'வேறு விதியில்லை. இது எனது குற்றமல்ல'.

'அப்படியானால் யாருடைய குற்றம்?'

அப்போது அவள் முகத்தில் ஓர்வித உணர்ச்சி தோன்றியதைக் கண்டதும், 'சரி, ஏதோ உன் சரித்திரத்தைச் சொல்' என்றேன்.

அவளும் சொன்னாள்.

* * *

'நான் ஒரு பட்டிக்காட்டில் பிறந்தேன். எனது பெற்றோர் எப்போதோ இறந்து விட்டனர். இவ்வுலகத்தில் எனக்கு உற்றாரோ, உறவினரோ, சிநேகிதர்களோ யாரும் கிடையாது. நான் ஒரு அனாதைப் பெண். எனக்கு வயது பதினான்கு. அப்போது லோகநாதர் என்பவர் வீட்டில் சமையற்காரியாக இருந்து வந்தேன். நான் படிப்பில்லாதவள். ஆனாலும் நான் ஒன்றும் தெரியாத ஊமையல்ல. பட்டிக்காட்டுப் பெண்கள் சாதாரணமாக எல்லாரும் கருதுகிறபடி அவ்வளவு முட்டாள்களல்ல. என் எஜமானர் என்மேல் கண் போட்டார். அவர் ஒரு பெரிய பக்தர். கோயிலுக்குப் போவதில் தவறவே மாட்டார்.

'ஒரு நாள்—சமையலறையில்—எனது எஜமானர் என் கரத்தைப் பிடித்திழுத்து தமது விருப்பத்தைத் தெரிவித்தார். நான் இணங்க மறுத்து விடவே அவர் பேசாமற்போய் விட்டார்.

'எங்கள் வீட்டுக்கு எதிரில் ஓர் கடை. அதில் ஓர் வாலிபன் இருந்தான். அவன் மிகவும் சுந்தரமானவன். அவன் என்னைக் கண்டு காதலிக்க ஆரம்பித்தான். முடிவில் நானும் அவனுக்கு இணங்கி விட்டேன்..............ஒவ்வொரு இரவிலும் அவனுக்காக எங்கள் வீட்டுக் கதவைத் திறந்து வைத்திருப்பேன்.

'ஆனால் ஓர் நாளிரவு நாங்கள் பேசுவதை லோகநாதர் கேட்டு விட்டார். மாடிக்கு வந்தார். என் காதலன் அம்பலத்தரசன் மீது புலிபோல் பாய்ந்தார். அவனும் சும்மா விருக்கவில்லை. இருவரும் கட்டிப் புரள ஆரம்பித்து விட்டனர். இவர்கள் செய்யும் சண்டையில் எங்கே கொலை நிகழ்ந்து விடுகிறதோ என்று நடுநடுங்கினேன். என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி சில சாமான்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி விட்டேன்.

'என் உடல் அச்சத்தால் நடுங்கியது. சண்டையிட்டவர்களில் யாரோ ஒருவர் கொல்லப்பட்டு விட்டதாக என் மனதில் தோன்றியது. போலீஸ்காரர்கள் என்னைப் பின் தொடர்வதுபோலிருந்தது...........ஓர் நாய் குரைக்கும். என் ஹிருதயத் துடிப்பு அப்போது நின்றுவிடுகிற மாதிரி இருக்கும். ஆனால் ஒரு தைரியம். நான் வந்து கொண்டிருந்த வீதி நல்ல இருளடைந்தது. யாராவது பின் தொடர்வதாகத் தெரிந்தால் சாக்கடையில் படுத்து ஒளிந்து கொள்ளலாம் என்று நிச்சயித்தேன்.

'பசி எடுக்க ஆரம்பித்து விட்டது. ஆனால் என்ன செய்வது? இந்த உலகத்தில் எனது சொந்த சொத்தாக விருந்த சில ரூபாய்களையும் லோகநாதர் வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்தது அப்போதுதான் நினைவுக்கு வந்தது. அன்று முழுப்பட்டினி.

'மறுநாள். வெயில் கொளுத்துகிறது. உஷ்ணம் பொறுக்க முடியவில்லை. அது ஒரு கிராமம். தாகம் தாங்க முடியாமல் ஓர் குடிசையண்டைப் போய் கொஞ்சம் தண்ணீர் கேட்கும் சமயத்தில், 'பூட்ஸ்க'ளின் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். இரண்டு சப்இன்ஸ்பெக்டர்கள்.

'என் மார்பு 'படக்படக்'கென்று மிக வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டது. உடல் துவண்டு விழுந்து விடுவது போலிருந்தது. ஆனால் மறுநிமிடமே என் உணர்ச்சியை யெல்லாம் சமாளித்து தைரியமாக நின்றேன். அந்த இன்ஸ்பெக்டர்கள் என்னை

உச்சியி லிருந்து பாதம் வரையிலும் ஏற இறங்கப் பார்த்தார்கள். பின்னர்,

'அம்மா, நீங்கள் எங்கே போகிறீர்கள்?'

'திரிச்சிக்குப் போகிறேன். அங்கு வேலையி லிருக்கிறேன்'

'நடந்தா போகிறீர்கள்?'

அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்ற பைத்தியக்கார எண்ணத்தால் தூண்டப்பட்ட நான் 'ஆமாம்' என்றேன்.

'நாங்களும் அந்த வழியாகத்தான் போகிறோம். தாங்களும் எங்களுடன் வண்டியில் வரலாமே. என்ன சொல்லுகிறீர்கள்?'

நான் சிக்கிக் கொண்டதை உணர்ந்தேன். அவர்களோ ஆண்கள்—அதிலும் போலீஸ்காரர்கள்...............'பெண்களுக்கு மூளையில்லை' யென்று ஆண்கள் சொன்ன போதிலும், பெண்கள் தந்திரத்தையே கையாளுகிறவர்கள்.

'நான் என்ன சொல்லப் போகிறேன்? உங்களுடன் வர எனக்குஞ் சந்தோஷந்தான்' என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

'வழியில் அவர்களுடன் மிகவும் சிநேக பாவமாகவே நடந்து கொண்டேன். அவர்கள் என்னை யாரென்று அறிந்துகொள்ளாதிருக்க வேண்டிய முறைகளை யெல்லாம் கையாண்டேன். வண்டி ஓர் காட்டினருகில் வந்து நின்றதும் சப்-இன்ஸ்பெக்டர்களில் ஒருவர், 'அம்மா காட்டினுள்போய் நாமிருவரும் சற்று நேரம் இளைப்பாறி விட்டு வருவோமே!' என்றார்.

'இப்போதும் என்னால் என்ன செய்ய முடியும்? நான் சம்மதித்தேன். நானும் அவரும் காட்டினுள் புகுந்தோம். மற்றொருவர் வண்டியிலேயே இருந்தார்.

'நீங்கள் என்னைக் குற்றம் சொல்லுகிறீர்களா? என்னால் அப்போது வேறு என்ன செய்ய முடியும்? அவன் என்னிடமிருந்து என்னென்ன எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் எடுத்துக் கொண்டான்............அப்புறம் என்னை அங்கேயே இருக்கும்படிச் சொல்லிச் சென்றான். அவன் போன சில நிமிஷங்களுக்கெல்லாம் மற்றொரு சப்-இன்ஸ்பெக்டரும் என்னிடம் வந்தான்...........அவமானத்தாலும், ஆத்திரத்தாலும் அழுதேன். ....பின்னர் திருச்சியை நோக்கிப் புறப்பட்டோம். இப்போது நான் அவர்களுடன் பேசத் துணியவில்லை. பசி அகோரமாக எரிகிறது. ஒரு கிராமமும் வந்து சேர்ந்தது. இரண்டு இட்டிலிகளை

வாங்கிக் கொடுத்து, 'வேறு வேலைகளை நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்த வழியே போ' என்று கூறி என்னை இறக்கி விட்டு இன்ஸ்பெக்டர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

'மூன்று மணி நேரம் திரிச்சியை நோக்கி நடந்தேன். இரவு எழு மணிக்குத் திரிச்சிக்குப் போனேன். அங்குப் போனதும், யாரிடம் போவது, என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பட்டணத்தில் பணக்காரா யிருப்பதைக் காட்டிலும் பட்டிக்காட்டில் பஞ்சையா யிருப்பது எவ்வளவோ மேல் என்று எனக்குத் தோன்றியது. பட்டிக்காட்டில் ஒரு ஆளுக்குச் சாப்பாட்டிற்குக் குறைவில்லை. நல்ல சுகமான காற்று—பட்சிகளின் இனிய நாதம்—ஆனந்த மயமான வாழ்க்கை செலுத்தலாம்......நினைத்து என்ன பயன்?............ என்னுடைய கால்கள் பின்னலாடுகின்றன. சற்று முன்பு தூறின மாதிரி மழையும் தூற ஆரம்பித்து விட்டது.

'ஆகவே, இதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. இதைச் செய்தேன். 'அந்த' வீதிகளுக்கு—ஸ்திரீகள் வியாபாரம் நடத்தும் இடத்திற்குச் சென்றேன். அவர்கள் ஆண்களைப் பின் தொடர்வது போலவே நானும் பின் தொடர்ந்தேன்..........முதலில் என்னுடைய வேண்டுகோளுக்கு எவனும் இசையவில்லை. வெட்கத்தால் குன்றிப்போய் விட்டேனென்றே சொல்ல வேண்டும்.......... என்ன பேசினேன், என்ன செய்தேன் என்பதே எனக்குத் தெரியாது. ஆனால் மறுநிமிடம் ஒருவன் 'நீ எங்கிருக்கிறாய்?' என்று என்னைக் கேட்டான்.

பசி என்னைச் சாதுரியமுடையவளாகச் செய்து விட்டது. உடனே நானும் தயக்கமின்றி, 'உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் செல்ல முடியாது. நான் எனது தாயாருடன் வசிக்கிறேன். இங்கு வேறு இடம் இல்லையா?' என்றேன்.

'எனக்கு ஓரிடம் தெரியும். அங்கு ஒரு தொந்தரவும் உண்டாகாது' என்றான் அவன்.

'நாங்கள் ஓர் பாலத்தின் கீழ்ச் சென்று அமர்ந்தோம்......... ....நான் மிகவும் களைப்படைந்து தூங்கிப்போய் விட்டேன்.

'நான் எழுந்தபோது அவன் எனக்காக ஒரு சல்லிகூடப் போடாமல் போய் விட்டானென்பதை உணர்ந்ததும் தெய்வத்தைச் சபித்தேன். வழக்கம்போல் வரும் 'காக்கை வலிப்பு'ம் எனக்கு வந்து விட்டது. மீண்டும் மயக்கம் தெளிந்து கண் விழித்தபோது நான் போலீஸ் கொட்டகையிலடை பட்டிருப்பதைக் கண்டேன். என் நெஞ்சம் குமுறியது. 'நாடோடித் திருட்டுச் சிறுக்கி,' என்று குற்றம் சாட்டப்பெற்று சில நாளைக்கெல்லாம் நீதிபதி முன் நிறுத்தப்

பட்டேன். எனது முக அழகைக் கண்ட நீதிபதி மனமிளகி என்னை மன்னித்து, எச்சரிக்கை செய்து, விடுதலை யளித்தார்.

'நீதி ஸ்தலத்தில் வேலை செய்து வந்த தலைமைக் குமாஸ்தா வயது அறுபதுக்குக் குறைவில்லை—அப்போது என்னிடம் ஐந்து ரூபாய்களை அளித்து, 'நீ தினந்தோறும் என் வீட்டுக்கு வந்து போனால் நிறைய இதே மாதிரி பணம் தருவேன். ஆனால் வாரத்திற்கு இரண்டு நாள் வந்தால் போதுமானது' என்றான்.

'ஆ! அந்தக் கிழக்குரங்கு! யுவர்கள் இன்பமளிக்கலாம்; ஆனால் மோசம் செய்து ஓட்டாண்டி யாக்கி விடுவார்கள். ஹிருதயத்தை மட்டும் இரும்பாக்கிக் கொண்டால் கிழவர்களிடம் ஏராளமாகப் பணம் பெறலாம். பூக்காரிபோல் வேடம் பூண்டு கிழவனிடம் போய் வந்தேன்.........நாடோறும் இரண்டு மூன்று ரூபாய்க்குப் பஞ்சமில்லை...............அந்தக் 'கொஞ்ச நாட்கள்' என் ஜீவிய காலத்திலேயே மிகமிக இன்பமயமானது. அதைப்பற்றி நான் குறைகூறவில்லை.........ஆனால் நல்ல காலந்தான் நீடித்து நிற்பதில்லையே!

'விதிப்படி வேறொரு கிழவனிடம் எனக்குச் சம்பந்த மேற்பட்டது. ஒரு நாள் நானும் அவனும் ஒரு ஹோட்டலுக்குச் சென்றிருந்தோம். ஆ! அங்குக் கிழவன் திடீரென்று நேர்ந்த மாரடைப்பால் மாண்டு போனான். நான் மீண்டும் 'கிழவனைக் கொன்றேன்' என்று குற்றம் சாட்டப்பெற்றேன். நீதிபதியோ மிகவும் மனமிரங்கி ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். சிறையிலும் இருந்தேன்.

'வெளி வந்ததும் சமூகம் என்னை அடியோடே பஹிஷ்கரிக்கிறது. அண்டிப் பிழைப்பதற்கோ ஆனதோர் இடமில்லை. 'ஐயோ' என்பாருமில்லை. சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. உயிரை வைத்துக் கொண்டிருப்பதே மிகவும் கஷ்டமாயிருக்கிறது.........சில நாட்கள் நாங்கள் பட்டினியாகவும் கிடப்பதுண்டு..........நல்லது. இது எங்கள் தலைவிதி. எங்கள் வாழ்க்கை மிகவும் கொடியது, கேவலமானது ஆனால் வேறு...........'

அவள் மௌனமாகவே கொஞ்சதூரம் என்னுடன் நடந்து வந்துகொண் டிருந்தாள். எனது உள்ளத்தை அவள் சரித்திரம் உலுக்கி விட்டது. கண்ணீர் விட்டுக் கொண்டே அவள் கையில் என்னிடமிருந்த அரை ரூபாயை வைத்தேன்.

இன்னும் நடந்துகொண்டுதா னிருந்தோம். அவள் திடீரென்று,

'அப்படியானல், என் ராஜா! நீ என்னுடன் வரமாட்டாயா?" என்ருள்.

'முடியாது. நான்தான் முன்னமேயே சொல்லிவிட்டேனே!"

'ஓ! ஹோ! சரி! சரி!! நான் போகிறேன். உன்னிடம் எனக்கு விரோதமில்லை. ஆனல் நீ செய்வது மட்டும் தவறென்று உனக்குத் தெரியும்'

என்று சொல்லி அவள் என்னை விட்டுப் போய்விட்டாள். மழை மீண்டும் தூறத் தொடங்கி விட்டது. அவள் முகம் காந்த விளக்கில் சற்று தெரிகிறது. அதோ, அவள் என் கண்முன்னின்று மறைந்துவிட்டாள்.

ஐயோ பெண்ணே! ஹிந்துஸ்தானத்தில் உன்னைப் போன்ற 'வழுக்கி விழுந்த சகோதரிக'ளின் கதி மிகவும் பரிதாபமானது தான்.



ஊரில் இருந்து வந்தவர்:—அடே கிருஷ்ணு! என்னை எப்படிடா சிக்கிரம் அடயாளம் கண்டு பிடித்து விட்டாய்?

கிருஷ்ணன்:—என் தகப்பனர் தங்களை ஒரு பீப்பா என்று மனத்தில் வைத்துக்கொள்ளச் சொன்னர்'.

—ஜி. சுப்பிரமணியம்

தட்டுவது யார்?

[ச. மு. சாமி]

பிரதி தினமும் ஓர் கிராமப் பெண் தனது பிதாவின் ஆடுமாடுகளை மந்தைக்கு ஓட்டிச் செல்வாள். அவள் பெயர் தயா.

அப்படியே தினந்தோறும் மாலையில் பாட்டுக்கள் பாடிக்கொண்டு சந்தோஷமாக வீட்டிற்குத் திரும்புவாள் தயா.

ஒரு நாள் மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும் புல் தரையில் தனிமையா யிருக்கையில் தனது இதயத்துள் ஏதோ சப்தங்கள் முழுங்கிக்கொண் டிருப்பதைக் கேட்டாள்.

அச் சப்தங்கள் எங்கிருந்து வருகின்றன? எதை விளக்குகின்றன?

மறு நாள் மாலையிலும் வழக்கம் போல் தன் இல்லத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் அழகிய ஓர் ஏரியைக் கண்டாள்.

அவ் வேரியின் வனப்பு அளவிடற்பாலதன்று. அதின்கண் உள்ள தண்ணீரை உற்று நோக்கினுள். ஓர் உருவிழித் தோற்றத்தைக் கண்டு திகைப்புற்ருள். 'கிருஷ்ணு கிருஷ்ணு' வென முழங்கும் ஓர் ஒலியும் கேட்டாள்.

மாலையில் வீடுவந்து சேர்ந்ததும், தன தன்னையைச் சந்தித்து 'கிருஷ்ணன்' என்பவன் யார்? அவன் எங்கிருக்கிருன் என்று வினவினுள்.

'கிருஷ்ணன் வாழ்க்கைக் கடவுளாகும். அவன் ஆரண்யத்தில் வசிக்கிறான்' என்று அவள் தாய் விடையிறுத்தாள்.

இரவில் தயா உறங்கினாள். அவளது எண்ணம் முழுதும் வாழ்க்கைக் கடவுளாகிய அம் முதல்வனிடமே பதிந்து கிடந்தது.

வீட்டிலுள்ளோ ரனைவரும் நித்திரா தேவியின் ஆதிக்கத்தின் கீழிருந்தனர். தயா மெதுவாகத் தனது பெற்றோர்களின் பாதங்களைத் தொட்டாள்.

தனது சகோதரர்கள் உறங்குவதை ஆதரவுடன் நோக்கினாள்.

தயா முற்றத்தில் வந்து நின்றாள். பின்னர் அவளது கண்களில் அன்பு ஒளிவீசத் தனது பெற்றோர்களையும், சகோதரர்களையும் மீண்டுமொரு முறை உற்று நோக்கினாள். நள்ளிருளில் தன்னந் தனியே வெளிச் செல்லத் துணிந்தாள். எதன் பொருட்டு? கானகத்தில் கண்ணனைக் காரிருளில் காணுதற் பொருட்டு.

அடைவி நுழைந்தாள். 'ஓ கிருஷ்ணா? நீ கானகத்தில் வாழும் வேடுவன். ஏ! வாழ்க்கை முதலே! நின்னுடன் வசித்தற் பொருட்டு ஈண்டு வந்துள்ளேன்' என மும்முறை மொழிந்தனள்.

ஆனால் 'நினது வீடு செல்! ஆரண்யத்தி லென்னை நீ காணலாகாது' என்ற சப்தங் கேட்டது.

இம் மொழிச் செவியுற்றதும், தயா அவற்றிற்குக் கீழ்ப்படிந்தவளாய்த் தன் வீடு நோக்கித் திரும்பினாள்.

பின்னர் தினந்தோறும், அவள் இதயத்தினின்றும், ஏதோ சில சப்தங்கள் எழுந்துகொண் டிருந்தன. அவற்றை அவள் கேட்டுக்கொண் டிருந்தனளே யன்றி, அவற்றின் பொருளை அவள் அறியவில்லை. சில சமயங்களில் கண்டானந்திக்கும் பொருட்டு வெளிச் சென்று நோக்குவாள். ஆனால் எவ் விதத் தோற்றமும் அவளது கண்கட்குத் தென்படவில்லை.

ஓர் தினம். உச்சி வேளை. கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

தயா, கபாடம் திறக்கச் சென்றாள். அங்குச் சென்று அவள் கண்ட காட்சி யென்ன? உடல் மெலிந்து தோல் சுருங்கியுள்ள ஓர் ஏழை விதவையின் உருவத்தைக் கண்டாள். 'அன்னையே! நினக்கு என்னால் செய்யக்கூடிய உதவி யென்ன?' என்று தயா கேட்டாள். 'நான் தாகமேலீட்டால் வருந்துகிறேன். இன்று முழுதும் எவ்வித உணவும் உட்கொள்ளவில்லை. எனது மானத்தை மறைக்கக் கந்தையும்கூட என்னிடமில்லை' எனப்பதி லுரைத்தாள்.

இம்மொழிகளைக் கேட்டதும் தயா தனது சமையலறையினுள் நுழைந்து அதிசீக்கிரத்தில் உணவு தயாரித்தாள். தனது பெட்டியைத் திறந்து சிறிது காலத்திற்கு முன் தனக்குத் தன் அன்னையால் அளிக்கப்பட்ட நேர்த்தியான கதர் வஸ்திரமொன்றை எடுத்தாள். அவ் வஸ்திரம் முக்கியமான விசேட காலங்களில், தயா அணிந்து கொள்ள வேண்டுமென்று அவளுக்கு அவளது அன்னையால் கொடுக்கப் பட்டதாகும்.

தயா தான் தயாரித்த உணவையும், தான் கொண்டு வந்த ஆடையையும் மூதாட்டியின் பாதகமலங்களில் சமர்ப்பித்து வணங்கி நின்றாள்.

பின்னர் பானத்திற்குத் தண்ணீர் கொண்டு வரும் பொருட்டுச் சென்றாள்.

திரும்ப வந்ததும் 'அன்னையே இதோ தண்ணீர்!' என்று கூறி பாத்திரத்தை யெடுத்து மூதாட்டியின் உதடுகளண்டை கொண்டு போய்ப் பருக உதவினாள். என்ன ஆச்சரியம்! மூதாட்டியைக் காணோம்! மறைந்து விட்டாள். தனது சிறு குடிசையுங் காணோம்.

திடீரென ஓர் அழகிய மாளிகை தயா கண்முன் தோன்றியது.

பல தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. எங்கும் செவிக்கினிய சங்கீத சப்தம் முழங்கிக்கொண் டிருந்தது. மாளிகை மத்தியில் கண்ணபிரான் உட்கார்ந்து கொண்டு வீணாகானம் செய்து கொண்டிருந்தார். தயா அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள். பகவான் கிருஷ்ணன் அவளது பக்தியை மெச்சி 'அவ்வேழை விதவை எனது ரூபம். நான் தாகத்தால் வருந்தினேன். நீ எனக்குத் தண்ணீர் அளித்து எனது தாகத்தைத் தணித்தாய். நான் பசியால் வருந்தினேன். நீ எனக்கு உணவளித்து எனதுப் பசிப்பிணியை யகற்றினாய். யான் ஆடையின்றி நிர்வாணியா யிருந்தேன். நீ எனக்கு ஆடையளித்து எனது மானத்தைக் காப்பாற்றினாய். நான் காட்சி கொடுத்ததே நினக்கு வெகுமதி' எனக் கூறினார்.

இதுவோர் ஒப்பனைக் கதையாகும். பசிப்பிணித் தோற்றமுள்ள கண்களோடும் இரத்தம் வற்றிய முகத்துடனும் இந்தியாவின் கதவைத் தட்டுவது யார்?

ஏழைகளின் தோழனான கிருஷ்ணன் தாகத்துடனும் பசியுடனும், நிர்வாணமாக நிற்கின்றார் என்பதைச் சிந்தனையி லாழ்த்திவாருங்கள்.

தகப்பனார்:—டே உனக்குப் பரீக்ஷையில் மொத்தம் எத்தனை மார்க்கு ?

பையன்:-மொத்தம் எனக்கு மூன்றுபரீக்ஷைகள் வைத்தார்கள். அதில் மொத்தம் 150 க்கு 100 மார்க்கு.

தகப்பனார்:—என்னமாடா !

பையன்:—முதல் பரீக்ஷையில் 1 மார்க்கு மற்ற இரண்டிலும் 0 மார்க்கு ஆக 1 ம் இரண்டு 0 சேர்த்து (100) நூறு மார்க்கு.

—என். கிருஷ்ணன்

பழிக்குப் பழி

[திரு. எம். எஸ். ராஜகோபால ஐயர்]

தான் இவ்வளவு பாலிய வயதிலேயே குடும்ப பாரத்தை ஏற்றுக்கொள்ள நேருமென்று கோபாலன் எதிர்பார்க்கவே இல்லை. ஏற்கனவே தந்தையை இழந்துவிட்ட அவன் இப்பொழுது தாயையும் பறிகொடுத்தான். எனவே, விவாகமாகி ஆறு மாதம்கூட ஆகவில்லையாயினும் அவன் தன் சின்னஞ் சிறு மனைவியுடன் புதிதாகக் குடித்தனம் நடத்த வேண்டியதாயிற்று.

கோபாலன் உயர்தரக் கல்வி கற்றவன். பதினாறு வயது நிரம்பப் பெற்றிருந்த அவன் மனைவி லக்ஷ்மியும் கல்வி அறிவுள்ளவளாயிருந்தது அவன் இல்லற வாழ்க்கையை ஓரளவு சிரமமின்றி நடத்திச் செல்ல உதவியா யிருந்தது. குடித்தனம் ஆரம்பித்த சில மாத காலம் வரையில் பல தொந்தரைகளும் சிக்கல்களும் ஏற்பட்டு வந்தமையால் அவர்களிருவரும் கூடி யோசித்து சில சட்ட திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

* * *

'அன்பரே! என்னை விவாகம் செய்து கொள்வதற்கு முன்னர் வேறெந்த மங்கை மீதாவது தாங்கள் காதல் கொண்டதுண்டா?' என்று வினவினாள் லக்ஷ்மி.

'வாயிற் கதவை யாரோ தட்டுகிறாப்போ லிருக்கிறது' என்று கூறிக் கொண்டே கோபாலன் எழுந்து சென்று சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தான்.

எவ்வித சப்தமும் தன் காதில் விழாதிருக்க, கோபாலன் அவ்வாறு கூறிச்சென்றதைக் கேட்ட லக்ஷ்மி வியப்படைந்து பதட்டத்துடன் தானிருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

'தாங்கள் கொண்டதுண்டா?' என்று லக்ஷ்மி மறுபடியும் வினவினாள்.

'எதைக் கொள்வது?'

'என்னைத் தவிர வேறெந்த மாதின் மீதிலும் காதல் கொண்டதில்லை?'

'லக்ஷ்மி? நீ அசட்டுத்தனமான கேள்விகள் கேட்கிறாயே? இப்படிக் கேட்பதனால் என்ன பிரயோஜனம்?'

'நம்மிருவருக்குள் எத்தகைய இரகசியமும் இருக்கக் கூடாதென்று நாம் சட்டம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோமல்லவா?'

'ஆமாம், இருந்தாலும் சில விஷயங்களைப்பற்றி நீ தெரிந்து கொள்ளாமலிருப்பதே மேலாகும்.'

'பார்த்தீர்களா? இந்த விஷயங்களை நான் இரகசியமென்கிறேன்.'

'நீ இதைப்பற்றி வற்புறுத்துவதாயிருந்தால்..........'

'நான் வற்புறுத்துகிறேன்.'

'நீ எதைக் கேட்டாலும் நான் ஒன்றையும் ஒளிக்காமல் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனால் என் பதிலைக் கேட்டு நீ மனம் வருந்த நேரும்.'

'அவள் பெயரென்ன?'

'நான் எத்தனை நபர்களுடைய பெயரைச் சொல்கிறதென்று தெரியவில்லையே!'

'அப்படியானால் பல ஸ்திரீகளா?'

'நான் அப்பொழுதே எச்சரிக்கை செய்து விட்டேன். இனியாவது இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விடுவோம்.'

'முடியவே முடியாது. தாங்கள் எல்லாவற்றையும் சொல்லித் தானாக வேண்டும்.'

'விவரமாகக் கூற முடியாதென்று தோன்றுகின்றது. ஏனெனில் விஷயங்கள் அவ்வளவு சிக்கலானவை. இருந்தாலும் சொல்லுகிறேன், கேள்! நான் உன்னை விவாகஞ் செய்து கொள்வதற்காகத்தான் ஊரெல்லாம் தேடிக் கொண்டிருந்தேன்.'

'கடைசியில் என்னைக் கண்டு பிடித்தீர்களாக்கும்' என்று லக்ஷ்மி கோபமாகக் கூறினாள்.

'லக்ஷ்மி! எனக்குப் பசியாய் இருக்கிறது. போய் இலை போடு!' என்று கோபாலன் பேச்சை மாற்றினான்.

'தாங்கள் உண்மையாகவே எத்தனை ஸ்திரீகள் மீது காதல் கொண்டீர்கள். உண்மையைக் கூறி விடுங்கள்' என்று லக்ஷ்மி மறுபடியும் பழைய கதையை எடுத்தாள்.

'நான் பொய் சொல்ல மாட்டேன் என்று........'

'தாங்கள் ஒரு நாளும் பொய் பேச மாட்டீர்கள். தாங்கள் கூறுவதை நான் நம்புகிறேன். தாங்கள் காதலித்த ஸ்திரீகள் எத்தனை பேர்?'

'அன்பே! நான் கூறுவதைக் கவனமாய்க் கேள். காதல் என்பதற்கு நீ எவ்விதமான பொருள் கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியாது. அதில் பல படிகள் உண்டு.

'காதலைப் பற்றிய வேதாந்தம் எனக்கு வேண்டாம். தாங்கள் முதலில் காதலித்த ஸ்திரீ யார்?'

'நான் உனக்கு ஒவ்வொருவராக விவரம் கூறிக் கொண்டிருந்தால் பத்து தினங்கள் வேண்டுமே.'

'அட, தெய்வமே! எத்தனை பேர் என்றாவது தெரிவியுங்களேன்.'

'எழுபது பேர்.'

'நான் எழுபத்து ஒன்றாவது ஸ்திரீ போலிருக்கிறது' என்று கூறி லக்ஷ்மி கண்ணீர் உதிர்த்தாள்.

'நீ மனவருத்தப்படுவாயென்றுதானே நான் சொல்ல மறுத்தேன்.'

'சரிதான். அவர்களெல்லாரும் என்னைவிட அழகானவர்களா?'

'எவர்கள்?'

'அந்த எழுபது பேரும்.'

'அவர்கள் எந்த அம்சத்திலேனும் உன்னைவிடச் சிறந்திருந்தால் உன்னை யேன் விவாகம் செய்துகொள்ள வேண்டும்? சற்று முன் அழுதாய், அதற்குள் சிரிக்கிறாயே?'

'இல்லை. தாங்கள் அந்த எழுபது ஸ்திரீகளையும் ஏககாலத்தில் விவாகஞ் செய்து கொண்டிருந்தால் எப்படி இருக்குமென்று யோசனை செய்து பார்த்தேன்.'

'லக்ஷ்மி! நீ என் போன்ற வாலிபர்களைப்பற்றிய விவரங்களையறிந்தால் குறை கூறமாட்டாய். நமக்குள் காதல் ஏற்பட்டா கலியாணம் செய்து கொள்கிறோம்? பெற்றோர்கள் தமது பிள்ளை

களுக்கு வரன் தேடுகிறார்கள். எனக்குக் கலியாணம் செய்வதற்காக எனது பதினைந்தாவது வயதி லிருந்தே பெண் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். சென்ற பத்து வருஷ காலத்திற்குள் நூற்றுக்கு மேற்பட்ட பெண்களை நான் பார்வையிட நேர்ந்தது. இவர்களுள் எழுபது பேர்களைப் பார்த்த வரையில் எனது மனதுக்குச் சிறிது பிடித்து இருந்ததால் அவர்களைக் காதலித்ததாகக் கூறினேன். நான் உன்னை ஒரு தரம் பார்த்த பிறகு நமக்குள் கலியாணம் ஏற்பாடாகி விட்டது. விவாகத்திற்குப் பின் நமது புண்ணிய வசத்தால் உண்மையான காதலர்களா யிருக்கிறோம்.'

'தாங்கள் உண்மை கூறுகிறீர்களா வென்று பார்க்க நான் வேடிக்கையாகக் கேட்டேனேயன்றி வேறல்ல. தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.'

'நீ என்னை இப்படிக் கேட்டதைப்பற்றி நான் கோபிக்கவில்லை. எங்கே! நான் கேட்பதற்கு நீ உண்மையாக பதில் சொல்.'

'நானா?'

'ஆம். விவாகம் ஆவதற்குமுன் நீ எவ்வளவு வாலிபர் மீது காதல் கொண்டாய்?'

இப்படிக் கேட்பதற்குத் தங்களுக்கு வெட்கமா யில்லையா?'

'நான் உண்மையைக் கூறி விட்டேன். நீயும் கூறித்தானாக வேண்டும்.'

லக்ஷ்மிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. சற்று யோஜனை செய்துவிட்டு 'தாங்கள் கட்டாயப் படுத்தினால் சொல்கிறேன்' என்றாள்.

'விவரமாகக் கூறு.'

'தாங்கள் கோபிக்க மாட்டீர்களே?'

'இல்லை.'

'எத்தனையோ விவாகமான ஸ்திரீகள் இருக்கிறார்கள். தான் விவாகஞ் செய்து கொண்ட புருஷனைத் தவிர மற்றெந்த புருஷன் மீதும் ஆசைக் கொள்ளவில்லை யென்று ஒரு ஸ்திரீ கூறுவாளாயின் அதை நான் நம்ப மாட்டேன்.'

'அப்படியானால் நீ........'

'ஆம். பல மனிதர்களிடத்தும் காதல் கொண்டேன்.'

'பல மனிதர்களா?'

'ஆம். ஆனால் அப்பொழுது எனக்கு விவாகம் ஆகவில்லை. காதல் என்றால் உண்மையான காதலா? தாங்கள் கூறியதுபோல் காதலிலும் பல படிகள் இருக்கிறதல்லவா?'

கோபாலன் முகத்தில் ஈயாடவில்லை; மௌனமா யிருந்தான்.

'புருஷர்களாகிய உங்களுக்கு எப்பொழுது விவாகம் நடந்தாலும் பாதகமில்லை. ஆனால் எங்கள் நிலைமை அப்படியல்ல. விவாக வயது என்று ஒரு காலம் பெண்களுக்கு நிர்ணயிக்கப் பட்டிருப்பதால் எந்தப் புருஷனைக் கணவனாக அடைய வேண்டுமே என்று கவலை எங்களுக்காகவே ஏற்பட்டிருக்கிறதல்லவா?'

'ஆமாம்'

'ஆகவே..........மறைப்பதில் பயனில்லை. உண்மையைக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு வாலிபன் என்னிடம் அன்பு காண்பித்தான்.'

'பேஷ்!'

'பார்த்தீர்களா? கோபிக்கவில்லை என்று சொன்னீர்களே.'

'இல்லை. இல்லை. மேலே சொல்.'

'அந்த அன்பு நாளாக நாளாக வளர ஆரம்பித்தது. நானும் பதிலுக்கு என் ஆசையைத் தெரிவித்தேன்.'

'ஆ! கடவுளே!' என்றுகூறி கோபாலன் பெருமூச்செறிந்தான்.

'சரி. இனி இந்த விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான்' என்று அழுத்தமாகச் சொன்னாள். 'கூடாது. ஆரம்பித்த விஷயத்தைச் சொல்லி முடித்துத்தான் ஆகவேண்டும்.'

'அப்படியானால் சொல்லுகிறேன். அந்த வாலிபன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். அவன் விடுமுறைக்கு வரும்போதெல்லாம் எனக்குப் பலவித சாமான்களை வாங்கி வருவான். அவனைப் பார்ப்பதற்கு எனக்கு ஆசையாகத்தா னிருந்தது.'

'ஆனால் என்னிடம் ஆசை யில்லையா?'

'இல்லாமலா தாங்கள் காதலிக்கும் மனைவியாக இருக்கிறேன். நான் கூறுவதெல்லாம் பழைய விஷயங்கள். அவற்றைப்பற்றிப் பேசி இப்பொழுது மனவருத்தப்படுவதில் பயன் என்ன? இத்துடன் நிறுத்திவிடுவோம்.'

'இல்லை, நீ கூறித்தானாகவேண்டும்.'

'இந்தச் சம்பவம் நடந்தபோது தாங்கள் என்னைப் பார்க்கவே இல்லை என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த வாலிபன் என் வீடு வந்தபோது என் அன்னை வீட்டுக்காரியங்களில் ஈடுபட்டிருந்தாள். நானும் தனியாக இருந்தேன்.'

'ஹூம்!'

'அவன் என்னைப் புகழ ஆரம்பித்தான். 'என்ன அழகு! என்ன சௌந்தரியம்!' என்றெல்லாம் புகழ்ந்து என் முதுகில் தட்டிக் கொடுத்தான்.'

'நீ என்ன செய்தாய்?'

'அவன் சொல்வதைக் கேட்க ஆசையாக இருந்தது. எனக்கு உலக அநுபவம் அப்பொழுது போதாதல்லவா? பேசிக்கொண்டிருந்த அவன் திடீரென்று................'

'என்ன செய்தான்?'

'முத்தமிட்டான். தாங்கள் ஏன் எழுந்திருந்து நிற்கிறீர்கள்?'

'பிறகு'

'அவசியம் சொல்லித்தான் ஆகவேண்டுமோ?'

'ஆமாம்.'

'ஏன் இந்த வீண்பேச்சு ஆரம்பித்தோமென்று ஆகிவிட்டது. காபி சாப்பிடலாம் வருகிறீர்களா?'

'லக்ஷ்மி! நான் கோபங் கொள்ளவில்லை. பிறகு நீ என்ன செய்தாய்?'

'நான் பொய்சொல்ல முடியாது. நான்........நான்.......நானும் திரும்ப முத்த மிட்டேன்.'

'நீ..........முத்த மிட்டாயா?'

'நீங்கள் பல்லைக் கடிப்பதைப் பார்த்தால் பயமா யிருக்கிறது. நடந்ததைச் சொல்ல வேண்டுமென்கிறீர்கள். சொல்லி விட்டேன். நான் செய்தது தவறா யிருக்கலாம். ஆனால் அப்பொழுது..........'

'ஏன் அப்படிச் செய்தாய்?'

'எனக்கு அவன்மீது ஆசையா யிருந்தது.'

'சரி. பிறகு,'

'அவன் என்னைப் பலமுறை முத்தமிட்டான்.'

'நீ முத்தங் கொடுத்தால் அவன் ஏன் அப்படிச் செய்ய மாட்டான்? எல்லாவற்றையும் கூறிவிடு.'

'கையி லிருக்கும் கடிதத்தை உருத்தெரியாமல் செய்து விட்டீர்களே. வேறு எதைப் பற்றியாவது பேசலாம்.'

'நான் இனி அமைதியா யிருக்கிறேன்.'

'அவன் என்னைத் தன்னிரு கைகளாலும் தூக்கிக்கொண்டான்' பிறகு.........'

'நீ பேசாம லிருந்தாயா?'

'தங்களை விவாகம் செய்து கொள்ளப் போகிறோமென்று அப்பொழுது எனக்குத் தெரியுமா?'

'பெண் பிள்ளையாகிய நீ சிறிதேனும் கூச்சமில்லாமல் ஒரு வாலிபன் உன்னைத் தூக்கிக் கொண்ட போது பேசாம லிருந்ததாகக் கூறுகிறாய்? வேறு பெண் பிள்ளையா யிருந்தால் பேசாமலிருப்பாளா?'

'நான் என்ன செய்வது?'

'என்ன செய்வதா? ஏன் கூக்குர லிட்டிருக்கக் கூடாது! அவனிடமிருந்து ஏன் விடுவித்துக் கொண்டு சென்றிருக்க முடியாது? அறையை விட்டு ஏன் தப்பிஓட முடியாது?'

'எப்படி ஓட முடியும்?'

'அவன் உன்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டானா?'

'ஆம்'

'அயோக்கியன். நான் அங்கே இருந்திருந்தேனானால் அவனை.... நீ ஏன் அறையை விட்டு ஓடி யிருக்கக் கூடாது?'

'எனக்கு அப்பொழுது ஓடுவதற்குத் திறமை கிடையாது. ஏன், நடப்பதற்குக்கூட எனக்குச் சக்தியில்லை. மூன்று வயது குழந்தையாய்த் தொட்டிலில் கிடந்த என்னை எனது மாமன் கட்டி அணைத்து முத்தமிட்டபோது..................'

கோபாலன் ஏமாந்து போய் திகைத்து நின்றான்.

கம்பெனி குமாஸ்தாவை நோக்கி மானேஜர்:—ஏன் ஐயா நான் இங்கு வைத்திருந்த கடிதத்தைக் காணவில்லையே?

குமாஸ்தா:—தபால் பெட்டியில் போட்டு விட்டேன்.

மானேஜர்:—ஐயையோ அதில் விலாசம் எழுத வில்லையே.

குமாஸ்தா:—'நீங்கள்தான் ஒருவ ரெழுதிய கடிதத்தையோ அல்லது ஒருவருடைய விலாசத்தையோ உத்தரவன்னியில் பார்க்கக் கூடாது என்று சொல்லி யிருக்கிறீர்களே. —ஆர். எஸ். சாமிநாதன்

பொன் மொழிகள்

[தேனீ]

அன்பு, திறமை இரண்டுங் கொண்டு செய்யப்படும் வேலை அதியுன்னதமா யிருக்கும்.

—ஜான்ரஸ்கின்

சிறிய செயல்களிலும் அணுவளவு பிசகுகூட ஏற்படாது நடந்து கொள்வது இணையற்ற மகிழ்ச்சியைத் தரும்.

—பேபர்

வாழ்க்கை என்பது வெறும் சோதனையே யன்றி வெற்றிமயமானதல்ல. இதை யறிந்து கொண்டோர் வாழ்வில் ஏற்படு ஏமாற்றங்களைக் கண்டு மனத்தளர்ச்சி யடையார்.

—டேஸ்மாண்ட் எம். ராநீ

ஒட்டகத்துக்குத் தன்னிடமுள்ள கூன் தெரிவதில்லை. மற்ற ஒட்டகங்களின் கூனே அதன் கண்ணில் பிரதானமாகப் படும்.

—அராபியப் பழமொழி

அந்தர்யாமியான கடவுளுடன் நம்மை சேர்த்து அவரது அற்புதமான குணங்களை நாம் அறியுமாறு செய்பவையே மிக்கச் சிறந்த உண்மைகள்.

—பன்ஷேநன்

அஞ்சல் வேண்டாம்; பிறர் செய்யும் அலக்ஷியங்களையோ, சிறு அவமதிப்புகளையோ கண்டு நாம் தைரிய மிழந்துவிடக் கூடாது. அவைகளைக் கொஞ்சமும் பொருட் படுத்தாது நாம் சம்பந்தப்பட்டவரை நமது மனச்சாக்ஷிக்கு நேர் எனத் தோன்றும் வகையில் நடந்து கொள்வோமாக.

—கார்பேண்டர்

திருப்தி யில்லாத விடத்தில் திறமை காண முடியாது.

சுறு சுறுப்பின்றிச் செய்வதால் ருசியற்றவையாகக் காணப்படும் பல வேலைகள் ஒழுங்காகச் செய்யப்படின் ருசிகரமானவையாயிருக்கும்.

தான் செய்தது தவறு என ஒத்துக்கொள்ள எவரும் வெட்கப் படக் கூடாது. அங்ஙனம் ஒத்துக்கொள்வது அவர் முன்னிருந்ததை விட இப்பொழுது அதிக புத்திசாலி என்பதையே குறிக்கும்.

நமக்கு நல்ல பாடம் புகட்டுபவையில் சிறந்தது கஷ்டமே. இக் கஷ்டத்தினால் புகட்டப்படக்கூடாத ஒரு மனிதனுக்கு வேறு எத்தகைய போதனையும் பயனளிக்காது.

—ஸர் வில்லியம் பர்ட்வுட்

பாஸ்கரன் பேட்டி

[திரு. மே. ஜானகிராமன்]

'வருடமும் பிறந்த சித்திரை 26-ஆம் தேதி ஆய் விட்டதே. நம் மகளுக்குத் தக்க வரன் பார்க்கக் கூடாதா? எத்தனை வருஷமா தள்ளிக் கொண்டே போகிறது' என்று ஜெயலக்ஷிமி அம்மாள் தன் கணவர் துரைசாமி முதலியாரிடம் சொன்ன பின், ர் தன் புதல்விக்கு மாப்பிள்ளை தேடச் சென்றார்.

துரைசாமி முதலியார் தம் பந்துக்களைச் சேர்ந்த மாணிக்க முதலியார் இல்லம் சென்று, அவரிடத்தில் தம் மகளை அவர் பிள்ளைக்கு மணம் செய்து கொள்ளும்படி கூறினார். கல்யாணம் சங்கதியைப் பற்றி என் மகன் பாஸ்கரனையே கேட்டு அவன் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளுங்கள். அவன் சம்மதப்பட்டால் எங்களுக்கு ஆட்சேபமில்லை' என்று பதிலளித்தார் மாணிக்க முதலியார். துரைசாமி முதலியார் மாடியின் மீதுள்ள பாஸ்கரன் அறைக்குச் சென்றார்.

பாஸ்கரன் 25 வயதுடைய இளம் பருவத்தினன். இவன் பி. ஏ. பாஸ் செய்து விட்டு ஒரு கவர்மெண்டு ஆபீஸில் குமாஸ்தாவாக இருக்கிறான். இவன் ஒரு நாகரிகப் பிரியன். இவன் தனக்கு வாய்க்கப்பெறும் மனைவி எப்படி யிருக்க வேண்டுமென்று நெடுநாளாக நீண்ட யோசனை

செய்தவன். பாஸ்கரன் தனதறையில் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து 'தமிழரசு' பத்திரிகையைப் படித்துக்கொண் டிருக்கையில், மேற்கூறிய துரைசாமி முதலியார் அவ்விடம் வந்தார். பாஸ்கரன் அவரை வரவேற்று, தன் எதிரிலிருந்தநாற்காலியில் அமரச் செய்து 'தாங்கள் யார்? என்ன சங்கதி' என்று வினவினுன்.

து:—நீர்தானே பாஸ்கரன்.

பா:—ஆமாம். நான்தான்.

து:—பெண் விஷயத்தைப்பற்றிப் பேச வந்தேன்.

பா:—எனக்கு யாரும் சகோதரிக ளில்லையே!

து:—பெண் கொடுப்பதற்காகத் தங்கள் அபிப்பிராயம் தெரிந்து கொண்டு போக வந்தேன்.

பா:—யாருடைய பெண்?

து:—என் மகள் தான். உமக்குக் கொடுக்கலாம் என்ற விருப்பம்.

பா:—ஓ! அப்படியா! பெண் எதுவரைக்கும் வாசித்திருககிறது?

து:—ஐந்தாவது வரையில் வாசித்திருக்கிறது. பெண்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தால் போதுமே. அதிகப் படிப்பு எதற்கு சார்?

பா:—இங்கிலீஷே தெரியாதா! சரி. பாடத் தெரியுமா? வீணை, வியோலின் வாசிக்கத் தெரியுமா?

து:—அதெல்லாம் நம்ப குல ஸ்திரீகளுக்கு எதற்கு சார்? தேவடியாள்களுக்குத்தான் பாடத் தெரியனும்.

பா:—அப்படியானுல் உம் மகளுக்குச் சங்கீதமே தெரியாதா?

து:—தெரியாது சார்.

பா:—சரி. ஏதாவது குட்டை, டை பின்னுவதற்குத் தெரியுமா?

து:—தெரியாதுங்க. இப்போதான் எல்லாம் மலிவாக விற்கிறதே. பின்னுவது எதற்காக சார்.

பா:—சமையல் செய்யத் தெரியுமா?

து:—நம்ப வீட்டில் செல்வமாக வளர்ந்தது. அதெல்லாம் ரொம்ப தெரியா விட்டாலும் சுமாரா ஒன்றிரண்டு செய்யத் தெரியும்.

பா:—உம் குமாரத்தி நல்ல அழகுதானு? சிகப்பா? கறுப்பா?

து:...அவ்வளோ சிகப்புமல்ல கறுப்புமல்ல. மா நிறம்.

பா:—ஓ! ஐ சி! (Oh! I see!) உமக்கு எவ்வளவு ஆஸ்தியிருக்கிறது.

து:—10, 15 ஆயிரத்துக் கிருக்குதுங்க.

பா:—உமது பெண்ணைக் கட்டிக் கொள்வதா யிருந்தால் என்ன எழுதி வைப்பீர்?

து:—கன்னிகா தானத்துடன் செய்து, வரிசை, சீர் முதலியவை செய்கிறேன்.

பா:—என்ன சீர்கள்—சொல்ல முடியுமா?

து:—தெரியாதா! கட்டில், பீர்வை, நாற்காலி, மேஜை, கோட் ஸ்டான்ட், பாத்திரங்கள் முதலியன.

பா:—உம்.......உம்....

து:—உங்களிஷ்டம் எப்படிங்கோ?

பா:—பெண்ணுக்குப் பாடத் தெரியாததினுல், புருஷன் சங்கீதம் கேட்டு இன்புறுவதற்காக ஒரு உயர்ந்த கிராமபோன் மெஷின், அத்துடன் குறைந்தது எண்பது ரிகார்டுகள், சமையல் செய்யத் தெரியாததினுல் ஒரு சமையல்காரி, பின்னல் ஒன்றும் தெரியாததால் அவைகளைக் கற்றுக் கொடுக்க ஒரு உபாத்தியாயினி, இவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதற்காக 50 ரூபாய் வருமானமுள்ள வீடு ஒன்று, கணவன் ஆபீசுக்குச் சென்றுவர ஒரு மோட்டார் சைகல், இவைகள் தருவதா யிருந்தால் எனக்கு ஒருவாறு சம்மதம்.

து:—என்ன சார்! சர்விஸ் கமிஷனில் கேட்கும் கேள்விகளுக்கு மேல் கேட்கிறீர்களே.

பா:—இல்லை சார். வேலைக்காக சர்வீஸ் கமிஷனில் ஆளையே நேரில் பார்த்து, கேள்வி கேட்டு அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனுல் நான் மனைவிக்காகப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அப்ளிகேஷன் பீஸ் ஒன்றும் வாங்காமலும், பெண்ணையே நேரில் பார்த்து கேள்விகள் கேட்டு தேர்ந்தெடுக்காமலும் தங்களைத்தானே கேட்டேன்.

பெண்ணைப் பெற்றவர் மனம் எப்படி இருக்கும்? நீங்களே யோசியுங்கள்.

தரித்திரனுக்குக் கிட்டிய பாக்கியம்

[சாமி]

ஓர் ஊரில் ஒரு மனிதனிருந்தான். அவன் மிகுந்த புத்திசாலியாயிருந்தும், ஏழ்மையால் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். பிறகு ஒரு நாள் அவன் தனது ஏழ்மை நீங்கிப் பாக்கியம்பெற வேண்டுமென்று சிவன் கோயிலுக்குத் தினம்போய்ப் பிரார்த்தனை செய்யவாரம்பித்தான். ஒரு நாள் அவனுக்குப் பகவான் பிரத்தியட்சமாகி 'குழந்தாய்! நீ தினம் வந்து பிரார்த்தனை செய்கின்றாயே, உனக்கு என்ன வேண்டும்' என்று கேட்டார். 'சுவாமி! எனக்கு மிகுந்த பாக்கியம் வர வேண்டும்' என்றான் ஏழை. அதற்குப் பரமசிவன் 'பயித்தியமே, உன் தலையில் பாக்கியமே எழுதப்படவில்லை. உன் ஊழ்வினைப்படி உன் தலையில் நிர்ப்பாக்கியமே பிரம்மா எழுதியிருக்கிறார். ஆகையால் உனக்குப் பாக்கியம் கொடுக்கப்பட மாட்டாது. வேறேதாவது கேள்' என்றார்.



அவன் சமயோசித புத்திசாலி. ஆகையால், 'ஹே! ஜெகதீஸ்வரா, நான் அவ்வளவு நிர்ப்பாக்கியனாகவா ஆய்விட்டேன்? உமது தரிசனமாகியும் எனக்குப் பாக்கியம கிடைக்க முடியாதபடி அவ்வளவு நிர்ப்பாக்கியமா பிரம்மா என் தலையில் எழுதிவிட்டார். நல்லதிருக்கட்டும். நான், தாங்கள் கேட்டுக்கொண்டபடி வேறொரு வரம் கேட்கிறேன். அதையாவது இல்லையென்னாமல் கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்" எனவே, பகவான் 'நல்லது கேள்' என்றார். உடனே ஏழை, 'ஸ்வாமியின் நிர்ப்பாக்கியனாகிய அடியேன் எந்த எந்த வீட்டில்

போய் காலடி வைப்பேனோ அந்த வீடு உடனே தரித்திரமாகித் துடைத்துப்போகக் கடவது, என்றாவது ஒரு வரம் எனக்குத் தந்தருளுங்கள்' என்றான். இது விசித்திர வரமாயிருந்தாலும் 'நல்லது அப்படியே ஆகட்டும்' என்று பகர்ந்து பரமசிவன் மறைந்து விட்டார். உடனே அந்த வரத்தைப் பெற்ற தரித்திரன் வெகு சந்தோஷமாய் வீடு வந்து சேர்ந்து மனைவியிடம் நடந்ததைச் சொன்னான். அவனது மனைவி நடந்தவைகளைக் கூறக்கேட்டு திடுக்கிட்டாள். அவள் வெகு நல்லவள். பிச்சை வாங்கினாலும் வாங்கலாம்; பிறருக்குத் தீங்கு நினைக்கக் கூடாது என்பது அவளுடைய எண்ணம். அவள் கணவனைப் பார்த்து 'ஐயோ! ஏன் இந்தப் பாவமான பழிக்கு ஏதுவான வரத்தைப் பெற்று வந்தீர்கள். நாம் தரித்திரராயிருப்பது போதாமல், எல்லோரும் தரித்திரராக வேண்டுமா? நமக்கு நலம் கிடைக்க நாம் முயவேண்டுமே தவிர, பிறர் நலத்தைக் கெடுப்பதால் நமக்கென்ன பயன். அதனால் வீண்பாவ மன்றோ சம்பவிக்கும்' என்று மனம் நொந்தவளாய் நின்றாள். அதற்கு அவன்! 'அடி மூடமே! உனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வரமும் உன்பாக்கியம் என்றே நினைத்துக்கொள். இந்த வரத்தின் மகிமையை இதோ ஒரு நிமிஷத்திற்குள் காட்டுகிறேன் பார். உனக்கு இப்போது என்னென்ன வேண்டும் சொல் தருவித்துத் தருகிறேன்' என்றான்.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அடுத்த வீட்டுக்காரி அதை நன்றாய்க் கேட்டு விட்டாள். அவள் அதை அவளது மற்றொரு வீட்டுக்காரிக்குச் சொன்னாள். இந்தப்படி இந்த ஏழை மனிதன் வரம் பெற்றுக்கொண்டு வந்த சங்கதி ஊரெங்கும் பிரசித்தியாய் விட்டது. இப்படியிருக்க இரண்டு மூன்று நாள் கழிந்தபிறகு ஒரு நாட் காலை அந்த ஏழை வெகு உல்லாசமாய்த் தனது மனையாளைக் கூப்பிட்டு 'அடியே உனக்கு இப்போது என்ன வேண்டியது சொல், இங்கிருந்தபடியே ஒரு நாழிகைக்குள் எல்லாச் சாமான்களும் இங்கே உன் முன்னே வரும்படி செய்கிறேன்' என்

றான். அவளும் அப்படியே ஒரு நூறு, இரு நூறு சாமான்களின் பெயரைச் சொல்ல ஆரம்பித்தாள்.

அவைகளின் மொத்தக் கிரயம் கிட்டத்திட்ட ஐந்நூறு ரூபாய் வரைக்கும் ஆய்விட்டது. அவன் அவையெல்லாவற்றையும் ஒரு கடிதத்தில் குறித்துக் கொண்டான். பிறகு அவன் அந்தப் பட்டியை அவ்வூர்ப் பெரிய பணக்காரரில் ஒருவனுக்குக் கொடுத்தனுப்பினான். அதோடு அவன் வரம் பெற்று வந்த விவரத்தையும், தனக்கு உடனே பட்டியில் குறித்த சாமான்களைக் கொடுத்தனுப்பாவிட்டால் தான் உடனே அந்தச் சீமான் வீட்டில் காலடி நாட்ட வந்து விடுவதாகப் பயமுறுத்தியும் எழுதியனுப்பினான். ஏற்கனவே அவன் அந்த விபரீத வரம் பெற்று வந்த சங்கதி ஊரெங்கும் பேச்சாயிருந்தது. அதற்கொத்ததாகவே அவன் அத்தனிகனுக்கு இக் கடூர செய்தி யனுப்பவே தனிகன் சற்றுப் பயந்து கலங்கினான். ஏழையாய்ப் போவதென்றால் யாருக்குத்தான் பய முண்டாகாது. அவன் உடனே அச் சங்கதியைப் பற்றி இதர எல்லாத் தனிகரோடும் கலந்து



பேச, அவர்கள் எல்லோரும் ஒரு தீர்மானம் செய்தார்கள். அத்தீர்மானத்தின்படி அவர்கள் அந்த விசித்திர ஏழைக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துச் சீக்கிரம் அனுப்பி விட்டதும் தவிர, தினந்தோறும் அவனுடைய செலவுக்குப் போதுமான ஒரு தொகையை ஏற்படுத்தி, அதை அவனுடைய வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்குப் பிரதியுபகாரமாக அவன் தனது வீட்டை விட்டுப் போகக் கூடாது. பிறர் வீட்டில் காலடி வைக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டு அவனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதைத் தவிர அவனுக்கு ஏற்படும் மற்ற செலவுகட்கும் தனித்தனி தொகையனுப்பி வருவதாகவும் ஒப்புக் கொண்டார்கள். இவ்வாறாய்த் தலையெழுத்தில் நிர்ப்பாக்கியன் என்று ஏற்பட்டிருந்த அந்தத் தரித்திரன், கேவலம் மதி பலத்தினால் வீட்டில் உட்கார்ந்தபடியே சிரமமின்றிச் சுகமனுபவிப்பவனானான்.

ஆகையால் புத்திசாலிகள் எப்படியும் பிழைப்பார்கள் என்று இதனால் விளங்குகிறதல்லவா?

ஆனால் என் நேயர்களே! விதியால் ஏழ்மை ஏற்பட்டிருந்த அது மதியால் விலகிற்றென்பது எப்படி ஒவ்வும் என்று எண்ணாதீர்கள். 'மதி விதியை வெல்லும்' என்று பண்டைய பழமொழியை யோசித்துப் பாருங்கள்! எந்த நல்ல விஷயத்திலும் அசிரத்தையாய் விதி யிருந்தாலாகும் என்று உட்கார்ந்து விடாமல் முயற்சி செய்தல் வேண்டும்.

மேற்கண்ட ஏழைக் கதா நாயகன் துடைக் காலித்தனம் வரமாகப் பெற்றது நல்ல விஷயமா என்பீர்கள். அவன் கெட்டதுக்காக முயன்றான் என்றாவது எப்படிச் சொல்லக் கூடும்? அவன் தனக்குச் செல்வம் வரவேண்டுமென்று நியாயமான பிரார்த்தனைதான் செய்தான். செல்வமில்லை யென்ற பதில் கிடைத்து விட்டது. பிறகு அதற்கு விரோதமான வரத்தைப் பெற்றான். பெற்றும் அதை உடனே பிரயோகப்படுத்தவில்லை. அதை அவன் ஒருவருக்கும் சொல்லாதிருந்து அவ்வரத்தின் பலத்தால் எத்தனையோ வீட்டைப் பாழாக்கி யிருக்கலாம். அவன் அப்படிச் செய்யாமல் தெளிவான எச்சரிக்கை செய்ததினால் தனது உத்தேச சுகத்தை யடைந்தான். அவன் செய்கை நல்லதேயானது. ஆகவே நாம் க்ஷேமமடைய வேண்டும், நமது நாட்டாரனைவரும் சுகமடைந்து அவர்களிடையில் நமது சுகம் நிலைபெற்றிருக்க வேண்டுமென்ற எண்ணம் நமக்கு உண்மையா யிருந்தால், நாமும் முயற்சியாலும் புத்திசாலித் தனத்தாலும் வெற்றி பெற முயல வேண்டும்.

கோது:—'நான் சுத்த மடையன்' என்று சீனு சொல்கிறான். என்ன கெருவம் பார்த்தாயா?

கோபு:—அவனுக்குப் புத்தி ஏது? எல்லோரும் சொல்வதைத் தான் அவன் சொல்கிறான்.

—மே. ஜானகிராமன்

சோமு:—நீ இத்தனை நாளாகியும் என்னை மறக்கவில்லையே! ரொம்ப சந்தோஷம்.

கிமு:—எப்படியடா நீ செய்த படுமோசத்தை மறக்க முடியும்?

—வே. வை. ஜெயராமன்

நீதிபதி:—நீ இன்னும் ஏதாவது சொல்ல வேண்டி யிருந்தால் சொல்லிக் கொள்.

கைதி:—தரும துரைகளே! நான் என்ன சொல்லப் போகிறேன். நான் அவன் வீட்டில் திருடும்போது, திண்ணையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த இவன், கண்ணால் தான் பார்த்ததாகச் சொல்லுகிறானே. இது பொய் தானே. இதை நம்பி எஜமானும் என்னைத் தண்டிக்கலாமா?

—ஜீ. சுப்பையராஜ

'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்'

[நளினம்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இவ்வாறாக, அவ்விளைஞர் குடும்பத் தோழராய் விடவே, என் தந்தை முதலியவர்களே யன்றி, பெண் பாலராகிய யாங்கள் மூவரும்கூட யாதொரு விகற்பமுமின்றி அளவளாவிப் பழகி வந்தோம். அவர் என் தந்தை முதலியவர்களைவிட உலக நிகழ்ச்சிகளையும் விநோத சம்பவங்களையும் நன்கு அறிந்து வருபவராதலால், அவர் அவ்விஷயங்களை எங்களுக்கு இனிது எடுத்துச் சொல்ல யாங்கள் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்து கேட்டு மகிழ்வோம். எனது தந்தை அண்ணன் ஆகியவர்கள் முன் வரவும் நாணங்கொள்ளும் புது மணப் பெண்ணாகிய என் தம்பி மனைவி இவரைத் தன் உடன் பிறந்த சகோதரராகப் பாவித்து அளவளாவி வந்தாள். பெண்களாகிய எங்களுக்குள் ஏதேனும் குழப்பம் விளைந்தால், அதை அவரிடம் முறையிட்டுத் தீர்த்துக் கொள்வது எங்கள் ஒவ்வொருவரது வழக்கமு மாயிற்று. அவர் எங்கள் முறையீட்டைப் பொறுமையாகக் கேட்டு எங்கள் ஒவ்வொருவருக்கும் இதமாக வார்த்தைகள் சொல்லி எங்களிடையே ஒற்றுமையையும் அன்பையும் விளைத்து வந்தார். இதனால் என் அண்ணி எனக்குச் செய்து வந்த இடையூறு இல்லாது போயிற்று. என் அண்ணியும் தன் தங்கையோடு சேர்ந்து என்னைக் கொடுமைப்படுத்த எண்ணியிருந்த எண்ணத்தை நிறைவேற்ற இயலாதவளானாள். அவள் அருங்குண மணியாகிய இவ்வாலிபருக்கு

மிகவும் கட்டுப்பட்டு அடங்கி நடந்து வந்தாள். என் தந்தையை ஏன் என் அண்ணனையும்-நடுங்கச் செய்து ஆர்ப்பரிப்பவள், இவ்வாலிபரின் காலடியோசையைக் கேட்டவுடனே உரக்கப் பேசுவதையும் நிறுத்தி விடுவாள். புற்றிலிருந்து சீறி எழுந்து படத்தை விரித்து ஆடும் நல்ல பாம்பு, குழலோசையைக் கேட்ட அளவானே ஆர்ப்பரித்து ஆடுவதை விடுத்து அசைவற்று நின்று விடுவதுபோல, என் அண்ணி அவ்வாலிபரின் வசீகர வதனத்தின் முன் பணிந்து விடுவதைக் கண்டு யான் பலகால் வியப்புறுவதுண்டு. 'நல்லார் நற்குணத்தின் முன், கொடியார் கொடுங்குணம் தலைகாட்டாது' என்னும் ஆன்றோர் வாக்கின் உண்மையை இவ்விடத்தில் உணர்ந்து உள்ளுற மகிழ்ந்தேன். அவ்வாலிபரிடத்தில் மற்றொரு விசேஷ குணத்தை யான் கண்டேன். அதாவது, அவ்வாலிபர் என் அண்ணி, அவளது தங்கையான பூங்கொடி ஆகியவர்களிடத்தில் பலகால் தனித்துப் பேசுவார். ஆனால் என்னோடு அவர் தனித்துப் பேசுவது கிடையாது. அவ்வாறு ஏதேனும் தனித்துப் பேச சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அதிக நேரம் என்னோடு பேசமாட்டார். அவர் அவ்வாறு பேச விரும்பவில்லை என்பதை அவர் யான் கேட்கும் விஷயங்களுக்குத் தகுந்த பதில்களை விரைந்து சொல்லிவிட்டுப் போக முயற்சிப்பதிலிருந்து யான் அறிந்தேன். யான் வேண்டுவன எதுவாயினும் அவற்றை யெல்லாம் எவ்வாறாயினும் விரைந்து அளித்து என் நலத்தில் கண்ணுங் கருத்துமாய் இருக்கும் அவ்வாலிபர் யான் தனித்துப் பேச விரும்பாததற்குக் காரணமென்ன என்று யான் பலகால் ஆராய்ந்தும் உண்மை யறியாது மனவேதனை யுற்று வருந்தி யிருக்கிறேன். ஆனால் இப்போது அதன் காரணத்தை யறிந்ததும் யான் அவரது பெருந் தன்மையான குணத்தைப் போற்றிப் புகழாதிருக்க முடியவில்லை. அவரை யான் மக்களுள் சிறந்த ஒருவராகவே மதிக்கிறேன்.

அது நிற்க, எங்களுக்கு அவரது நட்பு ஏற்பட்டு நான்கைந்து வருடங்களாயின. இதனிடையே அவர் பொதுவாக எங்கள் குடும்பத்திற்கும் சிறப்பாக எனக்கும் செய்த உதவிகள் அளவிறந்தன. அவைகளுக்காக எனது குடும்பத்தாரும் யானும் ஏழுபிறப்பும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறோம். அவர் எங்களுக்குச் செய்யும் நன்மைகளை முன்னிட்டும், அவரது நற்குண நற்செய்கைகளைக் கருதியும் அவரது முக வசீகரத்தைக் கண்டு மகிழ்ச்சியுற்றும் அல்லாது எனக்கு அவரைக் கண்ட முதலே அவரிடத்து ஒருவித அன்பு இயற்கையாகவே பிறந்தது. அவ்வன்பின் காரணமாக யான் அவரை எனது சகோதரர்களினுஞ் சிறந்தவராகவே மதித்து வந்தேன். அவரது சுந்தரமான முகத்தையும், அமைதியே வடிவாய கம்பீரத் தோற்றத்தையும் காண்பதிலும், அவர் குமுதம்

போன்ற வாயி லிருந்து வரும் இனிய மொழிகளைக் கேட்பதிலும் எனக்கு மகிழ்ச்சி மிகுதியும் ஏற்பட்டது. அவர் என் தந்தையோடு, இன்ஞான்று சமூகமும் சமயமும் இருக்கும் சீர்கேடான நிலையையும், அவைகளைச் சீர்திருத்திப் பண்டை நிலைக்குக் கொண்டுவர வேண்டிய அவசியத்தையும் பற்றிப் பேசி நமது மூதாதையர்களாகிய பண்டைத் தமிழர்களின் உயரிய சமூக வாழ்க்கையும், உண்மைச் சமய நிலையும் வடநாடிருந்து குடியேறிய சுயநல வெறியர்களான ஆரியர்களாலேயே இழிநிலை யடைந்து மக்கள் பகுத்தறிவிற் கொவ்வா முறையில் மாறிய தென்பதையும் வலியுறுத்திக் கூறுவார். எனவே நமது சமூகமும், சமயமும் பண்டைய உயரிய நிலையை அடைய வேண்டுமானால், காந்தியடிகள் போன்ற பெரியோர்கள் கூறுகிறபடி ஆரியர் கூட்டுறவின் பயனாக ஏற்பட்ட பல சமய வேறுபாடுகளையும், பல சாதி பேதங்களையும் ஒழித்து, ஏகதெய்வ வழிபாட்டையும், யாவரும் தமிழர்கள் என்ற கொள்கையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், பெண்களுக்குக் கல்வி யளித்தல், அவர்களை ஆண்களோடு சமத்துவமாக நடத்தல், ஆண் மக்களைப்போல மாதர்களுக்கும் சொத்துரிமை யளித்தல், மகளிர் தாங்களாகவே கணவன் மாரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் செய்து பெற்றோர்கள் அதற்குத் துணை நிற்றல், இளம் வயதிலேயே கணவனை யிழந்த பெண்ணுக்கு மறுமணஞ் செய்து மகிழச் செய்தல் ஆகியவைகளைச் செய்து இந்த சமூகத்தை யுயரச் செய்ய வேண்டுமென்றும் கூறுவார். என் தந்தை தமிழ் வேதமாகிய திருக்குறளை யோதியும், ஆரியர்களால் கட்டப்பட்ட புராண இதிகாச குப்பைகளை உருப்போட்டிருந்ததால், ஆரியக் கொள்கைகளையே சரியென எண்ணியிருந்ததால், இச் சீர்திருத்தங்களின் நுட்பங்கள் அவர் அறிவுக் கெட்டவில்லை. ஆகையால், அவர் ஆரியப் பழக்க வழக்கங்களும், நூல்களுமே சரியென அவ்வாலிபரோடு வாதிப்பார். எனினும், அவ்வாலிபர் தக்க காரணங்களைக் காட்டி அச் சீர்திருத்தங்களால் ஏற்படும் நன்மைகளை யெடுத்துக் கூறும்போது என் தந்தை பதில் சொல்ல முடியாது விழிப்பார். இவ்வாதங்களை யெல்லாம் யானும் மற்றவர்களும் கேட்டு, அவ்வாலிபரின் அறிவின் நுட்பத்தையும், வாக்கு வன்மையையும் கண்டு மகிழ்வ துண்டு.

V

இவ்வாறாக, நாளாக ஆக, யான் அவரிடத்துக் கொண்ட சகோதர நேயம் காதலாக மாறியது. அக்காதலுணர்ச்சி என்னுள் எழ எழ, என் மனவேதனை யதிகமாயிற்று. யான் அவரிடத்துக் கொண்டிருக்கும் காதலை அவருக்கு எவ்வாறு தெரிவிப்ப தென்பது எனக்குப் பெருமலைப்பாகத் தோன்றியது. அவ்வாறு தெரிவித்தாலும் அதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்றும், அதை ஏற்றுக்

கொள்ளாவிட்டால் என்ன செய்வதென்றும் யான் அறியாது மயங்கினேன். இவ்வாறாக இரவும் பகலும் என் மனத்தோடு போராடி, கடைசியாக எவ்வாறாயினும் எனது காதலை அவருக்குத் தெரிவித்து விடுவது என்று முடிவு செய்யலானேன். அவர் இரக்க நெஞ்சமும், சீர்திருத்த உணர்ச்சியும் உடையவராதலால் நிராதரமான நிலையிலுள்ள எனது காதலுக்கு இசைவாரென்ற நம்பிக்கையும் எனக் கேற்பட்டது. இவ்வித முடிவுக்கு யான் வந்தவுடனே என் கருத்தை அவருக்குத் தெரிவிக்கும் வாய்ப்பை நாடலானேன். அவரோடு தனித்துப் பேசி என் கருத்தைத் தெரிவிக்கலாமென யான் முதலில் எண்ணினேன். ஆனால் அவ்வாறு சொல்ல என் மனம் இடமடைய வில்லை. எனவே, அவருக்கு யான், என் கருத்தை விளக்கிக்கூறி, ஒரு கடிதமெழுதி முடித்து, அதை என் வீட்டாருக்குத் தெரியாது மறைத்து வைத்திருந்து அவர் என் வீட்டுக்கு வந்து எங்களோடு பேசிக்கொண்டிருக்கும் போது, சமயம்பார்த்து என் தந்தை முதலியவர்கள் ஒருவருக்கும் தெரியாது அக்கடிதத்தை அவர் கையில் கொடுத்து விட்டு அவர் முன்னில்லாது மறைந்தேன். கடிதத்தைப்பெற்றவுடனே அவர்

முகம் ஒருவித மாறுதலை யடைந்தது. அவர் அச்சமயம் என்ன எண்ணினாரோ அது எனக்குத் தெரியாது. அன்று அவர் எங்கள் வீட்டை விட்டுச் செல்லும் வரை யான் அவர் முன் வர நாணியிருந்தேன்.

அன்று எங்கள் வீட்டுக்கு வந்து சென்ற அவ்வாலிபர் மீண்டும் ஒரு வாரம் வரை எக்காரணத்தாலோ வர வில்லை. யான் கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்து யான் அடாது செய்தேனென்று நினைத்து என்மீது கோபங்கொண்டு வர வில்லையோ என்று எண்ணி யான் மிகவும் பயந்தேன். 'ஐயோ! யான் என்ன செய்தேன்! பேதை யறிவின் செயலால் குணக்குன்றான அவ்வாலிபரின் கூட்டுறவை யிழந்தேனே!' என் றிவ்வாறெல்லாம் யான் கருதி நைந்து நைந்து உருகினேன். என் வீட்டாரும் அவர் வாராததற்குக் காரணமென்ன வென்பதை யறியாது வருந்தினர். என் சகோதரர்கள் அவரது வீட்டுக்குச் சென்று பார்த்த சமயத்தெல்லாம் அவரில்லை யென்ற பதிலே கிடைத்தது. என் தந்தை அவர் வாராதது குறித்துப்

பெரிதும் ஆகுலங் கொண்டார். யான் மகிழ்ச்சி யெய்தவும், என் வீட்டார் களி கொள்ளவும் அவ்வாலிபர் எங்கள் வீட்டுக்குத் திடரெனத் தோன்றினார். யான் அச்சத்தோடு அவரது வதனத்தைப் பார்த்தேன். அவர் முகம் சலன மற்று காணப்பட்டது. அவரது முகத்தில் இயற்கையான புன்முறுவல் மிளிர்ந்தது. அவர் எல்லோருடனும் கலந்து பேசினார். என் தந்தை அவர் வாராததற்குக் காரணங் கேட்டபோது தனக்கு உத்தியோக முறையில் வேலை யதிகமிருந்ததாகவும் அதனால்தான் கடந்த ஒரு வாரமாகத் தான் வர முடியாது போயிற்றென்றுஞ் சொன்னார். ஆனால் யான் எதிர்பார்த்தபடி என் மனங் குளிர அவர் என்னிடத்தில் பேசவில்லை. பொதுவாக எல்லோருடனும் பேசுவதுபோலவே என்னோடும் பேசினார். இவ்வாறாக சில நாள் கழிந்தது. அவர் உள்ளக் கருத்து இன்னதென்பதை என்னால் அறிய முடியவில்லை. அவர் என் விஷயத்தில் மௌனஞ் சாதிக்க சாதிக்க, என் மனக் கவலையும் அதிகமாயிற்று. இடையறாது என் மனம் துயரக் கடலில் ஆழ்ந்தது.

இவ்வாறிருக்க ஒரு நாள் காலை (அன்று வைகுண்ட ஏகாதசி) ஊரிலிருந்து வந்திருந்த என் மாமி முதலியவர்களோடு அவர்கள் வேண்டுகோளின்படி யான் கோவிலுக்குப் போயிருந்தேன்; அன்று கோயிலில் கூட்டம் அதிகமா யிருக்கவே, கோயிலுக்குள் வர முடியாதென்று சொல்லி யான் எங்களோடு வந்திருந்த ஒரு சிறு பெண்ணை மாத்திரம் துணைக்கு நிறுத்திக் கொண்டு மாமி முதலியவர்களைக் கோயிலுக்குள் போகச் செய்து கோயில் வாயிலில் ஒரு பக்கமாக நின்றிருந்தேன். கோயிலுக்குச் செல்வோரையும், வருவோரையும், அவர்கள் செய்யும் ஆரவாரத்தையும் கவனித்துக் கொண்டு நின்ற என் கண்ணில் கோயில் பக்கமாக என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவ்வாலிபர் செல்வது தெரிந்தது. அவர் ஏதோ வேலையாக அப்பக்கம் சென்றுகொண்டிருந்தார் போலிருக்கிறது. அவரைக் கண்டதும் எனக்கு அளவிலா மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே யான் என்னிட மிருந்த சிறுமியை நோக்கி அவரைக் காட்டி கூப்பிட்டு வரச் செய்தேன். இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் அவர் அச்சிறுமியோடு யான் இருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் முகத்தில் வியப்புக்குறி காணப்பட்டது. அவர் என்னை யணுகியதும் என்னைப் பார்த்து, 'என்ன ஜீவமணி! இங்கே யிருக்கிறாய்? நீ யாருடன் வந்தாய்? அவர்கள் எங்கே?' என்று ஒன்றன் பின்னொன்றாகப் பல கேள்விகளைக் கேட்டார். யான் அவற்றிற் கெல்லாம் தழுதழுத்த குரலில் பதிலளித்துவிட்டு, அவரை நோக்கியவாறே தலைகுனிந்து கண்களில் நீர் சோர விட்டு நின்றேன்.

எதிர்பாரா வகையில் யான் கண்ணீர் உகுப்பதைக்கண்ட அவ்வாலிபர் பதைபதைத்தவராய் என்னிடம் நெருங்கி, 'ஜீவா! எதற்காக அழுகிறாய்? காரணம் என்ன? சொல்! அழாதே! யாராகிலும் பார்த்தால் தவறாக நினைத்துக் கொள்வார்கள். கண்ணைத் துடைத்துக் கொள். விஷயத்தைச் சொல்' என்று தன்னை மறந்து தன் கைகுட்டையைச் சட்டைப் பையிலிருந்து எடுத்து என் முகத்துக்கருகே கொண்டு வந்தார். இதற்குள் என்ன நினைத்தாரோ! தன் கையைப் பின் வாங்கிக்கொண்டு கைக் குட்டையைச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார். யான் கண் கலங்கியதைக் கண்டதும் அவர் மெய் பதறியதையும், தன்னை மறந்து செய்த செயலையும் பார்த்த யான், அவர் என்னிடத்து உண்மையாக எவ்வளவு தூரம் பரிவு கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து உள்ளூற மகிழ்ந்தேன். பின்னர் யான் என் சேலையின் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கடைக் கண்ணால் நோக்க, 'ஜீவா! விஷயமென்ன சொல்? ஏன் தயங்குகின்றாய்! ஜனக்கூட்டம் நிறைந்துள்ள இவ்விடத்தில் நாம் இருவரும் தனித்திருப்பது சரியல்ல. பலர் பலவிதமாகப் பிதற்றுவதற்கு ஏதுவாகும்' என்று சொன்னார். யான் மிகவும் தாழ்மையாக, 'தாங்கள் எனக்கு வாக்குறுதி யொன்று தருதல் வேண்டும்' என்றேன். அவர் 'எவ்விஷயத்திற்கு வாக்குறுதி' என்று கேட்டார். அதற்கு யான் 'தங்களிடத்து விண்ணப்பிக்க வேண்டிய வேண்டுகோள் ஒன்று இருக்கிறது. அதை நிறைவேற்றுகிறேன் என்று உறுதி கூறுதல் வேண்டும்' என்றேன். உடனே அவர், 'அது என்ன வேண்டுகோள்? உனக்கு நன்மை பயப்பது எதுவாயினும் அதைச் செய்ய யான் தயங்கேன். இது உறுதி' என்று கூறினார். நான் மேலும் ஏதோ சொல்ல வாயெடுக்கையில் என் மாமியும் மற்றவர்களும் கோயிலுள் இருந்து வந்துகொண்டிருந்ததை என்னுடனிருந்த சிறுமி தெரிவிக்க, யான் சொல்ல நினைத்ததைக் கூறாது நிறுத்திவிட்டேன். என் மாமி முதலியோர் வருகிறார்கள் என்பதைக் கேட்ட அவ்வாலிபர், 'ஜீவா! நான்

சென்று வருகிறேன். அப்புறம் பேசிக்கொள்ளலாம். யான் இன்னும் பேசிக்கொண்டிருப்பேனானால் உன் மாமி முதலியோர் ஏதேனும் தவறாக நினைத்து உன்மீது பழி சுமத்துவார்கள். அவர்கள் வருவதற்குள் யான் செல்வதே நல்லது' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு விரைந்து சென்றார்.

அவர் சென்ற திக்கையே பார்த்து பெருமூச்செறிந்த யான் என் மாமி முதலியோர் அருகில் வந்ததும் அவர்களோடு வீடு திரும்பினேன். எதிர் பாராது அவ்விடத்தில் அவரைச் சந்திக்க நேர்ந்ததையும், அவர் தந்த வாக்குறுதியையும் நினைந்து நினைந்து யான் மன ஆறுதலை யடைந்தேன். அவரை மீண்டும் தனியாகக் கண்டு பேசும் சந்தர்ப்பம் எப்போது வரும் என்று அந்நாளை எதிர் பார்த்தவா றிருந்தேன்.

VI

இவ்வாறு இரண்டு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் மாலைக் காலம். யான் விளக்கை யெல்லாம் ஏற்று வைத்துவிட்டு பூஜை யறைக்குச் சென்று வழக்கம் போல் என் நிராதரவான நிலைமையையும், என் எண்ணம் முடிய வேண்டியதையும் பற்றி முறையிட்டு இறைவனை இறைஞ்சி விட்டு வெளிவந்தேன். அச்சமயம் என் உள்ளம் குடிகொண்ட அவ் வாலிபர் உள் நுழைந்தார். அவரைக் கண்டதும், என் மனம் என்று மில்லாதவாறு குதூகலித்தது. அவர் என்னைப் பார்த்து, 'அப்பா முதலியவர்க ளில்லையா' என்று கேட்டார். அச்சமயம் என் தந்தை எங்கோ சென்றிருந்தார். என் அண்ணனும் அண்ணியும் உறவினர் வீட்டு விவாகத்துக்குச் சென்றிருந்தனர். என் தம்பி உத்தியோகத்திலிருந்து வரவில்லை. ஆகவே வீட்டில் யானும் என் தம்பி மனைவியுமே இருந்தோம். அவளும் சமயல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். எனவே யான் அவர் கேட்டதற்குப் பதிலாக 'எல்லாரும் வெளியே சென்றிருக்கிறார்கள்' என்றேன். 'அப்படியானால் யான் அப்புறம் வருகிறேன்' என்று அவர் வெளிச் செல்ல அடி எடுத்து வைத்தார். யான் அவரை இடைமறுத்து, 'இருங்கள் போகலாம். இவ்வளவு அவசரமேன்! சிறிது தாமதித்தால் தந்தை வந்துவிடுவார், உட்காருங்கள் ஊஞ்சலில்' என்று உபசரித்தேன். அப்போது அவர் 'ஜீவா! இருக்கட்டும். சிறிது வேலை யிருக்கிறது. சென்று உடனே வந்துவிடுகிறேன்' என்று மீண்டுஞ் செல்ல முயன்றார். உடனே யான், 'அவ்வாறானால் ஒரு வார்த்தை மட்டும் கேட்டு விட்டுப் போங்கள். சிறிது இப்படி வாருங்கள்' என்று அழைத்தேன். இதற்கு மேல் அவர் என் வற்புறுத்தலை மீறிச் செல்ல மனம் வராது கூடத்திற்குச் சென்று ஊஞ்சலில் அமர்ந்தார். யான் தெருப்பக்கமா

உட்கதவைத் தாளிட்டுவிட்டு அவரருகில் சென்று நின்றேன். அவர், 'ஜீவா! ஏதோ சொல்லவேண்டுமென்றாயே! என்ன?' என்று கேட்டார். யான் மெலிந்த குரலில், 'அன்று தாங்கள் வாக்குறுதி கொடுத்தீர்களே! நினைவிருக்கிறதா?' என்றேன். அதற்கு அவர், 'ஆம். அதற்கென்ன! நீ என்ன சொல்லுகிறாயோ அதைச் செய்கிறேன். உனக்கென்ன வேண்டும்' என்று கேட்டார். உடனே யான், 'எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை; தங்களுடைய நீங்கா அன்புதான் எனக்கு வேண்டும்' என்றேன். அவர் 'நீ சொல்வது விளங்க வில்லையே! நான் இப்போது உன்னிடத்தில் அன்புகொண்டிருக்கவில்லையா? உன்னை என் உடன் பிறந்த சகோதரியினுஞ் சிறந்தவளாக மதித்து உனக்கு ஆவன செய்து வருகிறேனே! உனக்கு நன்மை செய்வதையே சிறந்த தொண்டாக நினைத்து வருகிறேனே! இதை நீ யறியவில்லையா?' என்று வியப்போடு கேட்டார். நான், 'தாங்கள் என்னிடத்தில் கொண்டிருக்கும் அன்பைப் பற்றியோ, செய்து வரும் நன்மைகளைப் பற்றியோ நான் இல்லையென்று சொல்லவரவில்லை. தனிப்பட்ட முறையில், ஒரு நங்கை வாலிபரொருவரிடத்து வேண்டும் அன்பு எத்தன்மையதா யிருக்குமென்பது தங்களுக்குத் தெரியாதா? தங்களுக்கு இதற்கு முன் கடித மூலமாக என் கருத்தைத் தெரிவித்திருந்தும், யான் இப்போது கேட்பது எதுவா யிருக்குமென்பது தாங்கள் அறிந்துகொள்ளாதது வியப்பா யிருக்கிறது. தாங்கள் ஒரு நூதன மனிதராகவே விளங்குகின்றீர்கள். யான் தங்களை யுள்ளன்போடு காதலிக்கிறேன். தாங்கள் என் காதலை யேற்றுக்கொண்டு என்னைக் காப்பாற்றுதல் வேண்டும்' என்று ஆவேசத்தோடு கூறி முடித்தேன்.

இதைக் கேட்டதும் அவ்வாலிபர் ஊஞ்சலை விட்டெழுந்து, 'என்ன! நீ என்னைக் காதலிக்கின்றாயா! யானும் உன்னைக் காதலிக்க வேண்டுமா? அது முடியாத காரியம். ஜீவா! வேண்டாம். யான் அதற்கு இணங்கேன். உனக்கு வேண்டிய உதவிகளை இனியுஞ் செய்து உன்னைக் காப்பேன். ஆயின் உன் விருப்பப்படி உன்னைக் காதலிக்க முடியாது. இதுவரை இருந்ததுபோல் நாம்



இருவரும் சகோதர முறையிலேயே இருந்து வருதலே நல்லது. ஆசிரியன் மகள் அல்லவா நீ! யான் உன்னைக் காதலிக்கலாமா! இது தகுமா? யான் நன்றி கொன்ற பாவியாகவன்றோ ஆவேன். யான் உன்னைக் காதலிப்பது நம்பிக்கைத் துரோகமான செயலல்லவா? ஊரார் என்னைப்பற்றி பழி தூற்றார்களா? யான் உனது இவ்விருப்பத்துக்கு ஒருப்படேன்! ஒருப்படேன்!! வேறு யாரையாகிலும் நீ விவாகஞ் செய்துகொள்ள விரும்பினால் சொல். யான் அவ்விஷயத்தில் உனக்கு உதவி செய்து மணமுடித்து வைக்கிறேன். என் கண்ணல்ல! இவ் வெண்ணத்தை விட்டு விடம்மா!' என்று கனிந்த மொழிகளில் கூறலானார்.

அவரது அவ்வார்த்தைகளைக் கேட்டு யான் சிறிது நேரம் அப்படியே மலைத்து நின்று விட்டேன். பின்னர், யான் திடமான முடிவுக்கு வந்து, 'அன்பரே! என் உயிர்த் தலைவரே! யான் பெண்ணாய்ப் பிறந்து இதுவரை யாரையும் யான் காதலித்ததில்லை. என் அம்மான் மகன் ஒருவன் வஞ்சக வார்த்தையினால் மனம் பேதலித்தது தவிர, மற்ற யாரையும் என் மனம் விரும்பியதில்லை. தங்களைக் கண்டதும், என் உள்ளம் தங்கள் திருவடியில் தாழ்ந்தது. ஆனால், அது முதலில் சகோதர நேயத்தில் அரும்பியது நாளடைவில் அந் நேயம் காதலாக மலர்ந்தது. அதை இதுவரை மறைந்து வைத்திருந்தேன். அதனால் யானடைந்த மனவேதனை சொல்லி முடியாது. எனவே இன்று தங்கள் முன் என் காதலை வெளியிட்டு விட்டேன். தாங்கள் அதை அன்புடன் ஏற்றுக் கொண்டால் யான் உய்ந்தேன். இல்லையேல் எனக்கு அருகிருக்கும் அலைகடல் தான் கதி. அதற்கு மேல், எனக்கு ஒன்றுஞ் சொல்லத் தெரியாது. என்று கூறிய யர்ந்தேன். யான் ஆகாயத்தில் பறப்பது போல் எனக்குத் தோன்றியது. உடல் படபடத்தது. நா தழு தழுத்தது. கண்களில் நீர் ததும்பியது. யான் தள்ளாடலானேன்.

(தொடரும்)

சிறுவர்களும் சிறுமிகளும் விளையாடிக்கொண் டிருந்தனர்.

கிருஷ்ணன்:—(ஜானகியைப்பார்த்து) நான்தான் அகமுடையான். நீதான் பெண்டாட்டி என்று விளையாடுவோம் என்றான்.

ஜானகி:—நித்யம் நானே பெண்டாட்டியா இருக்க முடியாது. நான்தான் அகமுடையான். —எம். வி. கண்ணன்

உபாத்தியாயர்:—டே ராமு! 'கருடனுக்கும் பாம்பிற்கும் பகை' என்பது போல் ஓர் உதாரணம் சொல்லு?

ராமு:— உபாத்தியாருக்கும் பையனுக்கும் பகை சார்.

—என். கிருஷ்ணன்

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோ லாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்திய ராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை ரூபா		1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1–12—0

தபால் சார்ஜ் வேறு

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

லெனின்

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப் பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் 2½ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

காங்க்ரீன்

என்னும்

இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் S. ரங்காச்சாரியவர்களுக்கும் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த

ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் சொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மறுந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அநுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய

சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காத வண்ணம் குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே!

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து தமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திராவகத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6¼ அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours fai hfully
E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாதமுதலித் தெரு, சென்னை.

M. A. Maricayan & Co.

AYURVEDA VAITHIYA SALAI

PORTO - NOVO P. O., S. A. DISTRICT, INDIA

அறிவுடைய நண்பர்கட்கோர் அன்பான விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை ஒரே வேளை லேகியம் சாப்பிட ஒரு மணி நேரத்தில் கொடுக்கும். துரையே கவனியுங்கள்.

மெடல் பெற்ற ஊர்க் குருவி சத்தின் லேகியம்

இந்த லேகிய பாகம் மற்றோர் செய்து கொடுத்தால் ரூபா 2000 இனும்

வெண்பா

ஊர்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய் செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள்-பேர்கொண்ட
சிங்கம்போல் வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

இந்த லேகியத்தை ஒவ்வொரு புருஷர்களும் பரீக்ஷித்து சந்தோஷமடைவீர்களாக. தத்தம் துர்ச் செயலால் ஜீவரெத்தினமாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரிய நஷ்டம் இந்திரிய நீப்பு சீக்கிர ஸ்கலிதம் நித்திரை ஸ்கலிதம் எழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி வெட்டைச் சூடு நரம்பு தளர்ச்சி சதா இடுப்பு வலி மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ண வாய்வு கிருமிரோகம் தர் நீர் வியாதிகள் தேகத்தில் ஒடித்திரியும் பலவித வாய்வு ரோகம் பாரிச வாய்வு நெஞ்சுவலி விரை வாதம் கைகால் அசதி மயக்கம் மறதி முதலியன நிவர்த்தியாகும். சிங்க வீரிய ஆண் தத்துவத்தை யுண்டாக்கி இந்திரியத்தை மணிபோல் கட்டிப் போக இன்பத்தைக் கொடுக்கும். மருந்து உபயோகிக்கும் விபர நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும்.

40 நாள் 80 வேளை 16 பலம் டப்பி 1-க்கு ரூ.	12	0	0	வி. பி.
20 நாள் 40 வேளை 8 பலம் டப்பி 1-க்கு ரூ.	6	0	0	
12 நாள் 24 வேளை 5 பலம் டப்பி 1-க்கு ரூ.	3	8	0	செலவு
6 நாள் 12 வேளை 2 பலம் டப்பி 1-க்கு ரூ.	1	4	0	
3 நாள் 6 வேளை 1 பலம் டப்பி 1-க்கு ரூ.	0	10	0	வேறு.

நெட்டால், பினாங்கு, சிங்கப்பூர், கின்னான், குவாலாலம்பூர், பாரா முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூ. 2—8—0 யும் சேர்த்து முன் பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கீகரிக்கப்பட மாட்டாது. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூ. 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். பல ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. ஆர்டர் செய்யும்போது இந்த பேப்பரில் கண்டதாக எழுதவும்.

விலாசம்:— M. A. மரைக்காயன் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை, பறங்கிப்பேட்டை, (S. A)

[illegible] எமது திட்டச்சேரி சோல் ஏஜண்டு:—
A. M. O. முகமது யூசுபு பிரதர்ஸ்,
ஜவுளி அண்டு ஜெனரல் மெர்ச்சண்ட், கடைவீதி,
திட்டச்சேரி P. O., தஞ்சாவூர் ஜில்லா.

௨08535
சென்னை-600 038